Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 56 | சர்வதேச மின் செய்தித்தாள் | 01 செப்டம்பர் 2023




**சிறீலங்கா படைத்தரப்பால் கொக்கட்டிச்சோலையில் படுகொலை செய்யப்பட்ட 185 அப்பாவிப் பொதுமக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி**

## தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்





























# விளம்பரத்துக்கு அழையுங்கள்:

# 437.345.4203




## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**விடுதலை என்பது ஒரு தேசியக் கடமை. இதில் ஒவ்வொருவருக்கும் பங்களிப்பு உண்டு. ஒரு தேசிய நெருக்கடியால் பிறக்கும் துன்பத்தை முழுத் தேசிய இனமுமே பகிர்ந்துகொள்ள வேண்டும். இந்தத் தேசியச் சுமையை சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள ஏழைகள் மட்டும் தாங்கிக்கொள்ள அனுமதிப்பது, நாம் எமது தேசத்திற்குப் புரியும் துரோகம் என்றே சொல்லவேண்டும்.**






# சங்கத்தமிழ்


## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

437 345 4203

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.ca


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# உன் மரணம் எம்மில் புது மூச்சாய்...! லெப். இமெல்டா!




இமெல்டா!

***ஓ என் இனிய தோழி! தமிழீழ விடுதலைப் போரில் உதிர்ந்து விட்ட புனித மலர்களில் ஒன்றாக நீயும் இணைந்து விட்டாயா? மலரவிருக்கும் தமிழீழம் எப்படியெல்லாம் இருக்கவேண்டுமெனக் கனவு கண்டாய். என் ஆசையெல்லாம் நிறைவேற முன்னரே என் கனவுகளிற்குக் கரும்புள்ளி வைத்து உன்னை எம்மிடமிருந்து பிரித்த அந்தப் பாதகர்கள் யார்?***

எமது இனத்தின் எதிரிகளான இனவெறி பிடித்த சிங்களக் கைக்கூலி இராணுவத்தினரா? அப்படியானால் கூட எமது மனம் கொஞ்சம் ஆறுதல் அடைந்திருக்கும் - களத்தில் எதிரிகளுடன் மோதி நீ கொண்ட இலட்சியத்திற்காக உன்னைத் தியாகம் செய்திருக்கின்றாய் என்று. ஆனால் எமது இரட்சகர்கள் என்ற போர்வையில் எமது மண்ணில் காலடி வைத்தவர்களின் தூரோகக் கரங்களினால் உன் கதை முடிக்கப்பட்டுவிட்டது என்பதை எண்ணும் போது என்னால் வேதனையைத் தாங்க முடியவில்லை. உனது இறப்பில் உலகின் நான்காவது பெரிய இராணுவம் என்னதான் திருப்தியைக் கண்டதோ?

என்றும் எமது போராட்டத்திற்காகக் குரல் கொடுக்கும் தமிழகத்தைக் கொண்டது இந்தியா - உலகின் நான்காவது பெரிய இராணுவப் படை கொண்டது இந்தியா - கண்ணியமான வீரர்களைக் கொண்டது இந்தியா என்றெல்லாம் நாம் அறிந்திருந்தோம். கடைசி விஷயம் எமது தவறான கணிப்பீடு என்பதைக்காலம் இப்போது எமக்கு உணர்த்தியிருக்கிறது.

உன் மரணம் ஒன்றை மட்டும் எமக்குப் புலப்படுத்துகின்றது "நேர்மையான எதிரியை விட வஞ்சகமான நண்பர்கள் ஆபத்தானவர்கள்."

உன் நினைவுகளை என்னால் மறக்க முடியுமா? கண்ணீரை கட்டுப்படுத்த முடியவில்லை. ஒரு போராளி இறுகிய மனமுடையவளாக இருக்க வேண்டும். அப்போது தான் எல்லாவற்றையும் தாங்கிக் கொள்ளும் சக்தியை அவள் பெற்றிருப்பாள் என்று சிலர் நம்புகின்றார்கள். உண்மையில் மென்மையான இதயத்தைக் கொண்டவர்கள்தான் போராளிகள் எனப்படுவோர். தனது இனத்திற்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டும் அதைச் சகித்துக்கொள்ளும் கடினமான மனது இல்லாதவர்களே போராளிகளாகிறார்கள். மென்மையான மனதைக் கொண்டவர்கள் என்பதாலேயே நாம் எல்லாம் இணைந்து கொண்டோம்.

"பயிற்சியை முடித்துக் கொண்டு செல்லும் எம்மை சமூகம் சாதாரண பெண்களாகப் பார்ப்பது கிடையாது. இப்படியான இழிநிலையைப் போக்கி எமது இலட்சியப் போராட்டத்தின் பங்காளிகளாகத் தமிழீழப் பெண்கள் அனைவரையுமே மாற்றவேண்டும். இது படிப்படியாகத்தான் சாத்தியமாகும். ஆனால் எப்படியும் இதை நடைமுறையில் நடத்திக்காட்ட வேண்டும்" என்றெல்லாம் அடிக்கடி கூறுவாயே. அதையெல்லாம் எண்ணிப் பார்க்கிறேன். உன்கனவுகள் நிஜமாகி வருகையில் நீ...



அகிம்சைப் போராட்டங்கள் மூலம் விடுதலை அடைந்து இன்று மகத்துவத்தை மறந்திருக்கும் பாரத நாட்டிற்கே அகிம்சைப் போராட்டத்தின் வலிமையை உணர்த்தியிருக்கிறோம். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வலிமையை உணர்த்தியிருக்கிறோம். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நிகழ்ந்த அத்தனை ஊர்வலங்களிலும் மாறியல் போராட்டங்களிலும் தமிழீழப் பெண்களின் எழுச்சிமிகு பங்களிப்பைக் கண்டு உலகமே வியக்கிறது. உலகத்திலேயே தண்ணீர் கூட குடிக்காமல் உண்ணா நோன்பிருந்து தியாகியான முதல் பெண் பூபதி கணபதிப்பிள்ளை என்ற தமிழீழப் போராளிதான். அதே போல் வீரத்திலும் கூட (ஆயுதப் போராட்டத்தில்) நாம் யாருக்கும் சளைத்தவர்கள் இல்லை என்பதை வரலாறாக்கி விட்டோம்.

முறத்தால் புலியை விரட்டியவள் தமிழ்ப் பெண் என்று புறநானூறு கூறுகிறது. அது நடந்ததோ என்னவோ ஆனால் புலியாகவே மாறித்தம்மை எதிர்ப்பவர்களை புறமுதுகுகாட்டி ஓடவைத்தவர்கள் தமிழீழப் பெண்கள் என்று புதிய காவியம் படைக்கப்படுகின்றது.

உன்னை நினைக்கையில் எமது நினைவுக்கு வருவது உனது சிரிப்புத்தான். நீ சிரிக்கத் தொடங்கினால் தொடர்ச்சியாகவே சிரிப்பாய். எளிதில் நிறுத்த மாட்டாய். இதற்காகவே "ஜெனரேற்றர்" என்று அழைப்போம் உன்னை. அந்த "ஜெனரேற்றர்" சிரிப்பை பார்க்கவோ கேட்கவோ முடியாத இடத்திற்கு போய் விட்டாயே நீ.

பள்ளிச் சீருடையுடன் வீட்டிலிருந்து புறப்பட்ட உனது வரலாறு இராணுவச் சீருடையுடன் முடிந்த விட்டது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்காளியாக வேண்டும் என்ற ஆவலுடன் யாழ்ப்பாணத்தின் குருநகர்ப் பகுதியில் மத்தியதர குடும்பத்திலிருந்து வந்து இயக்கத்தில் இணைந்து கொண்டவள் நீ. நீயும் நானும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒருவர் வீட்டில் தான் முதன் முதலில் அறிமுகமானோம். எங்களைப் போலவே வேறு சில பெண்களும் அங்கே வந்து எம்முடன் இணைந்தனர். விரைவில் பயிற்சிக்காகக் கூட்டிச் செல்லப்படுவோம் என்ற செய்தி கிட்டியது. இது எமது மகிழ்ச்சியை அதிகரித்தது.

"பயிற்சி பெற்றுத் தமிழீழத்தில் ஆயுதம் தாங்கிப் போராட்டப் புறப்பட்ட முதல் பெண் போராளிகளாகத் திகழ்வோம் - நாம் தமிழீழத்தை மீட்டெடுத்து எமது வருங்காலச் சந்ததியினர் தலை நிமிர்ந்து வாழ வழி சமைப்போம்." இப்படியான இனிமையான கனவுகள் உடன் பயிற்சி முகாம் நோக்கிப் புறப்பட்டோம். தமிழீழ விடுதலைக்கான இயக்கமென்று எண்ணிப் பெருமைப்பட்டு நாம் இணைந்த இயக்கத்தின் சகோதரிகள் விடுதலைப் பாதையிலிருந்து விலகியிருக்கின்றார்கள். எமது எதிரியைத் தவறாக இனம் காட்டுகிறார்கள் என்ற உண்மை முகாம்களிற்கு வந்து பின்பு தான் எமக்குப் புரிந்தது. ஆம்! நாம் இணைந்து கொண்டது விடுதலைப்புலிகள் அமைப்பில் அல்ல. நமக்குத் தெரியாமலே சமூக விரோதக்கும்பல் ஒன்றில் சேர்ந்து விட்டோம். பயிற்சி முகாமில் தமது எதிரிகள் விடுதலைப் புலிகள் என்றே எமக்குப் போதித்தார்கள். தமிழீழ விடுதலையைத் தவிர ஏனைய விடயங்களில் தான் கூடிய அக்கறை செலுத்துகின்றார்கள் என்ற உண்மை எமக்கு தெரியவந்ததும் எமக்கு அதிர்ச்சியாகவே இருந்தது. ஆனால் நாங்கள் தமிழீப் போராட்டத்தின் பங்காளிகளாக வேண்டுமாயின் ஒரு உண்மையான, தெளிவான தலைமையின் கீழ் தான் அணிதிரள வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தோம். அதனால் அந்த அமைப்பிலிருந்து விலகி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்பு கொண்டோம். எமது நிலையை விளக்கினோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவருடன் நாம் சந்தித்து உரையாடச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஏற்கனவே இடம் பெற்ற போராட்ட அணுகுமுறைகள் சம்பந்தமாகவும் விடுதலைப் புலிகள் அமைப்பு சம்பந்தமாகவும் எமக்கிருந்த சில சந்தேகங்

களைக் கேட்டோம். அவரும் விளக்கமாகப் பதிலளித்தார். “இந்தப் போராட்டத்தில் நீங்கள் கஸ்டத்தையும் பட்டினியையும் தான் சந்திக்க வேண்டியிருக்கும். பயிற்சிகளோ மிகக் கடுமையாக இருக்கும். ஆனால் இவையெல்லாம் எமது எதிர்காலச் சந்ததியினரின் நலனிற்காகவே என்பதை நாம்உறுதியாக நம்பினால் இவை எல்லாம் ஓர் அற்ப விசயமாகவே இருக்கும். எதற்கும் சிந்தித்து முடிவெடுங்கள். எங்களைப் பொறுத்த வரை விடுதலைக்காகப் புறப்பட்ட எந்தப் போராளியையும் நடுத்தெருவில் விட நாம் தயாரில்லை” என்று கூறினார். அத்துடன் உலகத்தின் பல்வேறு பாகங்களிலும் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்களில் பெண்கள் சாதித்த சாதனைகள் என்னென்னவென்பதையும் எடுத்துவரைந்தார்.

தலைவருடனான சந்திப்பின்பின் நாம் புது உற்சாகம் மிகுந்தவர்களாகக் காணப்பட்டோம். “நாளை கூறும் முடியும் இதுவாகத்தானிருக்கும். அதை இன்றே கூறுகிறோம். எந்தக் கஸ்டத்தையும் சந்திக்க நாம் தயாராகவே இருக்கின்றோம்” என்று உறுதியாகக் கூறினோம்.

இதை அடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாமில் தான் எத்தனை விதமான அனுபவங்கள். அந்த இனிமையான நாட்கள் எமது நினைவில் என்றும் பசுமையானவையே! பயிற்சியின்போது இராணுவ ரீதியாக ஆண்களிற்கு நாங்கள் எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபித்தோம். முகாமில் குறும்புச் செய்கைகள் மூலம் நீ இருக்கும் இடத்தையே கலகலப்பாக்கி விடுவாய். முகாமில் எம்மிடையே சின்னச் சின்னப் பிரச்சினைகள் வரும்போது அங்கே சமரசம் செய்வதற்கு நீ தோன்றி வீடுவாய். எமது முகாமிற்குத் தேவையான சாப்பாடு மற்றும் பொருட்கள் எமது முகாம் அமைந்திருந்த ஒரு குறிப்பிட்ட இடத்தை வாகனத்தின் மூலம் வந்தடையும். அங்கிருந்து அவற்றை நாமே சுமந்து செல்லவேண்டும். அப்போது எல்லாம் எமது வேலையில் கடினம் தெரியாமலிருப்பதற்காகவே நீ “ஜோக்” அடித்துக்கொண்டே வருவாய். உனது கலகலப்பான போக்கினால் எமது வேலை கடினமானதாகத் தோன்றாது.





ஒரு முறை எம்மால் வெட்டப்பட்ட சுமார் 20 அடி ஆழமுள்ள கிடங்குக்குக் கீழே இருந்து வெடிவைத்துத் தகர்க்கப்பட்ட கல்லொன்றை வெளியே எடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இது மிகவும் பெரியது. பாரமானது. “இதைத்தூக்க நான் எனது பையன்களை அனுப்புகிறேன்.” என பொன்னம்மான் சொல்லவே “இது எம்மால் முடியும்” என் நீ பொன்னம்மானிடம் சொன்னாய். “இல்லை முடியாது. இதற்குப் பையன்கள் தான் சரி” என பொன்னம்மான் கூறியபோது அவர் எம்மைச் சோதிக்கத்தான் கூறுகிறார் என்று தெரிந்து இதை ஒரு சவாலாகவே ஏற்று நாங்கள் அதை வெளியே கட்டி இழுத்தெடுத்தோம். அப்போது எமக்கு ஏற்பட்ட பூரிப்பு!

ஒரு குழந்தையைப் போல் பொன்னம்மானின் முன்னால் “எப்படியம்மான் எங்கட வேலை” என்று குதூகலித்து ஆர்ப்பரித்தாயே அது இன்றும் என் நினைவில் உள்ளது.

முகாமில் ஒரு கடினமான உழைப்பாளியாய், ஒரு கலகலப்பான போராளியாய், ஒரு சிறந்த நடிகையாய், அருமையான சமையல்காரியாய், குறிதவறாது துப்பாக்கி சுடுவதில் தேர்ச்சி பெற்றவளாய் - இப்படிப் பல்வேறு வகையிலும் நீ முதன்மையானவளாகத் திகழ்ந்தாய். R.P.G (ராக்கட் லோஞ்சர்) பிரயோகிப்பதற்கு நீயும் நானுமே தெரிவு செய்யப்பட்டோம். இப்படியாக எமது பயிற்சிக்காலம் கழிந்தது. எமது நட்பும் உறுதியாக வளர்ந்தது. உனக்கு முன்னரே பயிற்சியை முடித்துக்கொண்டு களத்தில் நின்ற நான் மகிழ்ச்சியுடன் உன்னை வரவேற்றேன். ஆம்! இமெல்டா வந்து விட்டாள். எமது முகாம் இனிக்கலகலப்பாகி விடும் என்ற மகிழ்ச்சியே எல்லோருக்கும்.

ஆனால் நீயும் நானும் பிரியவேண்டிய கட்டம் வந்தது. ஏனெனினல் துரதிருஸ்டவசமாக நான் ஆஸ்பத்திரியில் படுத்த படுக்கையாய் இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

ஆனாலும் மன்னாரிலே படையெடுத்து வந்த சிறீலங்கா இராணுவத்தினர் பலரை பலியெடுத்த மாபெரும் தாக்குதலில் உனது திறமையைக் கேள்வியுற்று மகிழ்ச்சியுற்றேன்.

நான் செய்ய வேண்டிய வேலையையும் சேர்த்து இரட்டிப்புத் திறமையைக் காட்டி எதிரிகளைக் கலங்கவைத்தாய். உனது குழுவினரின் தாக்குதலிற்கு ஈடுசெய்ய முடியாத சிங்கள இராணுவம் குண்டு வீச்சு விமானங்கள் மூலம் பாரிய குண்டுகளை வீசிப் பலத்த அழிவை உண்டாக்கி தனது கையாலாகாத் தனத்தைப் புலப்படுத்தியது.

அதன் பின் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் இருந்த என்னை நீ வந்து சந்தித்தாய். “வசந்தி! நீ விரைவில் குணமடைந்து விடுவாய். ராக்கட் லோஞ்சருடன் என் வசந்தியைக் காணும் நாள் கிட்டடியில் தான் உள்ளது. அப்போது தான் எனக்கும் உனக்கும் முறையான போட்டியுள்ளது.” என்றெல்லாம் எனக்கு நம்பிக்கையூட்டுவாய். எங்கோ பிறந்தோம். எங்கோ வளர்ந்தோம். தமிழீழப் போராட்டத்தின் பெயரால் இணைந்தோம். ஆனால் இன்று ஒரே குடும்பம் போன்று அனைவரும் என் மீது பாசமழை பொழிகிறீர்களே என்று திக்குமுக்காடினேன்.

வடமராட்சியில் சிறீலங்கா இராணுவத்துடன் நிகழ்ந்த தாக்குதலிலும் எனது திறமையைப் பற்றி அனைவரும் என்னிடம் வந்து



கூறுவார்கள். புதிதாகப் பயிற்சியாளர்களில் ஒருவராக நீயும் திகழ்கிறாய் என்றும் செய்தி கிட்டியது.

வந்தது ஒப்பந்தம், யாருக்காக இந்த ஒப்பந்தம்? இது எமது நலனிற்காகச் செய்யப்பட்டதல்ல என்பது தெளிவாகவே புரிந்தது எமக்கு. ஆயினும் இந்திய மக்கள் மீது நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையையும், அன்பையும் வெளிப்படுத்தும் முகமாக எமது போராளிகளின் மகத்தான தியாகங்களினாலும், இரத்தத்தாலும் பெறப்பட்ட ஆயுதங்களை இந்தியப் படையிடம் ஒப்படைக்க வேண்டியேற்பட்டது.

சிங்கள இனவாதப் பூதம் இவ்வொப்பந்தத்தை விழுங்கும் காலம் வெகுதூரத்திலில்லை என்று தலைவர் தீர்க்க தரிசனத்துடன் கூறினார். காலமும் இதை நிதர்சனமாக்கியது. இந்தியப் படையின் துரோகத்தனமும் அம்பலப்படுத்தப்பட்டது. நாம் மீண்டும் ஆயுதங்களை ஏ்நத நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

**ஒரு தேசியக் கொடியைப் பறக்க விடுவதற்காக ஆயிரக் கணக்கான கறுப்புக்கொடிகளைப் பறக்க விடத் தயாரானோம்.**

இந்தியப் படையின் துரோகத்தனத்திற்கு எதிராக நீ ஒவ்வொரு தாக்குதலிலும் முன்னணியில் நின்று போராடினாய் எனக்கேள்விப்பட்டேன். நாம் பலவீனப்பட்டு விட்டோம் என்று இந்திய அரசு தப்புக்கணக்குப் போடுகிறது. எமது பலமே மக்கள் சக்திதான். தமிழீழத்தை மீட்டெடுக்கும் வரை சந்ததி சந்ததியாக நாம் போராடியே தீருவோம் என்பதைக் காலம் உணர்த்தும் என்றே எண்ணுகிறேன்.

ஆனாலும் என்னுயிர்த் தோழி! வன்னியில் நடந்த முற்றுகை ஒன்றில் உன்னை நாம் பறிகொடுத்துவிட்டோம் என்ற வரக்கூடாத அந்தச் செய்தி வந்தே விட்டது. நான் அதிர்ந்து விட்டேன். இனி அந்த “ஜெனரேற்றர்” சிரிப்பைக் கேட்கவே முடியாது. உனது குறும்புகளைக் காண முடியாது. ஆனால் உனது துப்பாக்கியின் ஓசை மட்டும் நிரந்தரமாக நின்று விடவில்லை. அது வேறொருவர் மூலம் முழுங்கிக்கொண்டே உள்ளது. அதிலிருந்து முழங்கும் ஒவ்வொரு வேட்டும் “மலரும் தமிழீழம்! மலரும் தமிழீழம்!” என்றே ஒலிக்கிறது.

உனது ஆத்மா எனக்குள் ஒரு புதிய உத்வேகத்தைக் கொடுக்கிறது. நான் விரைவாகக் கொடுக்கிறது. நான் விரைவாகக் குணமாகி வருவதை என்னால் உணர முடிகிறது. இமெல்டா! நீ வதைக்கப்பட்டு விட்டாய். இதோ! களத்தை நோக்கி விரைவில் அவர்களில் ஒருத்தியாய் நானும். அதுவரை காத்திருப்பாய் என் தோழி!

-வசந்தி

எரிமலை — பங்குனி 1996




# செஞ்சோலைப் படுகொலையின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல்!

ஆகத்து 15, 2023




14.08.2023 மாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாணம் முனியப்பர் கோவிலுக்கு முன்பாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினாரால் நினைவுகூறப்பட்டுள்ளது.

சிறீலங்கா வான்படைத் தாக்குதலில் 54 பாடசாலை மாணவிகள் படுகொலை செய்யப்பட்டநாள்.

முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் அமைந்திருந்த செஞ்சோலை சிறுவர் இல்ல வளாகத்தில் 2006.08.14 அன்று தலைமைத்துவ பயிற்சிக்காக வருகை தந்திருந்த பாடசாலை மாணவிகளை இலக்கு வைத்து சிறீலங்கா வான்டைக் கிபிர் விமானம் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலில் பாடசாலை மாணவிகள். 53 பேரும் பணி யாளர்கள். 7 பேரும். உள்ளடங்கலாக 61பேர் படுகொலை செய்யப்பட்டனர்.






# மன்னாரில் ஹெரோயினுடன் சிறீலங்கா பொலிஸ் உத்தியோகஸ்தர் கைது!

ஆகத்து 17, 2023




ஹட்டனிலுள்ள பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் மன்னாரைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றைய தினம் மன்னாரில் வைத்து புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 28 வயதானவர் என்றும் அவரிடம் இருந்து 100 மில்லிகிராம் போதைப் பொருள் கைப்பற் றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி தோண்ட நிதியில்லை!

ஆகத்து 17 2023



சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ள கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணிக்கான நிதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு இதுவரை கிடைக்கவில்லை என இன்று நீதிமன்றத்தில் முறையிடப்பட்டுள்ளது.

முன்னதாக புதைகுழி அகழ்விற்கான நிதியை வழங்குவதாக இலங்கை ஜனாதிபதி அலுவலகம் அறிவித்திருந்தது.

இந்நிலையில் கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி வழக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் இன்று எடுத்துக்கொள்ளப் பட்ட போது ஏற்கனவே எதிர்பார்த்தது போன்று 21ஆம் திகதி மனித புதைகுழி அகழ்வு பணி ஆரம்பிக்க இருந்த நிலையில் முல்லைத்தீவு கச்சேரிக்கு அதற்கான நிதி இதுவரை கிடைக்க வில்லையென தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆதனால் உடனடியாக அகழ்வு பணியை மேற்கொள்ளமுடி யாத நிலை இருப்பதாக நீதிமன்றத்தில் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

ஆதனை தொடர்ந்த வழக்கு ஒகஸ்ட் மாதம் 31 திகதி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இன்று நீதிமன்றத்தில் பிரசன்னமாகாமல் இருந்த முல்லைதீவு மாவட்ட செயலக அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்களை சார்ந்த அதிகாரிகளையும் அடுத்த தவணை நீதிமன்றில் கட்டாயம் பிரசன்னமாகியிருக்க வேண்டும் எனவும் கட்டளையிடப்பட்டுள்ளது.

இறுதி யுத்தத்தில் சரணடைந்த முன்னாள் போராளிகள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட பாரிய மனித புதைகுழி யாக இருக்கலாமென்ற சந்தேகத்தின் மத்தியில் அரசு நிதி முடக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது.

.

# குருந்தூர்மலை அய்யனார் கோவிலில் தமிழர்களின் பொங்கல் வழிபாட்டை தடுக்க சிங்கள பௌத்தர்கள் குருந்தூர்மலை நோக்கி வாருங்கள் என முல்லைத்தீவு வெலிஓயா பிரதேசத்தில் உள்ள சிங்கள கிராமங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு 'குருந்தி விகாரை' முகநூல் பக்கத்தில் பகிரப்பட்டுள்ளது – 17.08.2023










# குருந்தூர்மலையில் தடைகள் அச்சுறுத்தல்களை தாண்டி ஆதிசிவன் ஐயனாருக்கு பொங்கல் விழா!

ஆகத்து 18, 2023

குருந்தூர்மலையில் அமைதியாக பொங்கல் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த பகுதிக்குள் 'குருந்தி விகாரை' பௌத்த பிக்கு நுழைந்து தமிழர்களின் பொங்கல் வழிபாட்டை சீர்குலைக்க முயன்றமையால் இன்று பதற்ற நிலை தோன்றியிருந்தது.

தொல்பொருள் திணைக்களத்தின் கடுமையான கட்டுப்பாடுகளின் மத்தியில் குருந்தூர் மலையில் இன்று (18) பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்நிலையில் முல்லைத்தீவு - குருந்தூர்மலையில் ஐநூறுக்கும் மேற்பட்ட சிங்கள மக்கள் மற்றும் பௌத்த பிக்குகள் இணைந்து அங்கு சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரையில் வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய பொங்கல் நிகழ்வு திட்டமிடப்பட்டிருந்த நிலையில் சிங்கள மக்கள் வருவிக்கப்பட்டு






வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இன்றைய பொங்கல் நிகழ்வுகளில் குழப்பங்கள் ஏற்படலாம் என தெரிவித்து நூற்றுக்கணக்கான காவல்துறையினர், விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்பு கடமைகளுக்காக அழைக்கப்பட்டிருந்தனர்.

புராதன சின்னங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அப்பிரதேச மக்கள் தங்களது மத ரீதியான பூஜை வழிபாடுகளை மேற்கொள்ளலாம். ஒருவரது மத வழிபாடுகளுக்கு மற்றைய தரப்பினர் எதிர்ப்பு தெரிவிக்கின்றார்கள் என்பதற்காக ஒருவரது மதவழிபாடுகளை தடுக்க தடை கட்டளை வழங்க முடியாது என காவல்துறையினரின் தடையுத்தரவு கோரிக்கையை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்று நிராகரித்திருந்த நிலையில் பதட்டத்தின் மத்தியில் இன்றைய இந்துக்களது பொங்கல் நடந்து முடிந்துள்ளது.

# குருந்தூர் மலையை நோக்கி படையெடுக்கும் பௌத்த தேரர்களும் சிங்கள மக்களும்!

ஆகத்து 18, 2023





குருந்தூர் மலையில் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை பொங்கல் விழா நடைபெறவுள்ள நிலையில் தென்பகுதியிலிருந்து 100க்கும் மேற்பட்ட சிங்கள மக்கள் மற்றும் தேரர்கள் ஐந்து பேருந்துகளில் குருந்தூர் மலையில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட விகாரையில் வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் அப்பகுதியில் குழப்பங்கள் ஏற்படலாம் என்ற அடிப்படையில் மூன்று பேருந்துகள் மற்றும் இரண்டு ஹன்ரர்களில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸார் மற்றும் அதிரடிப்படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதே வேளையிலே தமிழ் மக்கள் பொங்கல் நிகழ்வுக்காக வருகை தந்துள்ள நிலையில் அப்பகுதியில் பெரும் பரபரப்பான சூழல் நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



இதேவேலை புராதன சின்னங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அப்பிரதேச மக்கள் தங்களது மத ரீதியான பூஜை வழிபாடுகளை மேற்கொள்ளலாம் எனவும் ஒருவரது மத வழி பாடுகளுக்கு மற்றைய தரப்பினர் எதிர்ப்பு தெரிவிக்கின்றார்கள் என்பதற்காக ஒருவரது மதவழிபாடுகளை தடுக்க தடை கட்டளை வழங்க முடியாது என பொலிஸாரின் தடையுத்தரவு கோரிக்கையை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்று நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் இருந்து 50 வைத்தியர்கள், 20 தாதியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்!

## வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் திரு. த. சத்தியமூர்த்தி

ஆகத்து 19, 2023

வட மாகாணத்தில் ஒரு வருடத்தில் 50 வைத்தியர்களும் 20 தாதியர்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக வட மாகாண சுகாதார பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

வவுனியா வைத்தியசாலையில் இன்றைய தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தில் ஒரு வருட காலப்பகுதியில் 50 இற்கும் அதிகமான வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். இவர்களில் வெளிநாட்டு கல்விக்காக சென்று வராதவர்களும் உள்ளனர். அத்துடன் 20 தாதியர்களும் வெளியேறியிருக்கின்றனர்.

வைத்தியர்களும், தாதியர்களும் வெளியேறுவது எமக்க ஒரு சவாலான விடயம். அத்துடன் அண்மைக்காலத்தில் கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இங்கு ஆரம்பிக்கப்பட வேண்டிய தாதிய பயிற்சிகள் ஆரம்பிக்கப் படவில்லை.

இவ்வருடம் தாதிய கல்லூரியில் படித்து வெளியேறுபவர்கள் இருந்தாலும் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு தாதிய பயிற்சிகள் இடம்பெறாத நிலை காணப்படும். ஆகவே இந்த பகுதிக்கு புதிய தாதிகள் வரமாட்டார்கள். இதனால் நாம் சிக்கலான சவாலை எதிர்கொள்வோம்.

அத்துடன் வெளிநாடுகளில் தாதிகளை வரவேற்பதனால் அவர்கள் வேலையை முடிவுறுத்தி வெளியேறலாம். எனவே



எதிர்வரும் காலம் சவாலை எதிர்கொள்ளும் காலமாக அமையும் என்றார்.

# யாழில் பொலிசாரின் நீர் தாங்கி வாகனத்துடன் விபத்து; கணவன் உயிரிழப்பு, மனைவி படுகாயம்!

ஆகத்து 19, 2023

யாழ்ப்பாணத்தில் பொலிசாரின் நீர் தாங்கி வாகனமும் (பவுசர்) மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்கு உள்ளானதில் இளம் குடும்பஸ்தர் சம்பவ இடத்திலையே உயிரிழந்த நிலையில், அவரது மனைவி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில் , "யாழ்ப்பாணம் வரவேற்கிறது" எனும் வளைவு பகுதியில் இன்றைய தினம்





சனிக்கிழமை காலை குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் கொக்குவில் கிழக்கை சேர்ந்த புவனேஸ்வரன் மனோஜ் (வயது 31) எனும் நபரே உயிரிழந்துள்ளார். அவரது மனைவியான மன்னாரை சேர்ந்த முகுந்தினி (வயது 26) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# குருந்தூர் விகாராதிபதிக்கு எதிராக முறைப்பாடு!

ஆகத்து 19, 2023

குருந்தூர் மலையில் ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கல் நிகழ்வை குழப்பிய பௌத்த பிக்கு மீது நடவடிக்கையெடுக்குமாறு நேற்றைய நாள் வெள்ளிக்கிழமை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் குறித்த விடயம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாட்டில், வழிபாட்டின் போது ஆதிசிவன் ஐயனார் ஆலயத்திற்குள் அத்து மீறி நுழைந்து, வன்முறையில் ஈடுபட்ட குருந்தூர் மலை விகாரையின் விகாராதிபதி என தன்னை கூறிக்கொள்ளும் கல்கமுவ சாந்தபோதி தேரருக்கு எதிராக நடவடிக்கையெடுக்குமாறு கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, மத வழிபாட்டு சுதந்திரத்தை மறுத்து பொங்கல் வழிபாட்டில் பொங்கல் நேர்த்திக் கடனை செய்யவிடாது தடுத்த தொல்லியல் அதிகாரிகளுக்கு எதிராகவும் நடவடிக்கையெடுக்குமாறு குறித்த முறைப்பாட்டில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# முல்லைத்தீவு – தண்ணிமுறிப்பு குருந்தூர்மலையில் 18.08.2023 இன்று பொங்கல் வழிபாடு சிறப்பாக இடம்பெற்றது!


















பொங்கல் விழா
18.08.2023
குருந்தூர்
ஆதிசிவன் ஐயனார்

# சவால்களைக் கடந்து குருந்தூரில் பொங்கல் தொடர்ந்தும் பொங்கல் வழிபாடுகள் முன்னெடுக்கப்படும்!

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

ஆகத்து 18, 2023

பொலிசார் மற்றும் சாந்தபோதி தேரர் ஆகியோருடைய குழப்ப முயற்சிகளைக் கடந்து குருந்தூர்மலையில் சிறப்பாக பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டதாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை தொடர்ந்தும் இந்தப் பொங்கல் வழிபாடுகள் குருந்தூர்மலையில் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

குருந்தூர்மலையில் இடம்பெற்ற பொங்கல் வழிபாடுகளின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

குறிப்பாக இந்த பொங்கல் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றாலும் சில குழப்ப முயற்சிகளும் இங்கு முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அந்தவகையில் பொங்கல் வழிபாடுகளுக்குரிய பொங்கல் பொருட்களை ஏற்றிவந்த உழவியந்திரம் பொலிசாரால் வழிமறிக்கப்பட்டதோடு குருந்தூர் மலைப் பகுதிக்குள் அனுமதிக்கப்படாமல் தடுக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் உடனடியாக நாம் பொலீசார் வழிமறித்த இடத்திற்குச் சென்று எமது தலையீட்டுடன் அந்த பொங்கல் பொருட்களை எடுத்துவந்து இங்கே பொங்கல் வழிபாடுகளை மேற்கொண்டோம்.

அவ்வாறு பொங்கல் வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தபோது சுற்றியிருந்த பொலிசாரின் பாதுகாப்புக்களையும் மீறி எமது வழிபாட்டுப் பகுதிக்குள் நுழைந்த கல்கமுவ சாந்தபோதி தேரர் எமது வழிபாடுகளைக் குழப்ப முயன்றார். எனினும் எமது மக்கள் அவரை அங்கிருந்து வெளியேறுமோறு கோசமிட்டனர்.

அதனைத் தொடர்ந்து பொலிசாருடைய தலையீட்டுடன் அவர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

அதனைத் தொடர்ந்து நீதிமன்றக் கட்டளைக்கு அமைவாகவும், தொல்லியல் திணைக்களத்தின் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டு மிகச் சிறப்பாக இந்த பொங்கல் வழிபாடு மேற்கொள்ளப்பட்டது.

இந்த பொங்கல் வழிபாடுகள் இனியும் தொடர்ந்து குருந்தூர் மலையில் இடம்பெறும். அதற்குரிய தினங்களை நாம் தொடர்ந்து அறிவிப்போம், அந்த தினங்களில் இங்கு பொங்கல் வழிபாடுகள் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.



# மலையகத் தமிழர்களின் வாழ்வும் வலி நிறைந்த வாழ்வே; உரிய தீர்வுகள் வழங்கப்படவேண்டும்!

ஆகத்து 19, 2023

மலையகத் தமிழர்களின் வாழ்வும், வடகிழக்குத் தமிழ் மக்களின் வாழ்க்கையைப்போன்று வலி நிறைந்த வாழ்க்கை என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

எனவே மலையகத் தமிழர்களுக்கும், வடகிழக்கு வாழ் தமிழர்களுக்கும் உரிய தீர்வுகள் வழங்கப்படவேண்டுமெனவும் ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற "மலையகத் தமிழ் மக்களுடைய 200வருட வரலாறு" எனும் வரலாற்று நூல் அறிமுக விழாவில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மலையகத் தமிழ் மக்கள் இந்தியாவிலிருந்து மார்க்கமாக அழைத்துவரப்பட்டு தலைமன்னாரில் தரையிறக்கப்பட்டதாகவும், மலையகப் பகுதிகளுக்கு கால்நடையாக அழைத்துச்செல்லப்பட்டதாக நாம் வரலாறுகளிலிருந்து அறிகின்றோம்.

அந்தக் காலத்தில் நிறைவான வீதிகளோ, நிறைவான வைத்திய சேவைகளோ இல்லாத காரணத்தினால், இவ்வாறு அழைத்துவரப்பட்ட பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களில், இரண்டரை இலட்சம் பேர்வரையில் மரணித்ததாகவும் மலையகமக்களின் வரலாறுகள் கூறுகின்றன.

அந்தவகையில் இவர்களுடைய வரலாறு வலி நிறைந்த வரலாறாகும்.

இவ்வாறு இவர்கள் இங்கு வந்து 200 கடந்துவிட்ட நிலையில் இந்த மலையக மக்கள் இன்றளவும் பல இடங்களில்தரக்குறைவாக நடாத்தப்படுகிற, தரக்குறைவாக அழைக்கப்படுகிற மிக மோசமான சம்பவங்களை நாம் அவதானிக்கின்றோம். அவை மிகவும் கண்டிக்கப்படவேண்டிய விடயங்களாகும்.



அதேவேளை கடந்த 1964ஆம் ஆண்டு ஶ்ரீமா, சாஸ்திரி ஒப்பந்தத்தில் எமது மலையகமக்கள் நாடுகடத்தப்பட்டனர்.

அவ்வாறு நாடுகடத்தப்பட்ட எமது மலையக உறவுகள் தற்போது இங்கு இருந்திருந்தால் தமிழ் சமூகம் மிகப்பெரியதொரு அந்தஸ்தை அடைந்திருக்கும்.

அதேவேளை இவ்வாறு நாடுகடத்தப்பட்ட மக்களுடன் பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசனின் தந்தையார் வி.பி. கணேசன் உள்ளிட்டவர்களும் நாடுகடத்தப்பட்டிருந்தால் இன்று மனோ கணேசன் போன்ற திறமையானவர்களை நாம் பெற்றிருக்க முடியாது.

அதேபோல் தற்போது இங்கிருந்து தமிழ் நாட்டிற்குச் சென்று சிறப்பான தனது குரல் வளத்தினால் அசானி என்ற மலையகச் சிறுமி பாடல்களைப் பாடி உலகையே திரும்பிப் பார்க்கவைத்திருக்கின்றார்.

அவர்களுடைய குடும்பங்களும் இங்கிருந்து நாடுகடத்தப்பட்டிருந்தால் இவ்வாறானதொரு சிறந்த பாடகியை நாம் கண்டிருக்க முடியாது.
இவ்வாறாக இன்னும்பல திறமைவாய்ந்த மலையைக உறவுகள் இருக்கின்றார்கள்.

இவ்வாறாக மலையப் பகுதிகளிலும், வடகிழக்கில் எம்மோடும் இணைந்து வலிகளோடு வாழ்கின்ற மலையகத் தமிழர்களுடைய வலிக்கும், வட,கிழக்கு தமிழர்களுடைய வலிக்கும் ஒரு சிறந்த தீர்வுக்கு இறைவன் துணை நிற்கவேண்டும் - என்றார்.

# வன்னியின் எல்லைக் கிராமங்களை பாதுகாக்கும் மலையக உறவுகள்!

## வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

ஆகத்து 20, 2023




மலையகத்திலிருந்து வாழவேண்டும் என வந்த உறவுகள் எல்லைக்கிராமங்களை பாதுகாக்கும் உணர்வோடு செயற்படு கின்றார்கள் . இடங்கள் தான் வேறு உணர்வுகளும் மொழியும் ஒன்று என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவரும், வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்தார்.

மலையக மக்களின் 200 வருடகால வரலாற்று நூல் (மலையக தமிழ் மக்களுடைய 200 வருட வரலாறு) அறிமுக நிகழ்வு இன்று (20.08.2023) முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டபோதே அவர் இதனை தெரிவித்தார்.அவர் தனதுரையில் மேலும் தெரிவிக் கையில்,

மலையகம் என்பதை நாம் பிரித்து பார்க்க முடியாது காரணம் என்னவென்றால் எங்களுடைய இனத்தின் போராட்டத்திலே பல இயக்கங்கள் உருவாகினாலும் அந்த விடுதலை வேட்கை யோடு எங்களுடைய மலையக இளைஞர்கள் அதிலே இணைந்து கொண்டார்கள். தங்களுடைய இருப்பிடம் வேறாக இருந்தாலும் உணர்வென்ற அடிப்படையிலே எமது இனம் விடு தலை பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு அந்த இளை ஞர்கள் ஆயுத போராட்டத்திலே இணைந்து கொண்டதை நாம் இங்கே நினைவுகூர வேண்டும்.

அது மட்டுமல்ல வன்னியிலே சிங்கள எல்லை கிராமங்களை தமிழர்கள் தக்கவைத்துக்கொண்டு இருக்கின்றார்கள் என்றால் இந்த மலையக தேசத்திலிருந்து இடம்பெயர்ந்து எங்களுடைய வன்னி மாவட்டத்திலே வடக்கிலே குடியிருக்கும் மலையக உறவுகளின் தியாகம் தான் அந்தந்த குடியேற்றங்களை பாதுகாத்திருக்கின்றது என்பதை குறிப்பிட்டாக வேண்டும்.

விடுதலை வேட்கை என்பது எப்படி உருவானது என பாருங்கள் இளைஞர்கள் ஆயுத போராட்டத்திற்கு சென்றார்கள் . ஆனால் மலையகத்திலிருந்து வாழவேண்டும் என வந்த உறவுகள் எல்லைக்கிராமங்களை பாதுகாக்கும் உணர்வோடு செயற் படுகின்றார்கள் .

இடங்கள் தான் வேறு உணர்வுகளும் மொழியும் ஒன்று என்பதை பல சந்தர்ப்பத்திலே உணர்த்தியிருக்கின்றார்கள்.

மலையகம் என்பது மலை சார்ந்த இடம் அந்த மக்கள் ஒரு தேசிய இனம் அந்த தேசிய இனத்திற்கு இழைக்கப்படுகின்ற அநீ திகளை தட்டிக்கேட்கின்ற பொறுப்பும் கடமையும் எங்களுக்கு இருக்கின்றது.

ஏனென்றால் அவர்களுடைய செயற்பாடு, அனைத்தும் எம் மோடு ஒன்றிணைத்து போகின்ற சூழல் மலையகத்தில் குளிர் பிரதேசத்தில் வாழ்ந்தாலும் எமது இனம் ஒன்று என காட்டு கின்ற அந்த நிலையிலேயே அந்த மக்களுக்கு விடுதலையினை பெற்றுக்கொடுக்கின்ற கடமையும் பொறுப்பும் எங்களிடம் இருக் கின்றது.

இம் மலையக மக்கள் எங்கள் நாட்டிலே வாழ அவர்களுக்கு எல்லா உரித்தும் இருக்கின்றது. அவர்களிடம் இன்று நிலம் இல்லை ஆனால் வேறு ஒருவரது நிலத்தை காப்பாற்ற போராடு கின்றார்கள்.

அவர்களுக்கு நல்ல சம்பளம் இல்லை அதனை பெற்றுக் கொடுக்க அரசியற் தலைமைகள் முனைந்தாலும் கூட இந்த அரசாங்கம் இடம்கொடுப்பதில்லை.

கொழுந்துகளை எடுத்து இந்த நாட்டின் வருமானத்தினை உயர்த்துகின்ற பொறுப்பு இம் மக்களுக்கு இல்லை என்பதை நாம் நிரூபித்து காட்டவேண்டும். மலையகத்தில் வாழும் எம் உறவுகளை தூக்கிவிடுவதும் அவர்களுடைய பிரச்சினையை தீர்ப்பதற்கு ஒன்றாக இணைந்து வெல்ல வைப்பதும் எமது கடமை என தெரிவித்தார்.

# வீண்போன தலைவர் பிரபாகரனது முயற்சி!

## நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்

ஆகத்து 20, 2023

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வடக்கு, கிழக்கு, மலையைகம் என்ற ஒன்றிணைந்த ஒரு கட்டமைப்பினை உருவாகியிருந்தார்.

ஆனால் தற்போது வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் ஆகிய மூன்று பகுதிகளையும் உள்ளடக்கிய கட்டமைப்பு இல்லாமல், வடக்கு, கிழக்கு, மலையகம் என தமிழ் மக்கள் பிரிந்து நிற் கின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் இன்று(20) இடம்பெற்ற மலையகம் 200 நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக் கையில் , சாள்ஸ் நிர்மலநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், “கடந்த 2009ஆம் ஆண் டிற்கு முன்பு நாம் இந்த மண்ணில் சுதந்திரமாக எமது கலாசார அடிப்படையில், மத அடிப்படையில், இன அடிப்படையில், மொழி அடிப்படையில் ஒரு கௌரவமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தோம்.

ஆனால் தற்போது பெரும்பான்மை இனத்தவர்கள் எங்களை வழிநடாத்துகின்ற, எம்மை துச்சமாக நினைக்கின்ற அளவிற்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பகுதிகளிலுள்ள தமிழ் மக்களிடையிலும், தமிழ் மக்கள் பிரதிநிதிகளிடையிலும் இருக் கின்ற ஒற்றுமையின்மை காரணமாகவே இந்த நாட்டிலுள்ள ஆட்சியாளர்கள் எம்மை இலகுவாக தமது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றவாறு வழிநடாத்துகின்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வடக்கு, கிழக்கு, மலை யைகம் என்ற ஒன்றிணைந்த ஒரு கட்டமைப்பினை உருவாகி யிருந்தார். அத்தோடு மலையகத்தில் பொங்குதமிழ் நிகழ் வொன்று அப்போது மேற்கொள்ளப்பட்டது.

வடக்கு, கிழக்கு மற்றும், மலையகத்தில் பொங்கு தமிழ் மேற் கொள்வதனூடாக நாம் மூன்று பகுதிளிலும் ஒரே தமிழர்களாக வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்று அன்று பிரபாகரன் அடையாளப்படுத்தினார்.

ஆனால் தற்போது வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் ஆகிய மூன்றுபகுதிகளையும் உள்ளடக்கிய கட்டமைப்பு இல்லாமல்,




வடக்கு, கிழக்கு, மலையகம் என தமிழ் மக்கள் பிரிந்து நிற்கின் றனர்.

2009 ஆம் ஆண்டிற்கு முன்னரான காலப்பகுதியலிருந்த சுதந்திரத்தை மீண்டும் அனுபவிக்க வேண்டுமாயின், தமிழ் மக்கள் பிரதிநிதிகள் ஒற்றுமையாக பயணிக்க வேண்டும்” என்றார்.

# வரலாற்று சிறப்புமிக்க நல்லைக்கந்தன் கொடியேற்றம்!

ஆகத்து 21, 2023

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம், இன்று (21) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மகோற்சவ பெருவிழா, 25 நாள் களுக்கு தொடர்ந்து நடைபெறவுள்ளது.

பின்னர், செப்டெம்பர் 14 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவடையவுள்ளது.

இதனிடையே நல்லூர் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு நேற்று (20) முதல் போக்குவரத்து தடை செய்யப்பட்டு செப்டெம் பர் 16 ஆம் திகதி வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னரே வீதிகள் திறந்து விடப்படும் என யாழ் மாநகர சபை அறிவித் துள்ளது.

இதேவேளை, நல்லூர் ஆலய வீதித் தடை பகுதிகளினுள் மாநகர சபையின் நீர் விநியோக வண்டி மற்றும் கழிவகற்றும் வண்டியைத் தவிர எந்த வாகனமும் உட்செல்ல முடியாது



எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# தமிழர் பகுதி வடக்கு கிழக்கில் இருந்தது தமிழ் பௌத்தமே!

ஆகத்து 21, 2023

தமிழீழ விடுதலைப்புலிகள் காலத்தில், பௌத்த மத வழிபாட்டுக்கு எவ்வித இடையூறும் இருந்ததில்லை எனவும், மாறாக பாதுகாப்பே இருந்தது. அதற்கு காரணம், காவி உடைக்கு தந்த மரியாதை எனவும், வடக்கு கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர் சியம்பலாகஸ்வெள விமலசாரநாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.



வவுனியா விகாரையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில், குறுந்தூர் மலை விடயமானது, தொல்பொருள் திணைக்களத்திற்கு உரியது.

இதனை தனி ஒரு மதம் மட்டும், தனக்கானது என உரிமை கொண்டாட கூடாது.

சிங்கள பௌத்தர்கள் இங்கு வாழ்ந்தார்கள் என்பது முரணானது. ஆனால், இங்கு தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்துள்ளனர் என்பதுவே உண்மை.

தெற்கில், சம்பந்தமே இல்லாமல், சிங்கள பௌத்த கிராமத்திற்குள், கிறிஸ்தவ மத குருவோ அல்லது சைவ பூசகரோ சென்று, தங்கள் தளம் எனக்கூறி உரிமை கொண்டாடினால், சிங்கள பௌத்தர்கள் ஏற்றுக்கொள்வார்களா அல்லது விட்டுத்தான் கொடுப்பார்களா?.

அவ்வாறிருக்கும் போது, தமிழரின் பூர்வீக இடமான குருந்தூர் மலை பகுதியில், பௌத்த துறவி ஒருவர் தினமும் சென்று உரிமை கொண்டாடினால், தமிழர்கள் மட்டும் விட்டுக்கொடுக்க வேண்டும் என்று நினைப்பது, எவ்வாறு சாத்தியப்படும்.

வணக்கத்தலங்கள், எல்லா மதத்தவருக்கும் எல்லா இனத்தவருக்கும் உரியது. சிங்கள பௌத்த என்றில்லாமல், நாங்கள் இலங்கையர்கள். யாரும் வணங்கலாம் என்ற பொதுநிலைக்கு, நாங்கள் சிந்திக்க வேண்டும். ஒரு சிலர், இந்த விடயத்தை அரசியலாக்கி, இனங்களுக்கு இடையிலான முறுகலை ஏற்படுத்துவதற்கு முயல்கின்றனர்.



தொல்பொருள் இடத்தின் முழுப்பொறுப்பையும், தொல்பொருள் திணைக்களம் மட்டுமே எடுக்க வேண்டும். அதில் வேறு எந்த மதத்தவரும் தலையிடக் கூடாது. என வலியுறுத்தப்பட்டது. ஊடக சந்திப்பில், மும்மத தலைவர்களும் பங்கேற்றிருந்தனர்.

# வடகிழக்கு தமிழர் பகுதிகளில் ஊடகவியலாளர்கள் மீதான அதிகரித்துவரும் வன்முறைகள் அச்சத்தை தருகிறது!

## அமெரிக்க தூதர்

ஆகத்து 23, 2023

வடகிழக்கு தமிழர் பகுதிகளில் ஊடகவியலாளர்கள் மீதான அதிகரித்துவரும் வன்முறைகள் அச்சத்தை தருவதாக இலங்கைக்கான அமெரிக்க தூதர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் பணியின் போது கொல்லப்பட்டனர். காணாமல் ஆக்கப்பட்டனர். தாக்கி அச்சுறுத்தப்பட்டனர்.

அத்தகைய இருண்ட யுகத்தை நோக்கி இலங்கை செல்கின்றதாவென்ற அச்சம் எழுந்துள்ளது. மட்டக்களப்பில் தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான நேற்றைய அச்சுறுத்தல் அதற்கொரு உதாரணமாகுமெனவும் அமெரிக்க தூதர் தெரிவித்துள்ளார்.

பலாலி சர்வதேச விமான நிலையம் ஊடாக இன்று யாழ்ப்பாணத்துக்கு தீடீர் விஜயம் செய்த அமெரிக்க தூதர், சிரேஸ்ட ஊடகவியலாளர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே கிழக்கில் ஊடகவியலாளர்களை வாகனத்துடன் தீயிட பிக்கு ஒருவரால் முன்னெடுக்கப்பட்ட முயற்சி தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர் வடகிழக்கு ஊடகவியலாளர்கள் தமது ஊடகப் பயணத்தில் சுதந்திரமான அறிக்கையிடலிற்காக தனது குரலை அமெரிக்க அரசு தொடர்ந்தும் எழுப்புமென தெரிவித்த தூதர் கடந்த கால இருண்ட யுகங்களை நினைவு கூர்ந்தார்.



ஊடக சுதந்திரத்தை மேம்படுத்துவதில் இலங்கையின் ஆட்சியாளர்கள் கூடிய அக்கறை செலுத்த கேட்டுக்கொண்ட அவர் கடந்த காலங்களில் ஊடகவியலாளர்களது பாதுகாப்பு மற்றும் சுதந்திரமான அறிக்கையிடல் தொடர்பில் அமெரிக்க அரசு ஆற்றிய பங்களிப்புக்கள் தொடர்பிலும் தெளிவுபடுத்தியிருந்தார்.

ஊடகவியலாளர்கள் மீதான இனவாத அச்சுறுத்தல்களை முளையிலேயே கிள்ளி எறியாவிடின் ஆபத்தான சூழலை எதிர்கொள்ளவேண்டியிருக்குமெனவும் அமெரிக்க தூதர் சுட்டிக்காட்டியிருந்தார்.

# வடக்கு கிழக்கு மாகாணங்களில் வரட்சி காரணமாக சுத்தமான குடிநீரின்றி மக்கள் பாதிப்பு!

ஆகத்து 23, 2023

நாட்டில் நிலவும் வரட்சியான காலநிலையினால் இதுவரை 72 ஆயிரத்து 100 குடும்பங்களை சேர்ந்த 2 இலட்சத்து 48 ஆயிரத்து 531 பேர் பாதிப்படைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வரட்சியின் காரணமாக சுத்தமான குடிநீரின்றி மக்கள் பாரியளவில் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

அதன்படி, வட மாகாணத்தின் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் 22 ஆயிரத்து 449 குடும்பங்களை சேர்ந்த 71 ஆயிரத்து 358 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் 18 ஆயிரத்து 992 குடும்பங்களை சேர்ந்த 63 ஆயிரத்து 269 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மட்டக்களப்பு மயிலத்தமடுவுக்குச் சென்ற மத தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை 6 மணிநேரம் தடுத்து வைத்திருந்த பின் விடுவித்த பௌத்த தேரர் கொண்ட குழு!

ஆகத்து 22, 2023

மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு மாதவனை பகுதி பண்ணையாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சனை மற்றும் அத்துமீறி பௌத்த விகாரை அமைப்பது, காணி அபகரிப்பு தொடர்பாக ஆராய்வதற்கு செவ்வாய்க்கிழமை (22) சென்ற பல்சமய தலைவர்கள், பண்ணையாளாகள் மற்றும் ஊடக வியலாளர்கள் உட்பட 18 பேரை பௌத்த தேரர் தலைமையிலான காணி அபகரிப்பு குழுவினர் வழிமறித்து தடுத்து வைத்தனர்.





இச் சம்பவத்தையடுத்து கரடியனாறு மற்றும் அரங்கலாவ பொலிஸ் பொறுப்பதிகாரிகள் கொண்ட பொலிஸ் குழுவினர் அந்த பகுதிக்குச் சென்று பௌத்த தேரர் உடனான குழுவினருடன் பேச்சில் ஈடுபட்டதாகவும் அவர்கள் ஊடகவியலாளர்களின் கமராவில் பதிவு செய்த காட்சிகள் அனைத்தையும் தேரர் அச்சுறுத்தி அழித்ததுடன் இந்த செய்தியை பிரசுரிக்கக் கூடாது என கடிதம் ஒன்றை வற்புறுத்தி பெற்றுள்ளனர்.




தொடர்ந்தும் பௌத்த தேரர் உடனான குழுவுடன் பொலிசார் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு பின்னர் 6 மணித்தியால தடுத்துவைப்பின் பின்னர் மாலை 6 மணிக்கு விடுவிக்கப்பட்டனர்.

குறித்த பிரதேசத்தில் காணி அபகரிப்பு மற்றும் விகாரை அமைப்பது தொடர்பாகவும் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சனை தொடர்பாகவும் மட்டக்களப்பு மாவட்ட பல்சமய மத தலைவர்கள், ஊடகவியலாளர்கள் கொண்ட குழுவினர் சம்பவதினமான 22.08.2023 செவ்வாய்கிழமை காலை மயிலத்தமடு மாதவனை பிரதேசத்திற்கு வாகனங்களில் இரு அருட்தந்தையர்கள், ஒரு மௌளவி, இரு இந்து குருக்கள், மூன்று ஊடகவியலாளர்கள் உட்பட 18 பேர் அடங்கிய குழுவினர் அங்கு சென்று பண்ணையாளர்களை சந்தித்து கலந்துரையாடிவிட்டு பகல் ஒரு மணியளவில் திரும்பிக்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் மட்டக்களப்பு எல்லை பகுதியில் அமைந்துள்ள கம்பி பாலத்திற்கு அருகாமையில் வாகனங்களில் திரும்பிக் கொண்டிருந்த பல்சமய மத தலைவர்களின் வாகனங்களை கம்பி பாலத்தில் குறுக்கே தேரர் ஒருவருடனான நூற்றுக்கு மேற்பட்டவர்கள் ஒன்றிணைந்து வீத தடையை போட்டு வாகனங்களை தடுத்து நிறுத்தி வாகனங்களின் திறப்புக்களை பிடுங்கி எடுத்து அவர்களை தடுத்து வைத்ததுடன் இந்து குருக்கள் ஒருவரை தாக்க முற்பட்டதையடுத்து அங்கு பெரும் பதற்றநிலை ஏற்பட்டது.



# வடக்கு தமிழர் தாயகத்தில் சரத் வீரசேகரவுக்கு எதிராக போராட்டம்!

ஆகத்து 25, 2023

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர முல்லைத்தீவு நீதிபதி தொடர்பாக தெரிவித்த கருத்தினைக் கண்டித்து வட மாகாணத்தில் சட்டத்தரணிகள் இன்றையதினம்(25) பணிப் புறக்கணிப்பை மேற்கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 22 ம் திகதியன்று முல்லைதீவு நீதிபதி தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர அவதூறு பரப்பும் வகையிலும் நீதித்துறை சுதந்திரத்தை கேள்விக்கு உட்படுத்தும் வகையிலும் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையை கண்டித்தும் எதிர்ப்பு தெரிவித்தும் முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம் இன்று (25) காலை நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணித்து அடையாள கண்டன போராட்டம் ஒன்றை நடத்த அழைப்பு விடுத்தது





அவர்களது அடையாள புறக்கணிப்பு போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் ஏனைய கிளைச் சங்கங்களும் தத்தமது நீதிமன்றங்களில் அடையாள கண்டன போராட்டத்தினை மேற்கொண்டன.

யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் முல்லைதீவு சட்டத்தரணிகளிற்கு ஆதரவாக சட்டத்தரணிகள் கவனயீர்ப்பு போராட்டத்தில் குதித்திருந்தனர்.

# தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வீட்டை பேரினவாதிகள் முற்றுகையிட்டு அச்சுறுத்தல்!

ஆகத்து 25, 2023

ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்த அரசியல் தீர்வையும் தமிழினம் ஏற்காது என்ற கொள்கையோடு பயணிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் தலைமையை அச்சுறுத்தி ஒடுக்கும் நோக்குடன் அவரது கொழும்பு இராணி வீதியிலுள்ள வீட்டினுள் நுழைய முயன்றனர் பேரினவாதிகள்.

எங்களது தேசத்தின் மீது பாரிய இனப்படுகொலையை முன்னெடுத்த பின்னரும் எமது தேசம் சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு அடங்கவில்லை.

அடங்க மறுக்கும் இனத்தின் அடையாளமாக இன்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எழுந்து நிற்பதனை சகித்துக் கொள்ள முடியாத சிங்கள பௌத்த பேரினவாத வெறியர்கள் பேரலையாகத் திரண்டு அச்சுறுத்தி அடிபணிய வைக்க முயல்கின்றார்கள்.

இந்த அச்சுறுத்தல்கள் எமது தேசத்தின் அரசியல் விடுதலை நோக்கிய பயணத்தை ஒருபோதும் தடுத்த நிறுத்தப்போவதில்லை.

எமது தேசத்தின் மீது சிறீலங்கா ஆயுதப்படைகள் புரிந்த இனப் படுகொலைக்கான சர்வதேச குற்றவியல் நீதி விசாரணைக் கோரிக்கையை கைவிடச் செய்யலாமென இனவாதிகள் கனவு காண்கிறார்கள்.

தமிழ்த் தேசத்தின் இறைமை சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சமஸ்டிக் கோரிக்கையை கைவிடச் செய்து ஒற்றையாட்சிக்குள் 13ற்குள் தமிழ் அரசியலை முடக்க ஒத்துழைக்கும் தமிழ்த் துரோகிகளது நிகழ்ச்சி நிரலுக்கு தடையாக இருக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொள்கை உறுதிப்பாட்டினை சிதைக்க முடியுமென கனவு காண்கிறார்கள். அச்சுறுத்தல்களால் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் இலட்சிய உறுதியைச் சிதறடிக்க முடியாது.







எமது தேசத்தில் சட்ட விரோதமாகக் கட்டியெழுப்பப்படும் சட்ட விரோத பௌத்த விகாரைக் கட்டுமைானங்களுக்கு எதிராக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமையின் கீழ் தமிழினம் எழுச்சி கொண்டுவருவதனை தடுத்திட முடியுமென சிங்கள பௌத்த பேரினாவதம் கனவு காண்கின்றது.



ஆனால் சட்டவிரோத பௌத்த மயமாக்கலுக்கோ அல்லது திட்டமிட்ட பௌத்தமயமாக்கலுக்கோ நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை.

தந்தையைப் போலவே உறுதியுடன் இனத்தின் விடுதலைக்காக துணிந்து நின்று குரல் கொடுக்கும் கஜேந்திரகுமாா் பொன்னப்பலத்திற்குப் பக்கபலமாக திரலவேண்டும்.







# அந்நியரிடமிருந்து நாட்டை மீட்கப் போராடிய மாவீரன் பண்டாரவன்னியனை இலங்கை அரசு நினைவு கூரவேண்டும்!

## முன்னால் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

ஆகத்து 25, 2023

அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடி இந்த நாட்டை மீட்கப்போராடிய தமிழ் மாவீரனே பண்டாரவன்னியனாவான்.

எனவே மாவீரன் பண்டாரவன்னியனின் வெற்றிநாளை இலங்கை அரசாங்கமும் நினைவுகூரவேண்டும் என துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

மாவீரன் பண்டாரவன்னியனின் 220ஆம் ஆண்டு வெற்றி நாள் நிகழ்வு முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் முன்னெடுக்கப் பட்டது. இந்நினைவுகூரலில் கலந்துகொண்டபின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மாவீரன் பண்டாரவன்னியன் முல்லைத்தீவில் பீரங்கிகளோடு இருந்த வெள்ளையர்களின் கோட்டைக்குள் புகுந்து, வெள்ளையர்களை வாள்கொண்டு வென்ற வரலாற்று முக்கியம் வாய்ந்த நாள் இதுவாகும்.

இவ்வாறு அந்நிய ஆதிக்கத்திடமிருந்து எம்மை மீட்க போராடிய ஒரு தமிழ் மாவீரனை, சாதனையாளனை தமிழர்களாகிய நாம் நினைவுகூருகின்றோம்.

இலங்கை அரசானது இவ்வாறானதொரு வீரத் தமிழனை மதிப் பளிக்கவேண்டுமென்றோ, அல்லது வெற்றி நினைவுநாட்களை நினைவு கூரவேண்டும் என்றோ சிந்தித்தது கிடையாது.

அந்நியர்களை விரட்டியடித்த ஒரு வீரனை நினைவுகூராமல், இலங்கை அரசாங்கம் பிரிவினையைக் காண்பிக்கின்றமையை காணக்கூடியதாகவுள்ளது.

எது எவ்வாறாயினும் நாம் தொடர்ந்தும் மாவீரன் பண்டாரவன்னியனை நினைவுகூருவோம் – என்றார்.

இன்றைய நாள், பண்டாரவன்னியன் ஒரே வாள்வீச்சில் அறுபது வெள்ளையர்களை வீழ்த்தியதாகக் கூறப்படும் முல்லைத்தீவு - முள்ளியவளை, கற்பூரப் புல்வெளியில் பண்டாரவன்னியனுக்கு வணக்கம் செலுத்தப்பட்டது.



# முல்லைத்தீவு நகரில் அமைந்திருந்த வெள்ளையரின் கோட்டையை போரிட்டு வெற்றிகொண்ட வன்னியின் இறுதி மன்னன் மாவீரன் பண்டார வன்னியனின் 220ஆம் ஆண்டு வெற்றிநாள் (25.08) இன்று முல்லைத்தீவு நகரில் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டது.











# மன்னார் மாவட்டத்தில் கடும் வரட்சியால் மடுப் பிரதேசத்தில் மாத்திரம் 3,244 பேர் பாதிப்பு!

ஆகத்து 23, 2023

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக வரட்சியான காலநிலை நிலவி வருகின்றமையினால் பொது மக்கள் உட்பட கால் நடைகள் பாதிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக சில இடங்களில் குடிநீருக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் தகவலின் பிரகாரம் மன்னார் மாவட்டத்தில் வரட்சி காரணமாக மடு பிரதேச செயலக பிரிவில் உள்ள பல கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வழங்கியுள்ளனர்.

அதிலும் மடு பிரதேச செயலக பிரிவில் உள்ள மல்லவராஜன் கட்டையடம்பன், மாதா கிராமம்,பெரிய முறிப்பு, இரணை இலுப்பகுளம், கீரிசுட்டான் போன்ற பகுதிகள் அதிகளில் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வழங்கியுள்ளனர்

குறிப்பாக வரட்சி காரணமாக குறித்த கிராமங்களை சேர்ந்த 952 குடும்பங்களை சேர்ந்த 3244 நபர்கள் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத் துவப் பிரிவு தகவல் வழங்கியுள்ளது.

இந்த நிலையில் இவ் வரட்சியான காலநிலை தொடரும் பட்சத்தில் பாதிக்கப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை பல மடங்கு அதி கரிக்கலாம் என எச்சரிக்கப் பட்டுள்ளது.



# கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களது இல்லத்தின் முன்பாக மீண்டும் சிங்கள பௌத்த பேரினவாதிகள் ஆர்ப்பாட்டம்!

ஆகத்து 26, 2023

நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பில் உள்ள இல்லத்தின் முன்பாக இன்றும் பதற்றநிலை எற்பட்டுள்ளது.

இதனை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அவரது பதிவில், இன்றைய தினமும் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பு இல்லத்தின் முன்பாக சிங்கள பௌத்த பேரினவாதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என குறிப்பிட்டுள்ளார்.



நேற்றையதினம் தேரர் தலைமையிலான ஆர்ப்பாட்டக்குழுவொன்று கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பிலுள்ள வீடு இருக்கும் பகுதிக்கு விரைவதாக தகவல் கிடைத்துள்ள நிலையில் அங்கு காவல்துறையினரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டனர்.

இதனனத் தொடர்ந்து அங்கு பதற்றநிலை உருவாகிய போதும் சிறிது நேரத்தில் காவல்துறையினர் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த நிலையில், இன்றும் அங்கு ஆர்ப்பாட்டக்குழுவொன்று அவரது வீட்டை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால், குறித்த பகுதிக்கு காவல்துறையினரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டவர்களை சுற்றி வளைத்து பிடித்த வாழைச்சேனை மீனவர்கள்!

ஆகத்து 27, 2023



வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள கல்குடா கடலில் சட்ட விரோதமான மீன் பிடி முறையான சுருக்கு வலை மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டதாக கூறப்படும் மீனவக் குழுவொன்றை நேற்று முன்தினம் பிரதேச மீனவர்களால் சுற்றி வளைத்து பிடிக் கப்பட்டு உரிய அதிகாரிகளிடம் சட்ட நடவடிக்கைக்காக ஒப் படைத்துள்ளனர்.

இந் நடவடிக்கையின் போது 36 மீனவர்கள் 10 படகுகள் மற்றும் மீன் பிடி உபகரணங்கள் தங்களால் கைப்பற்றப்பட்டு கல்குடா பொலிஸ் மற்றும் கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பேத்தாழை மீனவ சங்கத் செயலாளர் பிரான்சிஸ் ரமேஸ்பாலு தெரிவித்தார். மாங் கேணி, காயான்கேணி, வட்டவான், நாசிவன் தீவு ஆகிய மீன் பிடி கிராமங்களைச் சேர்ந்தவார்களே இவ்வாறு கைது செய்யப் பட்டனர்.

நீண்டகாலமாக தொடர்ந்து நடந்து வந்த இந் நடவடிக்கை குறித்து உரிய மீனவர்களுக்கு தங்களால் பலமுறை அறிவித் தல் விடுத்தபோதிலும் உரிய கவனத்திற்கு கொண்டு வந்திருந் தாலும் இவ் சட்ட விரோத நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வந்தது. இதையடுத்து நேற்று முன்தினம் (25) அதிகாலை இவர்கள் மீதான சுற்றி வளைப்பை தாங்கள் மேற்கொள்ள நேரிட்டதாக பிரதேச மீனவர்கள் தெரிவித்தனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத்திருந்தால் இது போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றிருக்காது என மீனவர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

கைப்பற்றப்பட்ட படகுகள், மீனவர்களை மேலதிக சட்ட நடவடிக் கைக்காக வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றுக்கு ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையினை கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

நீண்ட காலமாக பிரதேச கடலில் வெளிமாவட்ட, உள்ளூர் மீன வர்கள் வருவதனால் தங்களது வழமையான மீன் பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வாழ்வாதரமும் பாதிக்கப் படுள்ளதாக கவலை தெரிவித்தனர். சம்பந்தப்பட்ட திணைக் களங்களுக்கு தகவல் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் தாங்கள் முன் வந்து இவ் தீர்மானத்தை மேற் கொண்டு சுருக்குவலை மீன் தொழிலை தடுப்பதற்கான நட வடிக்கையில் ஈடுபட்டதாகவும் தங்களைப் போன்று மாவட்டத் திலுள்ள மீன் பிடி சங்கங்கள் முன் வந்து இவ்வாறான நடவடிக்கையினை மேற்கொள்ள முன்வரவேண்டும் என கேட்டுக்கொண்டனர்.

# திருகோணமலை மாவட்டத்தில் புத்த விகாரைகள் அதிகரிப்பு; நீண்டு கொண்டே செல்லும் பட்டியல்!

ஆகத்து 27, 2023

238 சிங்கள - பௌத்த மக்கள் மட்டுமே வாழும் திருகோண மலையின் - குச்சவெளி பிரதேச செயலர் பிரிவில் 23 விகாரைகள் அல்லது பௌத்த வழிபாட்டிடங்கள் நிர் மாணிக் கப்பட்டுள்ளன. இவற்றில் சில இன்னும் கட்டுமானப் பணியில் உள்ளன என்று அறிய வருகின்றது. தென்னமரவாடி கிராம அலுவலர் பிரிவில் பௌத்தர்கள் இருவரே வசிக்கின்றனர். இந்நிலையில், இங்கு சங்கமலை புராண ரஜமகா விகாரை நிறுவப்படுகின்றது. புல் மோட்டை - 4 கிராம அலுவலர் பிரிவில் 98 பௌத்தர்கள் வாழ்கின்றனர். இங்கு, சந்திரபுர புராண ரஜமகா விகாரை, சிறீ தர்மோதய தகம பன்சல என இரு பௌத்த வழிபாட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

புல்மோட்டை - 02 கிராம அலுவலர் பிரிவில் 9 பௌத்தர்கள் வாழ்கின்றனர். ஆசிரி ஹந்த புராண ரஜமகா விகாரை





அமைபடுகிறது. புல் மோட்டை - 01 கிராம அலுவவலர் பிரிவில் 42 பௌத்தர்கள் வசிக்கின்றனர். இங்கு, சிறீ சத்தர்ம யுத்திக புராண ரஜமகா விகாரை, அத்தனகைகந்த புராண ரஜமகா விகாரை, யனோஜ புராண ரஜமகா விகாரை, மிகிந்துலேன புராண ரஜமகா விகாரை என 4 விகாரைகள் அமைக்கப்பட் டுள்ளன. இதேபோன்று, திரியாய் கிராம அலுவலர் பிரிவில் 29 பௌத்தர்கள் வசிக்கின்றனர். இங்கு, சப்தமகா பபதா வன சேனசுந்த விகாரை, பத்ம ரஜ பப்பத புராண ரஜமகா விகாரை, தபசு கல்லுகு பன்சல என மூன்று பௌத்த வணக்க தலங்கள் நிறுவப்பட்டுள்ளன.

குச்சவெளி கிராம அலுவர் பிரிவில் பிச்சாமல் புராண ரஜமகா விகாரை அமைக்கப்பட்டுள்ளது. இங்கு பௌத்தர்கள் இருவரே வசிக்கின்றனர். ஜெய நகரில் 42 பௌத்தர்கள் வசிக்கின்றனர். இங்கு சமுத்திர கிரிபுராண ரஜமகா விகாரை அமைக்கப்பட் டுள்ளது. இதேநேரம் 55 பௌத்தர்கள் வாழும் கும்புறுப்பிட்டி கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் பம்பரகலை புராண ரஜமகா விகாரை, தெபரகலை புராண ரஜமகா விகாரை, பாஹிய பவ்வத வனசேனசுந்திர பன்சல, வித்தியலோகா ரஜமகா விகாரை, மகாபோதி விகாரை மற்றும் பௌத்த தியான மண் டபம் என 6 பௌத்த வணக்க தலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று, கும்புறுப்பிட்டி வடக்கில் கொக்கரடி மலை புத் தரய வனசேனசுன பன்சல, கொட்டிகுளம் சங்கரய வன சேனசுன பன்சல, மடுக்குளம் தர்மயவன சேனசுன பன்சல என்று மூன்று பௌத்த வணக்க ஸ்தலங்களும் நிலா வெளியில் ஒரு பௌத்தரே வசிக்கும் நிலையில் அங்கு கண்டல் காடு புராண ரஜமகா விகாரை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த பௌத்த வழிபாட்டிடங்கள் பெருமளவானவை கோட்டா பய ராஜ பக்ஷ ஜனாதிபதியாக இருந்த சமயத்தில் அமைக்கப் படுவதற்கு நிதியும் அனுமதியும் வழங்கப்பட்டன என்று கூறப் படுகின்றது. குச்சவெளி பிரதேச செயலர் பிரிவில் 13 ஆயிரத்து 660 இஸ்லாமியர்களும் 4 ஆயிரத்து 552 இந்துத்தமிழர்களும் வாழ்கின்றனர். இதில், 14 விகாரைகள் அல்லது பௌத்த வழிபாட்டிடங்கள் தமிழர்கள் வாழும் பகுதிகளிலும், 9 விகாரைகள் அல்லது வழிபாட்டிடங்கள் அமைக்கப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது.

தமிழ் பேசும் மக்கள் அதிகளவில் வாழ்ந்த திருகோணமலை மாவட்டத்தில் 1947 ஆம் ஆண்டு கந்தளாய் குடியேற்றத் திட்டம் முதல் காலத்துக்கு காலம் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. திட்டமிட்ட வகையில் குடிப்பரம்பல் மாற் றியமைக்கப்பட்ட இந்த மாவட்டத்தில் தற்போது தமிழ் மக்கள் சிறுபான்மையினராக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ் மாவட்டத்தில் வரட்சியால் 22 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு!

ஆகத்து 27, 2023

யாழ்ப்பாண மாவட்டத்தில் 22 ஆயிரத்து 044 குடும்பங்களை சேர்ந்த 70 ஆயிரத்து 408 பேர் வரட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற வரட்சி தொடர்பிலான கலந்துரையாடலின் போதே அவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இவற்றில் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, மருதங்கேணி, சங்கானை மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவுகளில் குடிநீர்ப் பற்றாக்குறையான பகுதிகளுக்கு தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் நிதி உதவியுடன் பவுசர்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போதைய நிலை தொடர்ந்து நீடிக்கும் பட்சத்தில் குடிநீர்த் தேவையுடைய குடும்பங்களின் தொகை அதிகரிக்கக்கூடும் எனவும், அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டுமென குறித்த பிரதேச செயலக, பிரதேச செயலாளர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதன் போது நெடுந்தீவு உட்பட தங்களால் நீர்வழங்கல் செய்யப்படும் பிரதேசங்களிற்கு குடிநீர்த் தட்டுப்பாட்டை சமாளிக்கக் கூடிய வகையில் நீர்வழங்கலை மேற்கொள்ள முடியுமெனவும் தற்போது மாவட்டத்தில் அவ்வாறான சேவைகள் 18 குடிநீர் மூலங்கள் மூலமாக செயற்படுவதாகவும் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை பொறியியலாளர் தெரிவித்தார்.



அதே வேளை எதிர்வரும் கால வரட்சியினை கருத்திற் கொண்டு நீர்ப் பாவனையில் விரயத்தைத் தவிர்த்து சிக்கனமாக நீரைப் பாவிக்க பொது மக்களுக்கு அறிவுறுத்த வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

# யாழ் மாவட்டத்தில் உள்ள நீர் நிலைகளை தூர்வாருதல் செய்யும் சிரமதானப் பணிகள் இன்று முதல் ஒரு வாரத்திற்கு!

ஆகத்து 27, 2023

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சிறிய நீர்நிலைகள் மற்றும் கேணிகளை இன்றைய நாள் திங்கட்கிழமை முதல் ஒரு வாரத்திற்கு சிரமதானம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற வரட்சி தொடர்பான கலந்துரையாடலில் குறித்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டது.

அதனை தொடர்ந்து, சிறிய நீர்நிலைகள் மற்றும் கேணிகளை பிரதேச செயலாளர்களின் ஒருங்கிணைப்பு, மேற்பார்வையில் அந்த நீர் நிலைகளுக்கு பொறுப்பான பிரதேச சபைகள் மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களம் போன்றன துப்பரவு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.



அதேவேளை யாழ்ப்பாண நகரப் பகுதியிலுள்ள இயற்கையான குளங்கள் மற்றும் கேணிகளை தனியார் ஆக்கிரமிப்புகளில் இருந்து பாதுகாக்க அந்த நீர் நிலைகளுக்கு பொறுப்பான திணைக்களங்களால் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென யாழ்ப்பாண மாவட்ட செயலாளரினால் அறிவுறுத்தப்பட்டது.

மேலும் மாவட்டத்தின் பல்வேறு பொதுக்கிணறுகள், விவசாய கிணறுகள் பல பாழடைந்து பயன்பாடற்று காணப்படுவதாலும்

அவற்றை சுத்தப்படுத்தினால் குடிநீர்த் தேவைக்கு அவற்றைப் பயன்படுத்த முடியுமெனவும், அதன் மூலம் எதிர்காலத்தில் நன்னீரை சேமித்து வைக்க அவற்றை பயன்படுத்த முடியுமெனவும் கலந்துரையாடலில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

அதனை அடுத்து, அவ்வாறான கிணறுகள் பற்றிய விபரங்களை ஒரு வார காலத்தினுள் சமர்ப்பித்து வரட்சியினால் பாதிக்கப்பட்டு இருக்கும் அவ்வப் பிரதேச மக்களுக்கு வேலைக்காக உணவு பெறும் திட்டத்தினூடாக அக் கிணறுகளை தூர்வாருதல் செய்வதற்கான சாத்தியம் பற்றி ஆராயுமாறு உலக உணவுத் திட்ட அலுவலரிடம் மாவட்ட செயலர் கூறினார்.

# முல்லைத்தீவில் மனிதர்களுக்கும் காணிகள் இல்லை, மாடுகளுக்கும் காணிகள் இல்லை!

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

ஆகத்து 27, 2023

முல்லைத்தீவு மாவட்டத்தில் வனவளத் திணைக்களத்தின் ஆளுகையிலேயே மிக அதிகளவிலான நிலப்பரப்புக் காணப்படுவதாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 3389 குடும்பங்கள் குடியிருக்க காணியில்லாத நிலையில் வாழ்வதாகவும், 89 ஆயிரத்திற்கும்மேற்பட்ட கால்நடைகளுக்கும் மேய்ச்சல் தரையில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழும் 3389குடும்பங்களுக்கு குடியிருப்பதற்கு நிலம் இல்லை. தொழில் முயற்சிக்கென 28,626 இளஞர், யுவதிகள் ஒரு ஏக்கர் வீதம் தமக்குக் காணி தருமாறு மாவட்டசெயலகத்திடம் கோரிக்கை முன்வைத்துள்ள போதிலும் அதற்கு சாதகமான பதில்கள் இல்லை.

முல்லைத்தீவு மாவட்டசெயலகத்தின் 2022ஆம் ஆண்டிற்கான புள்ளிவிபரத்தின் அடிப்படையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பானது 2415சதுரகிலோமீற்றர் தரையாகவும், 202 சதுரகிலோமீற்றர் உள்ளக நீர்ப் பிரதேசமாகவும் காணப்படுகின்றது.

இதில் கடந்த 2009ஆம் ஆண்டிற்கு முன்னர் 222006 ஏக்கர், 36.72 சதவீதமான நிலம் வனவளத் திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்டுக் காணப்பட்டது.

இந் நிலையில் கடந்த 2009ஆம் ஆண்டிற்குப் பின்னர் 167484 ஏக்கர் 30.37நிலப்பரப்பை வனவளத் திணைக்களம் மேலதிகமாக தனது ஆளுகையின் கீழ் கொண்டுவந்துள்ளது.

தற்போது காடுபேணல் சட்டத்தின்கீழ் ஒதுக்கக்காடுகளாக மீண்டும் 42,631 ஏக்கர் 7.15 சதவீதமான நிலப்பரப்பை வனவளத்திணைக்களம் கோரியுள்ளது. அவ்வாறு குறித்த நிலப்பரப்பும் வனவளத் திணைக்களத்தினால் உள்வாங்கப்பட்டால் மொத்தமாக உள்ள முல்லைத்தீவு மாவட்டத்தின் நிலப்பரப்பில் 74.24சதவீதபான நிலப்பரப்பு வனவளத்திணைக்களத்தின் ஆளுகைக்குள் உள்வாங்கப்பட்டுவிடும்.

மிகுதி நிலப்பரப்பில் பெரும்பகுதியை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, தொல்லியல் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், கனியமணல் திணைக்களம், படையினர் உள்ளிட்ட தரப்பினர் ஆளுகைசெய்கின்றனர்.

குறிப்பாக வனவளத்திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நிலப்பரப்பில், மாவட்டத்தின் அபிவிருத்தித் தேவைக்காக சுமார் 50,000 ஏக்கர் காணி தேவையெனவும், விடுவித்துத் தருமாறு மாவட்டசெயலகம் கோரிக்கை விடுத்துள்ளபோதிலும் முறையான பதில்கள் இதுவரையில் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் வேறு திணைக்களங்கள் காணிக் கோரிக்கை முன்வைக்கும்போதும், குடியேற்றங்களுக்காக காணிக் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றபோதும் காணிகளை விடுவிக்கின்ற நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந் நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 3389 குடும்பங்களுக்கு இதுவரை குடியிருக்க காணியில்லாத நிலை காணப்படுகின்றது.

இதுதவிர முல்லைத்தீவு மாவட்டத்தில் 89ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ள நிலையில், குறித்த கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரைகளும் இதுவரையில் வழங்கப்படாத நிலை காணப்படுகின்றது. நீண்ட காலமாக இவ்வாறு மேய்ச்சல் தரைக்கோரிக்கை முன்வைக்கப்படுகின்றபோதிலும் இதுவரையில் மேய்ச்சல் தரைக்காணிகள் வழங்கப்படவில்லை.

அந்தவகையில் தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் மக்கள் குடியிருக்க காணியில்லாத நிலை காணப்படுவதுடன், கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரைக்காணிகள் இல்லாதநிலை காணப்படுகின்றது - என்றார்.

# கிழக்கு மாகாண ஆளுநருக்கு எதிராக பிக்குகள் போராட்டம்!

ஆகத்து 28, 2023

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் திருகோணமலை பிரதேச செயலாளருக்கு எதிராக போராட்டம் ஒன்று இடம்பெற்று வருகின்றது.

குறித்த போராட்டத்தை பிக்குகள் முன்னெடுத்து வருகின்றனர்.

திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கு முன்பாக இன்று காலை 9 மணிக்கு முதல் குறித்த போராட்டம் இடம்பெற்று வருகிறன்றது.

திருகோணமலை- நிலாவெளி, பெரியகுளம் பகுதியில் நிர்மாணிக்கப்படவிருந்த சட்டவிரோத விகாரையின் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

குறித்த விகாரை நிர்மாணிக்கப்படும் பட்சத்தில் இன முறுகல்கள் ஏற்படும் என திருகோணமலை மாவட்டத்தை பிரதிநிதித்துவம்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் மற்றும் சமூக ஆர்வலர்கள் மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுடைய கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

இதனையடுத்து, இனங்களுக்கிடையில் இனமுறுகல் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்யும் முகமாக ஆரம்பிக்கவிருக்கும் குறித்த விகாரையின் நிர்மாணப்பணிகளை உடனடியாக நிறுத்துமாறு ஆளுநர் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்ததிற்கமைய விகாரையின் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.



இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும விதமாய் கடந்த 12 ஆம் திகதியன்று இலுப்பைக்குளம் பகுதியில் வீதி மறியல் போராட்டத்தில் தேரர்கள் சிலர் ஈடுப்பட்டிருந்தனர்.

# நாம் சிங்கள பௌத்தத்துக்கு எதிரானவர்கள் அல்ல!

## பாராளுமன்ற உறுப்பினர் பொ. கஜேந்திரகுமார்

ஆகத்து 28, 2023

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் உரிமை சகலருக்கும் உண்டு. இருப்பினும் நாம் சிங்கள பௌத்தத்துக்கு எதிரானவர்கள் அல்ல. மாறாக எமது மக்களின் உரிமைகளைப் பறிக்கக்கூடிய வகையிலும், தமிழர்களின் தொல்லியல் அடையாளங்களை அழிக்கக்கூடியவகையிலும் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளையே நிறுத்துமாறு கோருகின்றோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெற்கில் அனுபவிக்கும் சுதந்திரத்தை தாம் வடக்கில் அனுபவிப்பதற்கு இடமளிக்கவேண்டுமென வலியுறுத்தி பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தலைமையிலான குழுவினர் அவரது கொழும்பு இல்லம் முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ‘எமது செயற்பாடுகள் அனைத்தும் வெளிப்படைத்தன்மை வாய்ந்தவையாக இருக்கின்றன. அதேபோன்று தமது கருத்துக்களை வெளிப்படுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கான உரிமை சகலருக்கும் உண்டு. அதனை நாம் மறுதலிக்கவில்லை’ என்று தெரிவித்தார்.

அதேவேளை தாம் ஒருபோதும் சிங்கள பௌத்தத்துக்கு எதிரானவர்கள் அல்ல என்றும், வட, கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள நீண்டகாலமாக மதவழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டுவரும் பௌத்த விகாரைகளை அப்புறப்படுத்துமாறு தாம் கோரவில்லை என்றும் சுட்டிக்காட்டிய அவர், மாறாக எமது மக்களின் உரிமைகளைப் பறிக்கக்கூடியவகையிலும், தமிழர்களின் தொல்லியல் அடையாளங்களை அழிக்கக்கூடியவகையிலும் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளையே நிறுத்துமாறு வலியுறுத்துகின்றோம் எனக் குறிப்பிட்டார்.

‘தொல்பொருள் சின்னம் அல்லது பௌத்த சின்னம் என்ற பெயரில் தமிழ்மக்களின் அடையாளங்களையும் சரித்திரத்தையும் அழிப்பதற்கோ அல்லது மாற்றியமைப்பதற்கோ நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். அதனை முன்னிறுத்தியே நாம் செயற்பட்டுவருகின்றோம்’ என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் இல்லத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டமையை வன்மையாகக் கண்டிப்பதாகவும், இது வேண்மென்றே இனவாதத்தைத் தூண்டும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடு என்றும் இலங்கைத் தமிழரசுக்கட்சி அதிருப்தி வெளியிட்டுள்ளது.

மேலும் இதுபற்றிக் கருத்து வெளியிட்ட தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன்,



தமிழ்மக்கள் சார்பில் உண்மையிலேயே போராடுவதுடன் தமிழர்களின் வாழ்விடங்களில் முன்னெடுக்கப்படும் பௌத்த சிங்கள நிகழ்ச்சிநிரலை வெளிப்படையாகவே எதிர்க்கின்ற தமிழ் அரசியல்வாதியாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இருப்பதனாலேயே அவரது இல்லத்துக்கு முன்பாகப் போராட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாகக் குறிப்பிட்டார்.

முன்னர் பொலிஸார் மூலம் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல், இப்போது இத்தகைய போராட்டங்கள் மூலமும் ‘வீட்டை எரிப்போம்’ என்ற கோஷங்கள் ஊடாகவும் விடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# திருகோணமலையில் அபிவிருத்திக்குழுக்கூட்டத்திற்குள் நுழைந்த சிங்கள பௌத்த இனவாதக் கும்பல்!

ஆகத்து 28, 2023

திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் பிக்குகளுடன் இணைந்த இனவாதிகள் சிலர் உள்நுழைந்ததால் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடைபெறவிருந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் இந்த போராட்டங்களுக்கு மத்தியிலேயே இடம்பெற்றதுடன் அபிவிருத்தி குழுவின் இணைத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரள போராட்டம் காரணமாக அரசாங்க அதிபர் காரியாலயத்துக்குள் உள்நுழைய முடியாது வேறு வழியிலேயே சென்றுள்ளார்.

அபிவிருத்தி குழுவின் மற்றைய இணைத் தலைவரான ஆளுநர் செந்தில் தொண்டமான் இந்தக் கூட்டத்தில் பிரசன்னமாகியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பெரியகுளம் பகுதியில் விகாரையை அமைக்கும் பணியை முன்னெடுக்க அமைச்சரவை அனுமதியை பெற்றுத்தருமாறு மாவட்ட செயலகத்திற்குள் புகுந்த தேரர்கள் அழுத்தம் கொடுத்துள்ளனர்.

பதற்றம் காரணமாக அபிவிருத்திக்குழு கூட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளதுடன், ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



# குருந்தூர்மலையில் குழப்பவாதியை தெரியவில்லையாம்!

ஆகத்து 28, 2023

முல்லைதீவு குருந்தூர்மலையில் குழப்பத்தை தூண்டியவர் குறித்து எந்த வித முறைப்பாடுகளும் இதுவரையில் இல்லாததால் இது தொடர்பில் எவரையும் கைதுசெய்ய முடியாத நிலையில் உள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் வெளியிட்ட அறிக்கையில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் குருந்தூர் மலையை அடிப்படையாக வைத்து உருவாகும் குழப்பநிலைக்கு காரணமான நபரை புலனாய்வு பிரிவினர் அடையாளம் கண்டுள்ளனர் என தெரிவித்தார்.

ஆயினும் தற்போது தொடர்பில் எந்த முறைப்பாடும் முன்வைக்கப்படவில்லை. எனவே நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு முறைப்பாடுகள் அவசியம், முறைப்பாடுகள் இல்லாமல் விசாரணைகளை முன்னெடுக்கவோ, கைதுசெய்யவோ முடியாதென காவல்துறை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே தண்ணிமுறிப்பு குருந்தூர் மலை பகுதியில் தமிழ் மக்களினுடைய பூர்வீக காணிகள் தொல்பொருள் திணைக்களத்தினால் அபகரிக்கப்பட்டுள்ள நிலையில் காணிகள் விடுவிப்பது தொடர்பில் இன்றையதினம் (28) அரசியல் தலைமைகள் மற்றும் அரச அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் விஜயம் செய்து நிலைமைகளை நேரில் அவதானித்திருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன் உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்கள் துறை சார்ந்த அதிகாரிகள் கிராம மக்கள் சென்று நேரடியாக காணிகளை




பார்வையிட்டிருந்தனர்..





# தமிழர்களின் பூர்வீகத் தண்ணிமுறிப்புக் கிராமம் மீள்குடியேற்றப்படும் வரை தொடர்ந்து போராடுவோம்!

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

ஆகத்து 28, 2023

தமிழர்களின் பூர்வீகக் கிராமமான தண்ணிமுறிப்பில், எமது தமிழ் மக்கள் மீளக்குடியமர்த்தும்வரை நாம் தொடர்ந்து மக்களோடு இணைந்து போராடுவோமென முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித துள்ளார்.

முல்லைத்தீவு – தண்ணிமுறிப்புபகுதியில், தொல்லியல் மற்றும், வனவளத் திணைக்களத்தால் தமிழ் மக்களின் பூர்வீக காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளநிலையில் அது தொடர்பில் ஆராய்வதற்கு அரச அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், காணிகளுக்குரிய பொதுமக்கள் ஆகியோர் இணைந்து குறித்தக பகுதிக்கு களவிஜயம் ஒன்றினை மேற்கொண்டனர்.

குறித்த களவிஜயத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தண்ணிமுறிப்புப் பகுதியில் வாழ்ந்த தமிழ்மக்கள் கடந்த 1984ஆம் ஆண்டு, தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

தற்போது 2023ஆம் ஆண்டு ஆகிவிட்டபோதும் அந்த மக்களை மீளக்குடியேற்றுவதற்கானமுயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

இந் நிலையில் தமது காணிகளைத் தாமே துப்பரவு செய்து, விவசாய நடடிக்கைகளையும் மேற்கொள்ளும் முயற்சியை மேற்கொண்டபோது, தொல்லியல் திணைக்களத்தாலும், வனவளத்திணைக்களத்தாலும் அதற்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டன.

இவ்வாறிருக்க தமது பூர்வீக விவசாயமற்றும், குடியிருப்புக் காணிகளை மீட்க இந்தமக்களும், இந்த மக்களோடு, மக்கள் பிரதிநிதிகளான நாமும் தொடர்ந்து போராடிவருகிறோம்.

அந்தவகையில் இம்மாதம் 16ஆம்திகதி, முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பிலான விசேட கலந்துரையாடலில் இந்த காணி விடுவிப்பு தொடர்பாகவே பேசப்பட்டது. அதற்கமைய நேரடியாக களவிஜயம் மேற்கொண்டு இங்குள்ள நிலவரங்களைப் பார்வையிடுவதென முடிவு செய்யப்பட்டது.

அதற்கமைய தண்ணிமுறிப்பு பகுதிக்கு வருகைதந்து இந்த ஆக்கிரமிப்பிற்குள்ளான தமிழ் மக்களின் காணிவிடயம் தொடர்பான நிலைமைகள் தொடர்பில் பார்வையிட்டு சிலமுடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படயில் சில பகுதிகள் விடுவிப்பதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளதுடன், சில பகுதிகளை தற்போது விடுவிப்பதற்கு முடியாத சூழல் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.



எனவே விடுவிக்கப்பட முடியாத காணிகள் தொடர்பில் மாவட்டசெயலர் உரிய தரப்பினருக்கு எழுத்துமூலமாக அறிக்கை சமர்ப்பித்து அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

அந்தவகையில் இந்த காணிவிடுவிப்புத் தொடர்பிலான எமது மக்களதும், மக்கள் பிரதிநிதிகளான எமது தொடர் வலியுறுத்தலுக்கு கிடைத்த ஒரு முன்னேற்றமாகப் பார்க்கின்றோம்.

இந்த மக்களின் காணிகள் அவர்களுக்குக் கிடைக்கும்வரை நாம் தொடர்ச்சியாக மக்களோடு துணை நிற்போம் – என்றார்

# தமிழ் மக்களினுடைய பூர்வீக காணிகள் உடனடியாக விடுபடுகின்ற சூழல் இல்லாதிருக்கின்றது!

## பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

ஆகத்து 28, 2023

தண்ணிமுறிப்பு குருந்தூர் மலை பகுதியிலுள்ள தமிழ் மக்களினுடைய பூர்வீக காணிகள் உடனடியாக விடுபடுகின்ற ஒரு சூழல் இல்லாதிருக்கின்றது என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தண்ணிமுறிப்பு குருந்தூர் மலை பகுதியில் தமிழ் மக்களினுடைய பூர்வீக காணிகள் தொல்பொருள் திணைக்களத்தினால் அபகரிக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த காணிகள் விடுவிப்பது தொடர்பில் திங்கட்கிழமை (28) அரசியல் தலைவர்கள் மற்றும் அரச அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் விஜயம் செய்து நிலைமைகளை நேரில் அவதானித்திருந்தனர்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்,

குருந்தூர்மலை பிரதேசத்திலே வன இலாகா, தொல்லியல் போன்ற ஆளுகைக்குட்பட்ட காணிகளை விடுவிப்பது சம்பந்தமாக கள நிலவரத்தை மேற்கொண்டிருந்தோம்.

குறித்த விஜயத்தை வைத்து பார்க்கின்ற போது உடனடியாக இந்த நிலங்கள் விடுபடுகின்ற ஒரு சூழல் இல்லாதிருக்கின்றது. மீண்டும் ஜனாதிபதியோடு பேசுகின்ற ஒரு வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும் என்று வந்திருக்கின்ற உயர் அதிகாரிகள் இவ் விடயம் சம்பந்தமாக கூறியிருக்கிறார்கள்.

நாங்கள் மக்கள் இருந்த பூர்வீக காணிகள் என்று உறுதிபட கூறியிருக்கின்றோம். அதனை ஜனாதிபதியிடமும் எடுத்து கூறி விடுவிப்பதற்கான முயற்சியை மேற்கொள்வோம்.

ஆகவே என்னை பொறுத்தமட்டிலே இது உடனடியாக நடக்குமா என்று சந்தேகம் இருக்கிறது என மேலும் தெரிவித்தார்.

பெரியகுளம் பகுதியில் விகாரையை அமைக்கும் பணியை முன்னெடுக்க அமைச்சரவை அனுமதியை பெற்றுத்தருமாறு



மாவட்ட செயலகத்திற்குள் புகுந்த தேரர்கள் அழுத்தம் கொடுத்துள்ளனர்.

# கிளிநொச்சி மாவட்டக்காணிகளை காணியற்ற குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கவேண்டும்; வடக்கு ஆளுநரிடம் கேரிக்கை!

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்

ஆகத்து 28, 2023

கிளிநொச்சி மாவட்டத்தின், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளில் ஒருபகுதியையேனும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள காணியற்ற குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வடக்கு மாகாண ஆளுநரிடம் எழுத்துமூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுவிடயமாக பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் திங்கட்கிழமை (28) வடக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

காணியற்ற நிலையில் வாழ்ந்துவரும் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக, தாங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கும் என்னால் தொடர் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ள போதும், அவை தொடர்பில் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் மேற்படி காணிகள் தென்னிலங்கையின் தொழிலதிபர்களுக்கும், எமது மாவட்டத்தின் இயற்கை வளங்களைச் சுரண்டும் நோக்கோடு இயங்கக்கூடிய தனியார் நிறுவனங்களுக்கும் பகுதி பகுதியாகக் கூறுபோடப்படுவதை, கையாலாகாத்தனத்தோடு பார்த்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் தர்மக்கேணிப் பகுதியிலுள்ள 120 ஏக்கர் காணிச் சீர்திருத்த ஆணைக்குழு காணி, புத்தளத்தைத் தளமாகக் கொண்ட ஓர் தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டு, அக்காணியின் துப்புரவுப் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாக அறியமுடிகிறது.

போரினாலும், இடப்பெயர்வுகளாலும் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டு இந்த மண்ணிலே மீளவும் குடியேறி, தமக்கென்றொரு நிலையான வாழ்வை அமைத்துக் கொள்வதற்கு சொந்தக் காணியற்ற நிலையில் உறவினர், நண்பர்களின் வீடுகளிலும், காணிகளிலும் வாழவேண்டிய அவலநிலைக்கு ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் நிர்க்கதியற்றிருக்கத்தக்கதாக, அரச காணிகளை தனவந்தர்களுக்கும், இந்த மாகாணத்தோடு எந்தத் தொடர்புகளுமற்றவர்களுக்கும் தாரை வார்த்துக் கொடுப்பதென்பது, அல்லலுறும் எமது மக்களுக்குச் செய்யப்படுகின்ற துரோகச்செயலாகவே அமையும் என்பதில் தாங்களும் கரிசனம் கொள்வீர்கள் என நம்புகிறேன்.

இதுதவிர, தமிழர் தாயகத்தின் பல்வேறு பகுதிகளிலும் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு, எமது மக்களின் பூர்வீக



நிலங்கள் மெல்லமெல்ல பறிபோகும் அபாயகரமான நடைமுறைச் சூழலொன்றின் பின்னணியில், நீண்டகாலமாக வெற்றுக் காணிகளாக உள்ள பச்சிலைப்பள்ளியின் காணிச் சீர்திருத்த ஆணைக்குழு காணிகளுக்கும் அதேகதி ஏற்படாது என்பதற்கு எம்மிடம் எதுவித உத்தரவாதமும் இல்லை.

இந் நிலையில், குறித்த காணிகளின் ஒரு பகுதியையேனும் காணியற்ற எமது மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தின் இருப்பை நிலை நிறுத்துவதற்கு ஆவனசெய்யுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பௌத்தர்களே இல்லாத தமிழர் பிரதேசங்களில் காணிகளை கைப்பற்றி பௌத்த மத சின்னங்களை நிறுவுவது பயங்கரவாதம்!

## அருட்தந்தை மா. சக்திவேல்

ஆகத்து 29, 2023

பௌத்தர்களே இல்லாத தமிழர் பிரதேசங்களில் காணிகளை கைப்பற்றி பௌத்த மத சின்னங்களை, தூபிகளை, விகாரைகளை அமைப்பது பயங்கரவாதம் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சக்திவேல் இன்று செவ்வாய்க்கிழமை (29) அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மிக அண்மைக்காலமாக காவி உடை தரித்த ஒரு சிலரின் நடவடிக்கைகள் தனிமனித சுதந்திரத்திற்கும், நாட்டின் சட்டம் ஒழுங்குக்கும், நிர்வாகத்திற்கும் பயங்கர அச்சசுறுத்தலாக அமைந்துள்ளதை நாட்டின் சட்டம் அங்கீகரிக்கப் போகின்றதா? எனக் கேள்வியெழுப்பியுள்ளதுடன் கிழக்கு மாகாண ஆளுநரின் தலைமையில் மாகாண ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது காவி உடைத்தவர்களின் பயங்கரவாத செயற்பாட்டினால் கூட்டம் தடைப்பட்டுள்ளமையானது , தொடரப்போகும் காவி உடை தரித்தவர்களின் தீவிரவாதத்தை வெளிக்காட்டியுள்ளது.

இது நாட்டின் ஏனைய பிரதேசங்களின் நிர்வாக நடவடிக்கைகளுக்கும் அச்சுறுத்தலாகவும், பிழையான முன் உதாரணமாகவும் அது அமைந்துவிடப் போகின்றது. இத்தகைய பயங்கரவாத அச்சுறுத்தல்களை தொடர்ந்து அரசு அனுமதிக்க கூடாது.

நாட்டின் ஒரு சாதாரண குடிமகன், அல்லது விவசாய அமைப்புகள், மீனவர் சங்கங்கள், ஆசிரியர் சங்கங்கள், தொழிற்சங்கங்கள், சுகாதாரத்துறை சார்ந்தோர் தமக்கான நீதி கிட்டவில்லை என்பதற்காக அரசு திணைக்களங்களுக்குள் அல்லது அமைச்சர்கள் ஆளுநர்களின் தலைமையின் கீழ் நடக்கும் உத்தியோகபூர்வ கூட்டத்திற்குள் அத்துமீறி உள் நுழைய முடியுமா? அதற்கு பாதுகாப்பு தரப்பினர் இடமளிப்பார்களா? அவ்வாறு உள் நுழைந்தால் அவர்களின் நிலை என்னவாகும்?

பௌத்தத்தின் பெயரால் காவி உடை தரித்து ஒரு சிலர் நீதித்துறைக்கு, நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தல் விடுப்பதையும் ஏனைய சமய தலைவர்களின் சுதந்திர நடமாட்டத்திற்கும் செயற்பாட்டுக்கும் தடையாக இருப்பதை எந்த சட்டம் அங்கீகரிக்கின்றது?

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் சர்வ மத தலைவர்கள் சிலரை காவி உடை அணிந்தோர் மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக தடுத்து வைத்திருந்தனர். குருந்தூர் மலையில் நீதிமன்றத்தின் அனுமதியோடு நடைபெற்ற பொங்கலுக்கு தடையாக இருந்தனர். அரச அதிகாரிகள் மற்றும் பொலிசாரையும் தாக்குகின்றனர். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வீட்டுக்கு சென்று கொலை அச்சுறுத்தல் விடுக்கின்றனர். 36 ஆண்டுகளுக்கு முன் நிறைவேற்றப்பட்ட 13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்த வேண்டாம் என நாடாளுமன்றத்தை நோக்கி எதிர்ப்பு ஊர்வலம் நடத்தி 13ஆம் திருத்த நகலை பகிரங்க வெளியில் தீட்டு கொழுத்துகின்றனர். பௌத்தர்களே இல்லாத தமிழர் பிரதேசங்களில் காணிகளை கைப்பற்றி பௌத்த மத சின்னங்களை, தூபிகளை, விகாரைகளை அமைக்கின்றனர் இதுவே பயங்கரவாதம்.

இவ்வாறு நீதிக்கு அப்பாற்பட்டு செயல்படுவோரை கைது செய்வதற்கு பாதுகாப்பு படையினர் தயங்குவதாக தோன்றுகின்றது. அல்லது அவர்களின் பின்னால் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் சிந்திக்க வைக்கின்றது.

மிக அண்மையில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சட்டம் ஒழுங்கை மீறுகின்றவர்கள் கைது செய்யப்படுவார்கள் என அறிவித்திருந்தார். தற்போது கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நடத்தப்பட்ட கூட்டத்திற்குள் நுழைந்து அமைதிக்கு பங்கம் விளைவித்தவர்கள் கைது செய்யப்படுவார்களா?

நாட்டில் மீண்டும் இனவாத மதவாத வன்முறைகள் பலவந்தமாக தூண்டப்படுகின்றதை உடனடியாக தடுத்து நிறுத்துதல் வேண்டும். நீதி மன்றும் நிர்வாகத்திற்கு தடையாக இருப்போர் கைது செய்யப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்படல் வேண்டும். குறிப்பாக நாடாளுமன்ற சிறப்புரிமையை பாவித்து வன்



முறைக்கு தூபமிடுவோர் நாடாளுமன்ற நடவடிக்கைகள் இருந்து இடைநிறுத்தப்படல் வேண்டும்.

பெரும்பான்மை இன அல்லது பெரும்பான்மை சமயத்தின் பெயரால் நடக்கும் அடவாடித்தனத்திற்கு ஒரு சில அரசியல் வாதிகளும் ஆதரவு வழங்குகின்றனர். அல்லது அதனைப் பார்த்து மகிழ்கின்றனர். இதனை அடுத்த தேர்தலுக்கான அறுவடையாக கூட நினைக்கின்றனர். இவர்களின் சூழ்ச்சிகளில் மக்கள் சிக்கிவிடக்கூடாது. பதவி மோகத்தோடு இதனை அங்கீகரிப்பவர்களை மக்கள் புரிந்து கொள்ளல் வேண்டும். நாட்டின் சட்டம் அனைவருக்கும் சமம் என்பதை அரசு நிரூபிக்க வேண்டும். இல்லையெனில் சர்வதே சமூகத்தின் முன் தலை குனிவு ஏற்படுவதோடு தற்போது நாடு சந்தித்துக் கொண்டிருக்கும் பொருளாதார வீழ்ச்சியை விட மிக மோசமான நிகழ்ச்சியை சந்திக்க நேரிடும்.

விசேடமாக சமயத்தின் பெயராலோ இனத்தின் பெயராலோ இன்னுமொரு இனத்தினை அல்லது சமயத்தினை அவமதிப்பதும் முறுகல் நிலையை தோற்றுவிப்பதும், அதற்கான கருத்துக்களை வெளியிடுவதும் ஆதிக்கத்தை நிலை நாட்ட முயல்வதும் , அதற்காக மக்களை திரட்டுவதும், தொல்லியல் வரலாற்று சின்னங்களை அகற்றுவதும் அழிப்பதும் மறுப்பதும் கூட பயங்கரவாதமே. இதற்கு அரசு இடமளிக்கக்கூடாது என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும் என மேலும் தெரிவித்தார்.

# தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிராக கவனயீர்ப்புப் போராட்டம்! - 29,30.08.2023


















# சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் நாளில் 30.08.2023 இன்று மன்னாரில் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினர் இணைந்து ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுப்பு!



























# சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் நாளில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் யாழ் மத்திய பேருந்து நிலையம் முன்பாக போராட்டம் – 30.08.2023!

















# சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் நாளில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டது – 30.08.2023!










# கனடா யெலோநைஃப் பிரதேசத்தில் இருந்து 20 ஆயிரம் மக்களை வெளியேறுமாறு உத்தரவு!

ஆகத்து 17, 2023

கனடாவின் யெலோநைஃப் (Yellowknife) நகரிலிருந்து 17 கிலோ மீற்றர் தொலையில் நேற்றுப் புதன்கிழமை காட்டுத் தீவு பரவியதால் நாளை வெள்ளிக்கிழமை மதியம் அந்நகரில் வசிக்கும் 20,000 குடியிருபாளர்களையும் நகரிலிருந்து வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நகரிலிருந்து வெளியேறுவதற்கு ஒரே ஒரு நெடுஞ்சாலை தெற்கே மட்டும் உள்ளது. மக்கள் வெளியேறுவதற்கு வணிக மற்றும் இராணுவ விமானங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

யெலோநைஃப்பின் மேற்கில் எரியும் தீ, இப்போது நகரத்திற்கு உண்மையான அச்சுறுத்தலாக உள்ளது என்று வடமேற்கு பிரதேசங்களின் சுற்றுச்சூழல் அமைச்சர் ஷேன் தாம்சன் ஒரு செய்தி சந்திப்பில் கூறினார்.

யெலோநைஃப் நகரில் ஏற்பட்டுள்ள நெருக்கடியானது கனடாவில் காட்டுத்தீயின் பயங்கரமான கோடைகாலத்தின் புதிய அத்தியாயமாகும். ஏனெனில் தீப்பிழம்புகள் நாடு முழுவதும் விரைவாக பரவி, பல்லாயிரக்கணக்கான மக்களை வெளியேற் றும்படி கட்டாயப்படுத்தியது. கனடாவில் பரந்து விரிந்த நாடு முழுவதும் 1,000க்கும் மேற்பட்ட காட்டுத் தீ எரிகிறது என்ற செய்திகள் வெளியாகியுள்ளன.





# ஒன்ராரியோவில் வாகனங்கள் கொள்வனவு செய்வோருக்கு காவல்துறை அறிவிப்பு!

ஆகத்து 18 2023

கனடாவில் வாகனங்களை கொள்வனவு செய்வோருக்கு பொலிஸார் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

குறிப்பாக ஒன்றாரியோவில் சட்டவிரோத வாகன விற்பனைகள் அதிகரித்துள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

விற்பனை செய்வதற்கு போதியளவு வாகனங்கள் இல்லாமை, வாகனங்கள் நாட்டுக்கு போதியளவு விநியோகம் செய்யப் படாமை போன் காரணிகளினால் வாகனங்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

அதிக சந்தர்ப்பங்களில் வாகனங்கள் கொள்ளையிடப்படுவதாகவும், இவை சட்டவிரோதமாக விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சட்டவிரோத வாகன விற்பனைகளை தடுக்க ரொரான்ரோ பொலிஸார் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வாகனங்கள் விலைக்கு வாங்கும் வாடிக்கையாளர்கள் பல்வேறு காரணிகளை கருத்திற் கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இவ்வாறான வாகன மோசடிகள் பற்றிய தகவல்கள் இருந்தால் அதனை அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.



# கனடா பிரிட்டிஷ் கொலம்பியாவில் இருந்து 30,000 பேரை வெளியேற உத்தரவு

ஆகத்து 20, 2023

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் வேகமாக காட்டுத் தீ பரவி வருவதால் 30,000 குடும்பங்களை உடனடியாக வெளி யேற உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த காட்டுத் தீ காரணமாக வெள்ளிக்கிழமை 15,000 பேரை உடனடியாக வெளியேறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். இந் நிலையில் வேகமாக பரவும் காட்டுத் தீயை அடுத்து மொத்தமாக 30,000 பேரை வெளியேற உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை அனைத்து அத்தியாவசியமற்ற பயணங்களும் பிரிட்டிஷ் கொலம்பியாவிற்கு தடை செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வெளியிட்டுள்ள பதிவில், "கூட்டாட்சி உதவிக்கான பிரிட்டிஷ் கொலம்பியாவின் கோரிக்கையைப் பெற்று, அதற்கு அனுமதி அளித்துள்ளோம். நாங்கள் கனேடிய ஆயுதப்படைகளின் பிற தளபாடப் பணி களுக்கு உதவ ஆதாரங்களை வழங்குதல், வெளியேற்றங்கள் ஆகியவற்றை வரிசைப்படுத்துகிறோம். தேவையான ஆதர வுடன் நாங்கள் தொடர்ந்து இங்கு இருப்போம்" என தெரிவித் துள்ளார்.






## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# ஒன்ராரியோ அரசாங்கத்தின் பசுமை வீடமைப்பு திட்டம் தொடர்பில் ஆர்சிஎம்பி பொலிசார் விசாரணை!

ஆகத்து 23, 2023

முதல்வர் டக் ஃபோர்ட் தலைமையிலான ஒன்றாரியோ மாகாண அரசாங்கம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

ஒன்றாரியோ அரசாங்கத்தின் பசுமை பகுதி வீடமைப்பு திட்டம் தொடர்பில் இவ்வாறு விசாரணைகள் ஆரம்பிக்கப் படவுள்ளன.

இந்த வீடமைப்பு திட்டத்தின் போது ஏதேனும் முறை கேடுகள் இடம்பெற்றதா என்பது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாகாண வீடமைப்பு அமைச்சின் பிரதம அதிகாரி ரயன் ஏற்கனவே தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

குறிப்பாக வீடமைப்பு திட்டத்திற்கான கட்டுமான நிறு வனங்களை தெரிவு செய்யும் போது பக்கச்சார்பாக செயற் பட்டதாக அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான ஓர் பின்னணியில் விசாரணைகள் ஆரம் பிக்கப்பட உள்ளதாகவும் அதிகாரபூர்வ விசாரணைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை எனவும் தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



# ஒன்ராரியோவில் மீண்டும் கோவிட் தொற்று அதிகரிப்பு!

ஆகத்து 23, 2023

ஒன்ராரியோ மாகாணத்தில் கோவிட் தொற்றாளர் எண் ணிக்கை அதிகரித்துச் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

பல மாதங்களாக தொற்று உறுதியாளர் எண்ணிக்கை தொடர்ச் சியாக குறைவடைந்து சென்ற நிலையில் மீண்டும் அதிகரிப்பு பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டுகளிலும் இவ்வாறு பருவ மாற்றங்களின் போது கோவிட் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிப்பு பதிவாகி இருந்தது என தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது ஈஜி5 என்னும் ஒமிக்ரோன் திரிபு வகை ஒன்று அதிக அளவு பரவி வருவதாகவும் இது வீரியமான ஓர் கோவிட் திரிபு எனவும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நோய் தொற்று பரவக்கூடிய ஆபத்தினை உடையவர்கள் தடுப் பூசிகளை உரிய முறையில் உரிய இடைவேளையில் ஏற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறினும் கடந்த காலங்களைப் போன்று பாரிய ஆபத் துக்கள் கிடையாது என மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.




# கனடாவின் பிரதிப்பிரதமர் வேகமாக காரை செலுத்தியமைக்கு அபராதம் விதிப்பு!

ஆகத்து 23, 2023

கனடாவில் வேகமாக வாகனத்தை செலுத்திய குற்றச்சாட்டின் கனடாவின் பிரதி ப்பிரதமருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் பிரதிப் பிரதமர் கிறிஸ்டியா பரிலாண்டுக்கு இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் தமக்கு சொந் தமாக ஒரு கார் இல்லை என ஃப்ரீ லேண்ட் தெரிவித்துள்ளார்.

வேகமாக வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் அடிப்படையில் அல்பர்ட்டா மாகாண அதிகாரிகள் ப்ரீலாண்டுக்கு 273 டாலர்கள் அபராதம் விதித்துள்ளனர்.

மணிக்கு 132 கிலோ மீட்டர் வேகத்தில காரை செலுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அல்பர்ட்டா மாகாணத்தில் அதிவேகமாக வாகனங்கள் செலுத் தக்கூடிய வேகக் கட்டுப்பாடு மணிக்கு 110 கிலோமீட்டர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவம் எப்போது இடம் பெற்றது என்பது பற்றிய விவரங்கள் வெளியிடப்படவில்லை.

இந்த அபராத தொகை முழுமையாக செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.



# ரொரான்ரோவில் வைரஸ் தொற்று குறித்து எச்சரிக்கை!

ஆகத்து 27, 2023

ரொரான்ரோவில் புதிய வகை வைரஸ் தொற்று தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வெஸ்ட் நைல் எனப்படும் வைரஸ் தொற்று தாக்கிய இரண்டு பேர் கண்டறியப்பட்டுள்ளனர்.

ரொரான்ரோ பொது சுகாதார முகவர் அலுவலகம் இந்த விபரத்தை வெளியிட்டுள்ளது.

ரொரான்ரோவின் எந்தப் பகுதியில் இந்த நோய் தொற்றாளர்கள் பதிவானார்கள் என்பது பற்றிய விபரங்கள் வெளியிடப் படவில்லை.

வெஸ்ட் நைல் வைரஸ் தாக்கத்திற்கு உள்ளான மனிதர்கள் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக் கப்படுகின்றது.

இந்த நோய் தொற்று தாக்கம் தொடர்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்றுமாறு ரொரான்ரோ மக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

காய்ச்சல், தலைவலி, தோல் ஒவ்வாமை, வாந்தி, வீக்கம் போன்ற பல்வேறு நோய் அறிகுறிகள் தென்படும் என அறிவுறுத் தப்பட்டுள்ளது.

நுளம்பு ஒன்றின் மூலம் இந்த நோய் தொற்று பரவுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# ஒன்ராரியோ பாடசாலைகளில் புதிய நடைமுறை அறிமுகம்!

ஆகத்து 29, 2023

ஒன்ராரியோ மாகாண பாடசாலைகளில் புதிய நடைமுறை யொன்று அறிமுகம் செய்யப்பட உள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

Ontario

மாகாண பாடசாலைகளில் புதிய பாடத்திட்டம் அமுல்படுத்தப் படும் என தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் செப்படம்பர் மாதம் புதிய நடைமுறை அறிமுகம் செய்யப்பட உள்ளது.

புதிய கல்வியாண்டிலிருந்து இந்த மாற்றங்கள் நடைமுறைப் படுத்தப்பட உள்ளது.

உளச்சுகாதாரம் மற்றும் கணித பாடம் தொடர்பில் புதிய பாடத் திட்டம் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

ஒன்பதாம் தரம் வரையிலான மாணவர்களுக்கு மொழி தொடர்பிலான புதிய விடயங்கள் கற்பிக்கப்பட உள்ளன.

வாசிப்பு, கூட்டெழுத்து என பல்வேறு மொழி விடயங்கள் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

தரம் பத்து மாணவர்களுக்கு டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் தொடர்பில் கற்பிக்கப்பட உள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.



# தமிழக செய்திகள்



## தமிழீழ விடுதலையின் தீவிர ஆதரவாளர் தடா சந்திரசேகரன் மறைவு!

ஆகத்து 15, 2023

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளரும், விடுதலை புலிகள் இயக்கத்தின் வழக்கறிஞராக செயல்பட்டவருமான தடா சந்திரசேகரன் உடல்நலக் குறைவு காரணமாக காலமானார்.

தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பின் தீவிர ஆதரவாளரும், விடுதலை புலிகள் இயக்கத்தின் வழக்கறிஞராக செயல்பட்டவருமான தடா சந்திரசேகரன் நேற்று திங்கட்கிழமை தமிழத்தில் உடல்நலக் குறைவு காரணமாக காலமானார்

தடா சந்திரசேகரனுக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்ட காரணத்தால் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் அவர் காலமானார் எனச் செய்திகள் வெளியாகின.

தடா சந்திரசேகரனின் மறைவு தமிழ்தேசிய ஆதரவாளர்கள் உள்ளிட்ட பலரை அதிர்ச்சியடைய வைத்து உள்ளது. அவரது மறைவுக்கு பல்வேறு தரப்பினர் இரங்கல் தெரிவித்து உள்ளார்.



## பொதுச்செயலாளர் மூத்தவர் சட்டத்தரணி நா. சந்திரசேகரன் அவர்களின் மறைவு, தமிழ்த் தேசியப் பேரினத்திற்கே ஏற்பட்ட பேரிழப்பு!

### சீமான் புகழ் வணக்கம்

ஆகத்து 15, 2023

மனித வாழ்வில் எத்தனையோ இழப்புகள் ஏற்படுகின்றன. அவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டு தாண்டி வருவதற்கு அளவற்ற மனவலிமை தேவைப்படுகிறது. என் வாழ்வில் இழப்புகளும் சோதனைகளும் நிறையும் தருணங்களில் எல்லாம் நான் கொண்டிருந்த ஒரே ஒரு நம்பிக்கை மூத்தவர் இருக்




கிறார் என்பது மட்டும்தான்.

அந்த நம்பிக்கையை தான் நான் இழந்து விட்டு அமர்ந்திருக்கிறேன்.

எனது மூத்தவர் இல்லாத உலகில் இனி என்ன செய்வது எனப் புரியாமல் திசை காட்டியை இழந்த மாலுமிப் போல தவித்து இருக்கிறேன். தனித்திருக்கிறேன்.

நானும், மூத்தவரும், அண்ணனும் வெவ்வேறு கருப்பைகளில் கரு கொண்டாலும், இலட்சிய உறுதியில் ஒரே மனிதனாக உரு கொண்டவர்கள். என்னை நோக்கி வரும் சோதனை அம்புகளை எல்லாம் எதிர்கொண்டு கர்ணனின் கவசம் போல என்னை காத்து நின்றவர் அவர்தான்.

எனக்கு மட்டுமல்ல, என்னுயிர் அண்ணன் நம் தேசியத் தலைவர் மேதகு வே பிரபாகரன் அவர்களுக்கும், நம் தேசியப் படையான விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் அவர் வழக்கறிஞர் மட்டுமல்ல, நம்பிக்கைகளின் இருப்பிடம். நம் மூத்தவரும் அப்படித்தான். நம் தேசியத் தலைவரின் தாய் தந்தையரான அம்மா பார்வதி அம்மாள் அப்பா வேலுப்பிள்ளை ஆகியோரை தமிழகத்தில் வைத்து பராமரித்து தன் தாய் தந்தையர் என பாதுகாத்தவர் அவர். கொடும் தடா சட்டத்தில் சிக்கிக்கொண்ட நம் சொந்தங்களை எல்லாம் மீட்டு வெறும் சந்திரசேகராக இருந்த நமது மூத்தவர் தடா சந்திரசேகராக மாறிய கதை நம் இனத்திற்கான விடுதலை வரலாற்று பக்கங்களில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

வெறும் வழக்கறிஞர் மட்டுமல்ல, அவர் ஒரு தேர்ந்த ஆளுமை. எதிர் வருபவற்றை கணிக்கின்ற திறமை, கூர்ந்த சொற்கள், சட்டப் புலமையில் கொண்டிருந்த மேதமை, இன நலனின் மீது செலுத்திய மாசற்ற பேரன்பு என பன்முகத்தன்மையில் அவரைப் போல இனி யார் என்ற வினாவை நமக்குள் விதைத்து விட்டு மூத்தவர் விடைபெற்று சென்று விட்டார்.

தனிப்பட்ட முறையில் எனது மூத்த அண்ணனாக, என் குடும்பத்தின் தலைவனாக, நான் எடுக்கின்ற ஒவ்வொரு முடிவிலும் என்னை செதுக்கி என்னை செம்மைப்படுத்துவராக இருந்த எனது மூத்தவர் என்னை விட்டுப் போனது எதனாலும் என்னை மீட்க முடியாத கொடும் வேதனையில் தள்ளி இருக்கிறது.

எப்போதெல்லாம் தமிழர்கள் இன்னலுக்கு உள்ளாகின்றார்களோ அப்போதெல்லாம் உங்களுக்கு வழக்கு மன்றத்தில் வழக்காடவும், உங்களைக் காப்பாற்றவும் நான் இருக்கிறேன் என்ற மூத்தவர் தந்த உறுதியும் நம்பிக்கையும் இனி யார் தருவார்..?

ராஜீவ் கொலை வழக்கில் சிக்குண்டு தவித்த ஏழு தமிழர் விடுதலைக்காக தன் வாழ்வின் பெரும்பாலான பொழுதுகளை கழித்து அவர்களை காத்த நம் மூத்தவரின் இனப்பற்று கொண்ட ஆன்மா போல இனி எவருக்கு உள்ளம் வாய்க்கும்..?

நாம் தமிழர் என்கின்ற இனமான படையில் தன்னை முதன்மைத் தளபதியாக இணைத்துக் கொண்டு நாடெங்கிலும் இருக்கின்ற இலட்சக்கணக்கான தம்பி தங்கைகளுக்கு மூத்தவராக மாறிப்போன அந்தக் கனிவும் அந்தக் கண்ணியமும் கொண்ட அன்பு இதயம் இனி யாருக்கு இருக்கும்..?

அவரைப் பற்றி நினைக்க நினைக்க உள்ளுக்குள் ஊறிக் கொண்டே இருக்கின்ற நினைவலைகளை எதை கொண்டு தடுப்பது என தெரியாமல் நான் தவிக்கிறேன். கண்ணின் இமை போல என்னைக் காத்தவர் தன் உடல் நலத்தைப் பாதுகாக்காமல் விட்டுவிட்டாரே என

உள்ள வலியில் நோகுகிறேன்.

உலகம் முழுக்க வாழ்கின்ற தமிழ்த் தேசிய இனத்திற்கு நிகழ்ந்து விட்டிருக்கின்ற இந்த பேரிழப்பு எதனாலும் ஈடு செய்ய முடியாது.

என் மூத்தவரை இழந்து வாடுகின்ற எனது குடும்பத்தார் உற்றார் உறவினர் நாடெங்கிலும் இருக்கின்ற எனது தம்பி தங்கைகள் அனைவருக்கும் ஆறுதல் கூற வார்த்தைகள் இன்றி இருக்கிறேன்.

எந்த இன விடுதலை என்ற மகத்தான இலக்கிற்காக அவர் நமக்கு மூத்தவராக மாறி முன் நின்றாரோ அந்த மகத்தான இலட்சியங்களை வென்றெடுக்க நம் உயிருள்ளவரை உழைப்போம் என உறுதி ஏற்பது தான் நாம் நம் மூத்தவர் மீது கொண்டிருக்கின்ற அளவற்ற பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் செய்கின்ற தகுதி.

அவரது ஆன்மா நம்மை எப்போதும் வழிநடத்தும். அவரது மூச்சுக்காற்று நம் லட்சியப் பாதையில் நம் துயர் அகற்றும்.

நாம் தமிழர் கட்சியின் பொதுச் செயலாளர் என்னுயிர் அண்ணன் என் மூத்தவர் தடா சந்திரசேகர் அவர்களுக்கு எனது கண்ணீர் வணக்கத்தை செலுத்தி அவர் கொண்டிருந்த கனவுகளை அவரது உடன் பிறந்தவன் என்கின்ற முறையில் உறுதியாக நிறைவேற்றுவேன் என உறுதி அளிக்கிறேன்.

மூத்தவருக்கு தமிழ் தேசிய இனத்தின் சார்பாக எனது புகழ் வணக்கம்!

செந்தமிழன் சீமான்
தலைமை ஒருங்கிணைப்பாளர்
நாம் தமிழர் கட்சி

## காவிரி தொடர்பான கர்நாடகத்தின் அதிகாரத்தைப் பறிக்க வேண்டும்!

### பாமக நிறுவனர் ராமதாஸ்

ஆகத்து 23, 2023

தமிழ்நாட்டுக்கு தண்ணீர் வழங்கும் அதிகாரம் கர்நாடக அரசிடமிருந்து பறிக்கப்பட்டு, தன்னாட்சி அதிகாரம் பெற்ற அமைப்பிடம் வழங்கப்பட வேண்டும் என பாமக நிறுவனர் ராமதாஸ் புதன் கிழமை வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளார்.

“காவிரி மேலாண்மை வாரியத்துக்கு மாதிரியாக நடுவர் மன்றத்தால் கூறப்பட்டுள்ள பக்ரா பியாஸ் மேலாண்மை வாரியம் அனைத்து அதிகாரங்களையும் கொண்டதாக உள்ளது,” என்றும் ராமதாஸ் குறிப்பிட்டு உள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், “இந்த வாரியம்தான் பக்ரா, நங்கல், பியாஸ் திட்டங்களின் அணைகளை இயக்கி பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான், இமாச்சலப் பிரதேசம், சண்டிகர், டெல்லி ஆகிய 7 மாநிலங்களுக்கு நீரையும் மின்சாரத்தையும் வழங்கி வருகிறது. 55 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் இந்த அமைப்பு எந்தச் சிக்கலும் இல்லாமல் நீரையும் மின்சாரத்தையும் பகிர்ந்தளித்து வருகிறது.

“காவிரி நடுவர் மன்றம் 1991ஆம் ஆண்டு வழங்கிய இடைக்காலத் தீர்ப்பும் 2005ஆம் ஆண்டு வழங்கிய இறுதித் தீர்ப்பும் கர்நாடக அரசால் ஓர் ஆண்டுகூட சரியாகச் செயல்படுத்தப்படவில்லை. அதனால் இப்போதைய அமைப்பு மாற்றப்பட வேண்டும்.

“பக்ரா பியாஸ் மேலாண்மை வாரியத்துக்கு வழங்கப்பட்



டிருப்பது போன்று, காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அனைத்து அணைகளையும் இயக்கும் அதிகாரத்தை காவிரி மேலாண்மை ஆணையத்துக்கு மத்திய அரசு வழங்க வேண்டும்.

“இதுகுறித்து உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்து வெற்றி பெற வேண்டும் என வலியுறுத்துகிறேன்,” என்று கூறியுள்ளார்.

# "மீனவர்கள் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண கச்சதீவை மீட்க வேண்டும்"

## முதல்வர் ஸ்டாலின்

ஆகத்து 18, 2023

பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக இராமநாதபுரம் மாவட்டத்திற்கு சென்றுள்ள முதல்வர் ஸ்டாலின், மண்டபத்தில் நடைபெற்று வரும் மீனவர் நல மாநாட்டில் கலந்துகொண்டுள்ளார். இதில் அவர்களுடன் மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட பல்வேறு அமைச்சர்கள் கலந்துகொண்டுள்ளனர்.




இந்த மாநாட்டில் பேசிய முதல்வர் ஸ்டாலின் கச்சதீவு மீட்பது குறித்தும், மீனவர்கள் மீதான தாக்குதல் குறித்தும் தனது கண்டனத்தை தெரிவித்திருக்கிறார். "தமிழ்நாடு மீனவர்களை இலங்கை படை தொடர்ந்து தாக்குவதை மீனவர்கள் மாநாடு வன்மையாக கண்டிக்கிறது. 2014ல் மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு அடக்குமுறை இன்னும் அதிகமாகியுள்ளது. பா.ஜ.க. ஆட்சியின் போது மீனவர்கள் மீது 48 முறை தாக்குதல் நடைபெற்றுள்ளது. பிரதமர் மோடியின் ஆட்சி பலவீனமாக இருப்பதால், மீனவர்கள் மீதான இலங்கை படையினரின் தாக்குதல் தொடர்கிறது.

மீனவர்கள் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண கச்சதீவை மீட்க வேண்டும். பிரதமர் சென்னைக்கு வரும்போதெல்லாம் இந்த பிரச்சனை குறித்து கோரிக்கை வைத்துள்ளோம். சமீபத் தில் இலங்கை அதிபர் இந்தியா வந்தபோதும் கச்சதீவை மீட்கக்கோரி பிரதமருக்குக் கடிதம் எழுதினேன். கச்சதீவை திமுக அரசு தாரை வார்த்து விட்டதாக வரலாறு தெரியாமல் உளறுகிறார்கள். கச்சதீவு இந்தியாவுக்குத்தான் சொந்தம் என்பதை உறுதிசெய்யும் அறிக்கையை 1972 ஆம் ஆண்டு



கலைஞர் வெளியிட்டார். கலைஞரின் எதிர்ப்பை மீறித்தான் கச்சதீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டது. கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்ட பிறகும் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியைச் சந்தித்து மீட்கக் கலைஞர் வலியுறுத்தினார். கச்சதீவு இலங்கையின் ஒரு பகுதியாக எந்த காலத்திலும் இருந்ததில்லை. 1954 ஆம் ஆண்டு இலங்கை வெளியிட்டவரைப்படத்தில் கச்சதீவு இலங்கைக்குச் சொந்த மில்லை என்ற தகவல் வெளியானது. கச்சதீவு இந்தியாவின் ஒருபகுதி என்பதை நிரூபிப்பதற்கான ஆதாரங்களைத் திரட்டி மத்திய அரசுக்கு அளித்தவர் கலைஞர். கச்சதீவை மீட்க கோரி தமிழ்நாடு சட்டமன்றத்திலும் கலைஞர் தீர்மானம் நிறைவேற்றினார்.

கச்சதீவை இலங்கைக்குக் கொடுத்ததால் தமிழ்நாட்டுக்குத் தான் முதல் ஆபத்து என்று நாடாளுமன்றத்தில் குரல் கொடுத் தவர் முரசொலி மாறன். அத்தோடு மட்டுமில்லாமல், கச்சதீவை மீட்க வேண்டும் என்ற கோரிக்கைக்குச் செவி சாய்க்காததால் நாடாளுமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்தார். மேலும் இந்த நடவடிக்கைக்கு எதிராகத் தமிழகம் முழுவதும் மாபெரும் போராட்டத்தை திமுக நடத்தியது. ஆனால் சிலர் கச்சதீவு பற்றி அடிப்படை அறிவு இல்லாமல் குறைந்தபட்ச நேர்மை இல்லாமலும் பேசி வருகின்றனர்" தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

# கச்சதீவை மீட்க கோரி தீர்மானம் நிறைவேற்றம் தி.மு.க. அரசு மீது கடும் விமர்சனம்!

ஆகத்து 20, 2023

மதுரையில் மிகப் பிரம்மாண்டமாக நடைபெற்ற அ.தி.மு.கவின் பொன்விழா எழுச்சி மாநாட்டில் தமிழ்நாட்டிற்கு தேவையான கச்சதீவை மீட்டெடுக்கும் வகையில் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை துரிதப்படுத்த திமுக அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

அத்துடன் திருக்குறளை மத்திய அரசு தேசிய நூலாக அறிவிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட 32 தீர்மானங்களும் இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அ.தி.மு.க பொன்விழா எழுச்சி மாநாடு அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் மதுரையில் இன்று நடைபெற்றது.

இந்த மாநாட்டில் தமிழ்நாட்டில் இயங்கும் அனைத்து கல்வி நிறுவனங்களிலும் தமிழ் மொழியை கட்டாய பாட மொழியாக்கவும் பயிற்று மொழியாக்கவும் மத்திய அரசுக்கு வலியுறுத்தல் வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்பு சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வந்து தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து அட்டவணை மொழிகளையும் மத்திய அரசின் அலுவல் மொழிகளாக கொண்டு வர மத்திய அரசுக்கு வலியுறுத்த வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை புதுச்சேரி மாநிலம் என்று நிலை உயர்த்த மத்திய அரசை வலியுறுத்துவதுடன், அதிமுக கொண்டு வந்த திட்டங்களுக்கு மூடு விழா நடத்தும் திமுக அரசுக்கு கண்டனமும் வெளியிடப்பட்டுள்ளது.

வரிச்சுமை, மின்கட்டண  உயர்வை மக்கள் மீது திணிக்கும் மற்றும் ஏழை எளிய மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் கட்டுமான பொருட்கள் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த தவறிய திமுக அரசுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலை, கொள்ளை, வழிப்பறி, கள்ளச்சாராயம், சட்டம் ஒழுங்கு சீர்கேடுகளுக்கு காரணமாக மற்றும் அனைத்து குடும்ப தலைவிகளுக்கும் உரிமை தொகை வழங்காத திமுக அரசுக்கு கண்டனம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இரண்டு ஆண்டுகளில் 3 இலட்சம் கோடி கடன் வாங்கி இந்தியா



விலேயே கடன் வாங்கிய மாநிலங்களில் தமிழ் நாட்டை முதல் மாநிலமாக்கிய திமுக அரசு, தமிழ் நாட்டு விவசாயிகளை வஞ்சிப்பதாகவும் கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.

மேக தாதுவில் அணை கட்டும் கர்நாடக அரசின் நடவடிக்கையை கண்டிக்காமல் காங்கிரஸ் கட்சியின் பதவியேற்பு விழாவிற்கு சென்ற மு.க.ஸ்டாலினுக்கு கண்டனம் தெரிவித்து அ.தி.மு.க எழுச்சி மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# சுங்கச்சாவடிகளில் 35 வீதம் தமிழகத்தில் தான் உள்ளன!

## தமிழக வாழ்வுரிமைக்கட்சி தலைவர் வேல்முருகன்

ஆகத்து 23, 2023

இந்தியாவில் மொத்தமுள்ள சுங்கச்சாவடிகளில் 35 சதவீதம் தமிழகத்தில்தான் உள்ளது என்று சட்டப்பேரவை உறுதி மொழிக் குழு தலைவர் வேல்முருகன் எம்எல்ஏ தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஆய்வு மேற்கொண்ட சட்டப்பேரவை உறுதி மொழிக்குழுவினர், ஆய்வின் ஒரு பகுதியாக விக்கிரவாண்டி சுங்கச் சாவடியை ஆய்வு செய்தனர். அதைத் தொடர்ந்து குழுவின் தலைவர் கூறுகையில் இந்தியாவிலேயே அதிக அளவு சுங்கச்சாவடிகள் தமிழகத்தில்தான் உள்ளன. இந்தியாவில் மொத்தமுள்ள சுங்கச்சாவடிகளில் 35 சதவீதம் தமிழகத்தில் உள்ளது.

சுங்கச் சாவடிகளில் கட்டணமின்றி செல்ல அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள வாகனங்கள் செல்ல தனி வழியை ஏற்படுத்த வேண்டும். விவசாயிகள் தாங்கள் விளைவித்த விளை பொருட்களை சுங்கச்சாவடியில் கொண்டு செல்லும்போது, அந்த வாகனங்களுக்கு விலக்களிக்க வேண்டும். இவை தொடர்பாக மாநில அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும்.

திமுக ஆட்சி பொறுப்பேற்ற 2 ஆண்டுக் காலத்தில் பல்வேறு உறுதிமொழிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

கடந்த இரு தினங்களுக்கு முன் கள்ளக்குறிச்சி மாவட்ட சுங்கச்சாவடியில் சட்டப்பேரவை உறுதி மொழிக்குழுவைச் சேர்ந்த மோகன் எம்எல்ஏவின் வாகனம் சுங்கவரி கேட்டு தடுத்து நிறுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து சர்ச்சை எழுந்தது குறிப்பிடத்தக்கது.



# உலக செய்திகள்

## யேர்மனின் தலைநகரில் நடைபெற்ற செஞ்சோலை படுகொலையின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல்!

ஆகத்து 15, 2023

முல்லைத்தீவு மாவட்டத்தின் வள்ளிபுனம் பகுதியில் அமைந்திருந்த செஞ்சோலை சிறுமிகள் இல்லத்தின் மீது, கடந்த 2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம்



14ஆம் திகதி சிங்கள பேரினவாத அரசின் விமானப் படையினர் நடத்திய குண்டுத் தாக்குதலில், 53 அப்பாவி சிறுமிகள் கொல்லப்பட்டதோடு, 129 பேர் படுகாயமடைந் தனர். குறித்த தாக்குதலில் காயமடைந்த பலர் தமது அவயவங்களை இழந்த நிலையில் வாழ்க்கையில் இன் றும் போராடிக்கொண்டிருக்கின்றனர்.

செஞ்சோலை படுகொலையின் 17 ஆம் ஆண்டு நினைவு நாளான இன்றைய தினம் யேர்மனி தலைநகரம் பேர்லினில் கவனயீர்ப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இவ் நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள் கொல்லப்பட்ட செஞ்சோலை சிறுமிகளை நினைவில் ஏந்தி மலர் தூவி சுடர் ஏற்றி வணங்கினர்.

செஞ்சோலையில் கொல்லப்பட்ட சிறுமிகளை நினைவில் நிறுத்தி அவர்களின் படங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு , ஈன இரக்கமற்ற



சிங்க பேரினவாத அரசின் படுகொலையை வெளிப் படுத்தும் முகமாக பதாதையை ஏந்தியவாறு இளையோர் களால் பல்லின மக்களுக்கு யேர்மன் மொழியில் விளக்கங்கள் வழங்கப்பட்டது.

## தீவிபத்தில் ஹவாயில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 100ஐத் தாண்டியுள்ளது!

ஆகத்து 17, 2023

அமெரிக்காவின் ஹவாய் தீவில் பரவிய தீவிபத்தில் உயிரிழந் தவர்களின் எண்ணிக்கை 100-ஐ தாண்டியுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது .

இதனால் பெரும்பாலான வீடுகள் தீப்பிடித்து எரிந்துள்ள நிலையில் 25 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்கள் தீயில் கருகியுள்ளன.

குறித்த காட்டுத்தீயில் சிக்கி இதுவரை 106 பேர் உயிரிழந்துள்ள நிலையில் 1300-க்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சுற்றுலாவாசிகளின் சொர்க்கபுரியாக திகழ்ந்த ஹவாய் தீவு இன்று காட்டுத்தீயினால் உருக்குலைந்துபோயுள்ளது.



## ஆவுஸ்ரேலியா மெல்பேர்னில் பாலியல் குற்றச்சாட்டை எதிர்கொள்ளும் சிறீலங்கா பௌத்த தேரர்!

ஆகத்து 18, 2023

இலங்கையை பின்புலமாக கொண்ட மெல்பேர்னை சேர்ந்த பௌத்தமதகுரு ஒருவர் சிறுவர் பாலியல் துஸ்பிரயோக குற்றச் சாட்டுகள் தொடர்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.

1990 முதல் 2000 வரையிலான காலப்பகுதியில் சிறுவர் பாலியல் துஸ்பிரயோகங்களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட் டுகள் தொடர்பிலேயே பௌத்தமதகுரு நீதிமன்றத்தில் ஆஜ ராகியுள்ளார்.

மெல்பேர்னின் தென்கிழக்கில் உள்ள தம்ம சரண ஆலயத்தின் மடாதிபதியான நாவோடுன்ன விஜித நாணயக்கார தேரர் 16 வயது உட்பட்டவர்களுடன் உடலுறவில் ஈடுபட்டது அநாகரீக மான விதத்தில் நடந்துகொண்டது உட்பட 13 குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளார்.

காவல்துறையினர் இந்த வாரம் அவருக்கு எதிராக குற்றச்சாட் டுகளை சுமத்தினர். மூவர் பௌத்தமதகுருவிற்கு எதிராக முறைப்பாடு செய்ய முன்வந்துள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த சம்பவங்கள் 1996 முதல் 2004 வரை யிலான காலப்பகுதி யில் குறிப்பிட்ட மதகுரு கெய்ஸ்பொரோ ஆலயத்தில் இருந்த வேளை இடம்பெற்றுள்ளன.

சந்தேகநபரான் தேரர் பல சிறுமிகளிடம் அநாகரீகமான விதத்தில் நடந்துகொண்டார் என காவல்துறையின் விசாரணை பிரிவினர் தெரிவித்துள்ளமை நீதிமன்ற ஆவணங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

குற்றசாட்டை எதிர்கொண்டுள்ள பௌத்த மதகுரு காவி உடை யுடன் வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தமை குறிப் பிடத்தக்கது.




## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# பிரித்தானியாவில் 07 குழந்தைகளை கொன்ற பெண்ணுக்கு வாழ்நாள் சிறை!

ஆகத்து 21, 2023

பிரித்தானியாவில் உள்ள கவுண்டஸ் ஆப் செஸ்டர் மருத்துவமனையில் கடந்த 2015-ம் ஆண்டு ஜூன் முதல் 2016-ம் ஆண்டு ஜூன் வரையிலான காலகட்டத்தில் பிறந்த குழந்தைகள் வழக்கத்துக்கும் அதிகமாக இறப்பு, திடீர் உடல் நலக்குறைவால் பாதிக்கப்படுவது போன்ற சம்பவங்கள் நடந்தன.

பொலிஸார் நடத்திய விசாரணையில் அந்த மருத்துவ மனையில் லூசி லெட்பி என்ற நர்சு, சிசுக்கள் உயிரிழப்பு அதிகரித்த சம்பவங்களின்போது பணியாற்றியது தெரிய வந்துள்ளது.

இதுபோன்ற சம்பவங்களின்போது அந்த இடத்தில் லூசி லெட்பி இருந்ததாக மருத்துவமனை நிர்வாகமும் தெரிவித்தது.

பொலிஸார் தொடர்ந்து மேற்கொண்ட விசாரணையில், குழந்தைகளின் சிகிச்சைக்கு பிந்தைய மருத்துவ குறிப்பேடுகள், லூசி லெட்பி வீட்டிலிருந்து சாட்சியங்களாக பறிமுதல் செய்யப்பட்டன.

இதையடுத்து தாதி லூசி லெட்பி 2018-ம் ஆண்டு கைது செய்யப்பட்டு மான்செஸ்டர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

நோய்வாய்ப்பட்ட அல்லது குறை பிரசவத்தில் பிறந்த குழந்தைகளுக்கு அதிக பால் ஊட்டியும், இன்சுலினுடன் விஷத்தை கொடுத்தும், குழந்தைகளுக்கு ரத்த ஓட்டத்தில் ஊசி மூலம் காற்றை செலுத்தியும், அதிகப்படியான பால் அல்லது திரவங்களை கட்டாயமாக கொடுத்தும் 7 குழந்தைகளை கொன்றதாகவும், 6 குழந்தைகளை கொலை செய்ய முயன்றதாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

விசாரணையின் முடிவில் அவர் மீதான குற்றச்சாட்டுகள் உறுதி செய்யப்பட்டதையடுத்து அவரை குற்றவாளி என நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதனையடுத்து அவருக்கான தண்டனை தொடர்பான வாதம் இன்றைய தினம் (21-08-2023) நடைபெற்றது.

இந்த வாதத்தின் நிறைவில், தாதி லூசி லெட்பி மிகவும்



கொடூரமான குற்றங்களை செய்திருப்பதால் அவர் ஆயுள் முழுவதும் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

எனவே, அவர் எஞ்சியுள்ள வாழ்நாளை சிறையில் கழிக்க வேண்டும். பிரித்தானியாவில் 70 வகையான குற்றங்களுக்கு, வாழ்நாள் முழுவதும் சிறை தண்டனை விதிக்க சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதற்கு முன்பு 3 பெண்களுக்கு மட்டுமே இத்தகைய சிறை தண்டனை வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# நிலவில் கால்பதித்து வரலாறு படைத்த இந்தியா!

ஆகத்து 23, 2023

திட்டமிட்டபடி நிலவின் தென்துருவப் பகுதியில் தரையிறங்கி சாதனை படைத்துள்ளது இந்தியாவின் 'சந்திரயான்-3' விண்கலம்.





கடந்த யூலை 14ஆம் தேதி விண்ணில் ஏவப்பட்ட அவ்விண்கலத்தின் விக்ரம் இறங்குகலம் (லேண்டர்) இந்திய நேரப்படி புதன்கிழமை மாலை 6.04 மணிக்கு நிலவில் கால்பதித்தது.

இதற்குமுன் எந்த ஒரு நாடும் நிலவின் தென்துருவப் பகுதிக்கு விண்கலம் அனுப்பியதில்லை.

இந்தியாவின் சந்திரயான்-2 விண்கலத்தை நிலவில் தரையிறக்கும் முயற்சி, கடைசி நேரத்தில் கைகூடாமல் போனது.

அதனையடுத்து, பல்வேறு மாற்றங்களுடன் கூடிய சந்திரயான்-3 விண்கலம் வடிவமைக்கப்பட்டு, இலகு ரக 'எம்எல்வி-3' உந்துகணை மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது.



இம்மாதம் 17ஆம் தேதி விண்கலத்தின் சுற்றுகலத்தில் (ஆர்பிட்டர்) இருந்து விக்ரம் இறங்குகலம் விடுவிக்கப்பட்டது.

இறுதியாக, குறைந்தபட்சம் 25 கி.மீ. தொலைவும் அதிகபட்சம் 134 கி.மீ. தொலைவும் கொண்ட சுற்றுப்பாதையில் இறங்குகலம் கொண்டுவரப்பட்டது.

பின்னர் நிலவின் தரைப்பகுதியிலிருந்து 150 மீட்டர் உயரத்திற்குக் கொண்டுவரப்பட்ட இறங்குகலம், அந்நிலையிலேயே சில நொடிகள் நிறுத்தி வைக்கப்பட்டது.

அதன்பின் உணர்கருவிகள் மூலம் தரையிறங்கத் தோதான, சமதளமான பரப்பு தேர்வுசெய்யப்பட்டது.

இறங்குகலத்தின் வேகம் பூஜ்ஜியமானதும் அதனை மெதுவாக நிலவில் தரையிறக்கும் முயற்சியில் இந்திய விண்வெளி ஆய்வுக் கழக (இஸ்ரோ) அறிவியல் வல்லுநர்கள் இறங்கினர். அதில் அவர்கள் வெற்றியும் பெற்று புதிய சாதனை படைத்தனர்.

தங்களின் கனவு நனவானதும் அவர்கள் உற்சாகக் குரல் எழுப்பியும் ஒருவரையொருவர் ஆரத் தழுவியும் தங்களது மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்டனர்.

இதனையடுத்து, "ஒட்டுமொத்த மனித குலத்துக்கும் கிடைத்த வெற்றி நிலவுக்கு மனிதனை அனுப்புவதுதான் அடுத்தகட்டத் திட்டம். இஸ்ரோ மாபெரும் வரலாறு படைத்துள்ளது. சூரியனை ஆய்வு செய்ய ஆதித்யா எல் 1 விண்கலம் விரைவில் அனுப்பப்படும்," என்று தென்னாப்பிரிக்காவில் இருந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி காணொளி வாயிலாகப் பெருமிதத்துடன் தெரிவித்தார்.



# விரிவாக்கமாகும் பிரிக்ஸ் நாடுகள்!

ஆகத்து 24, 2023




பிரிக்ஸ் கூட்டமைப்பின் 15வது உச்சி மாநாடு தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகரில் கடந்த 22ஆம் திகதி தொடங்கியது. இதில் பிரதமர் நரேந்திர மோடி, தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ராம்போசா, பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ சில்வா, சீன அதிபர் ஜி ஜின்பிங், ரஷ்ய வெளிவுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் ஆகியோர் கலந்து கொண்டனர். ரஷ்ய அதிபர் புதின் காணொளி வாயிலாகக் கலந்து கொண்டார்.

பிரிக்ஸ் மாநாட்டில் இரண்டாவது நாளான நேற்று நடைபெற்ற கூட்டத்தில், பிரிக்ஸ் நாடுகளின் செயல்பாடுகள், பிரிக்ஸ் கூட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. குறிப்பாக, பிரிக்ஸ் கூட்டமைப்பை விரிவாக்கம் செய்வது தொடர்பாக விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, பிரிக்ஸ் கூட்டமைப்பை விரிவுபடுத்த இந்தியா முழு ஆதரவு அளிப்பதாகவும், பிரிக்ஸ் கூட்டமைப்பில் உள்ள அனைத்து நாடுகளின் ஒத்துழைப்புடன் இந்த விரிவாக்கத்தை செய்யலாம் என்றும் பரிந்துரை செய்தார். அதேபோல், பிரிக்ஸ் கூட்டமைப்பை விரிவுபடுத்தும் நடவடிக்கைக்கு சீன அதிபர் ஜின் பிங்கும் ஆதரவு தெரிவித்தார். உலகளவில் பிரிக்ஸ் கூட்டமைப்பை வலுப்படுத்த, கூடுதலாக வளரும் நாடுகளை சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என் ஜின் பிங் கூறினார்.

இதைத் தொடர்ந்து மூன்றாவது நாளாக இன்று நடைபெற்ற கூட்டத்தில் பிரிக்ஸ் விரிவாக்கம் தொடர்பாக முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. இக்கூட்டத்தைத் தொடர்ந்து பிரிக்ஸ் நாடுகளின் தலைவர்கள் கூட்டாக செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தனர்.

அப்போது பேசிய தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ராம்போசா, "பிரிக்ஸ் கூட்டமைப்பு விரிவாக்கத்தை ஒரு பகுதியாக ஆறு நாடுகள் இணைக்கப்பட்ட உள்ளன. முதற்கட்டமாக அர்ஜென்டினா, எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் இணைக்கப்பட் உள்ளன. இந்த புதிய உறுப்பினர்கள் சேர்க்கை வரும் 2024ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி முதல் அமலுக்கு வரும்" என்று தெரிவித்தார்.

அவரைத் தொடர்ந்து பேசிய பிரதமர் மோடி, "பிரிக்ஸ் கூட்டமைப்பில் புதிய உறுப்பினர்களை சேர்ப்பது கூட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் என இந்தியா நம்புகிறது. இதற்கு இந்தியா எப்போதும் ஆதரவு அளித்து வருகிறது. பிரிக்ஸ் கூட்டமைப்பில் சேர உள்ள புதிய நாடுகளுடன் இந்தியா வரலாற்று உறவுகளைக் கொண்டுள்ளது" என்றார்.

# வாக்னர் குழுவின் தலைவர் பிரிகோஜின் விமானவிபத்தில் உயிரிழந்துள்ளார்!

ஆகத்து 24, 2023

வாக்னர் குழுமத்தின் நிறுவனர் யெவ்ஜெனி பிரிகோஜின் நேற்று புதன்கிழமை ரஷ்யாவில் ஒரு வணிக விமானத்தில் பயணித்தபோது விபத்துக்குள்ளாகி உயிரிழந்ததாக ரஷ்ய விமானப் போக்குவரத்து அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவருடன் விமானத்தில் இருந்த 10 பேரும் மூன்று பணியாளர்கள் உட்பட அனைவரும் விபத்தில் கொல்லப்பட்டனர். அந்த விமானத்தில் யெவ்ஜெனி பிரிகோஜின் இருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

முதல் விசாரணையைத் தொடர்ந்து விபத்து நடந்த இடத்தில் எட்டு உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக ரஷ்ய அரசு செய்தி நிறுவனம் RIA நோவோஸ்டி தெரிவித்துள்ளது.

ப்ரிகோஜினின் கூட்டாளியான டிமிட்ரி உட்கினும் வாக்னரின் செயல்பாடுகளை நிர்வகித்தவரும் வாக்னர் தலைவருடன் விமானத்தில் பயணித்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

வாக்னருடன் இணைந்த டெலிகிராம் சேனல் கிரே சோன் பிரிகோஜினின் மரணத்தை உறுதிப்படுத்தியது. அவரை ஒரு ஹீரோ மற்றும் தேசபக்தர் என்று அழைத்தது.

ரஷ்யாவிற்கு துரோகிகள் என்று அடையாளம் தெரியாத நபர்களின் கைகளால் அவர் இறந்துவிட்டார் என்றும் அந்த இடுகை கூறுகிறது.

ட்வெர் பகுதியில் இன்று இரவு நிகழ்ந்த எம்ப்ரேயர் விமான விபத்து குறித்து விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. பயணிகள் பட்டியலில், யெவ்ஜெனி பிரிகோஜினின் பெயரும் குடும்பப் பெயரும் இடம் பெற்றுள்ளன என்று ரஷ்ய சிவில் ஏவியேஷன் அதிகாரி தெரிவித்தார்.

ரஷ்ய தலைநகருக்கு வடக்கே 100 கிலோமீட்டர் (60 மைல்) தொலைவில் உள்ள டிவெரில் உள்ள குசென்கினோ கிராமத்திற்கு அருகே ஜெட் விமானம் மாஸ்கோவில் இருந்து செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நோக்கி சென்று கொண்டிருந்ததாக கூறப்படுகிறது.



யூன் 23 அன்று மாஸ்கோவிற்கு எதிரான ஒரு குறுகிய கால கலகத்தில் தனது கூலிப்படை வீரர்களை வழிநடத்தியதில் இருந்து பிரிகோஜின் இருக்கும் இடம் குறித்து பல கேள்விகள் உள்ளன.

# பிராக்ஸில் அரசு நடத்தும் பள்ளிகளில் இஸ்லாமிய பெண்கள் 'பர்தா' அணிய தடை!

ஆகத்து 29, 2023

பிரான்ஸ் அரசு நடத்தும் பள்ளிகளில் இஸ்லாமிய பெண்கள் அணியும் தளர்வான, முழு நீள அங்கியான பர்தா (அபாயா) எனப்படும் ஆடையை அணிவதை தடை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாக அதன் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.



பிரான்ஸ், 19ம் நூற்றாண்டு சட்டங்கள் பொதுக் கல்வியில் இருந்து பாரம்பரிய கத்தோலிக்க செல்வாக்கை நீக்கியதில் இருந்து அரசு பள்ளிகளில் மத அடையாளங்களுக்கு கடுமையான தடையை அமல்படுத்தியது.

மேலும், வளர்ந்து வரும் முஸ்லீம் சிறு பான்மையினரைக் கையாள்வதற்கான வழிகாட்டுதல்களை புதுப்பிக்கவும் போராடியது. 2004ம் ஆண்டில், பள்ளிகளில் முக்காடு அணிவதைத் தடை செய்தது மற்றும் 2010ம் ஆண்டில் பொது இடங்களில் முழு முகத்தை மூடுவதற்குத் தடை விதித்தது. இந்த தடை உத்தரவுகள் அங்கு வசித்து வரும் ஐந்து மில்லியன் வலிமையான இஸ்லாமிய சமூகத்தில் சிலரைக் கோபப்படுத்தியது.



மதச்சார்பின்மையைப் பாதுகாப்பது என்பது பிரான்சில் ஒரு பேரணியாக உள்ளது. இந்நிலையில், "பள்ளிகளில் இனி பர்தா அணிய முடியாது என்று முடிவு செய்துள்ளேன்" என்று கல்வி அமைச்சர் கேப்ரியல் அட்டல் கூறினார்.

"நீங்கள் வகுப்பறைக்குள் செல்லும்போது, மாணவர்களைப் பார்த்து அவர்களின் மதத்தை நீங்கள் அடையாளம் காண முடியாது." என்று அவர் கூறினார்.

# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER=RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4




ARASAN RAJADURAI

Real Estate & Developments Realtor

C: 416.500.9550
B: 905.831.3300
F: 905.831.8147
hello@argroup.ca
argroup.ca

RE/MAX HALLMARK FIRST GROUP REALTY | RAISING THE BAR

1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA

சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# “சிங்களப் பௌத்தப் பேரினவாதச் சகதிக்குள் புதைந்து கிடக்கும் அரசியல் அமைப்புகளும் அவற்றின் தலைமைகளும் தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒருபொழுதும் புரிந்துகொள்ளப் போவதில்லை”

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு வேண்டிக் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நாம் சிங்கள அரசியல் தலைமைகளுடன் பேச்சுக்களை நடத்திய கசப்பான வரலாறு பற்றி நான் இங்கு விபரிக்க விரும்பவில்லை. காலத்தாற் சாகாது, ஈழத் தமிழ் இனத்தின் கூட்டு அனுபவத்திற் புதைந்து கிடக்கும் அரசியல் உண்மை இது. மொழியுரிமை என்றும் சம உரிமை என்றும் பிரதேச சுயாட்சி என்றும் சமஷ்டிக் கூட்டாட்சி என்றும் காலங் காலமாக நாம் பேச்சுக்களை நடத்தி, உடன்பாடுகள் ஒப்பந்தங்கள் செய்து, ஏமாற்றப்பட்டு வஞ்சிக் கப்பட்ட வரலாற்றுப் பாதையில் மீள நடைபோட எமது விடுதலை இயக்கம் தயாராக இல்லை.

சிங்களப் பௌத்தப் பேரினவாதச் சகதிக்குட் புதைந்து கிடக்கும் அரசியல் அமைப்புகளும் அவற்றின் தலைமைகளும் தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒருபொழுதும் புரிந்துகொள்ளப் போவதில்லை. சிங்களத் தேசத்தின் பிரதான அரசியற் கட்சிகள் எவையுமே தமிழரின் தேசிய இனப்பிரச்சினையின் அடிப்படைகளைக்கூட அங்கீகரிக்கத் தயாராக இல்லை. வடகிழக்கு மாநிலமானது தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுத் தாயகம் என்பதையோ, தமிழர்கள் ஒரு தனித்துவமான தேசிய இனக் கட்டமைப்பைக்கொண்ட மக்கள் சமூகம் என்பதையோ தமிழீழ மக்களுக்குப் பிரிந்துசெல்லும் உரிமையுடனான சுயநிர்ணய உரிமையுண்டு என்பதையோ எந்தவொரு சிங்கள அரசியல் இயக்கமும் ஏற்றுக்கொள்ளத் தயாராகவில்லை. தமிழரின் தேசிய இனப் பிரச்சினையின் அடிப்படைகளைப் புரிந்துகொண்டு அவற்றை ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவமும் பெருந்தன்மையும் மதிநுட்பமும் இல்லாதது ஒருபுறமிருக்க, தென்னிலங்கை அரசியல் இயக்கங்கள் மத்தியில் ஒத்திசைவற்ற, ஒன்றுக்கொன்று மாறுபட்ட, முரண்பாடுகள் நிறைந்த கருத்துக்களையும் கொள்கைகளையுமே காணக்கூடியதாக இருக்கிறது. இப்படிக் குளறுபடியான கொள்கைகளை வரித்துக்கொண்டு, அப்பட்டமான இனவாதம் பேசும் கட்சிகளின் கூட்டணிக்குத் தலைமைவகிக்கும் சந்திரிகா அம்மையார், இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பது பற்றி அக்கறை காட்டுவது எமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. ஜனாதிபதி சந்திரிகாவிடமும் அவர், கூட்டாட்சி அமைத்திருக்கும் கட்சிகளிடமும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிடமும் எமது விடுதலை இயக்கம் ஒரு வேண்டுகோளை முன்வைக்க விரும்புகிறது. அதாவது, தமிழ் மக்களது இனப்பிரச்சினையின் அடிப்படைகள் குறித்து, அவர்களது மூலாதாரக் கோரிக்கைகளான தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை குறித்து, உங்களது கட்சிகளின் கொள்கை நிலைப்பாட்டினை அதிகாரபூர்வமாகப் பகிரங்கப்படுத்துங்கள்.

2004 ஆம் ஆண்டு தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு தேசியத் தலைவர் அவர்கள் விடுத்த செய்தியிலிருந்து...










INVESTMENT PROPERTY CONDO (KENNEDY & HWY 401)

3 Bed Rooms + Den,
Central A/C + Heater,
Swimming Pool & Sauna
Jym & 2 Car Parking
Garage Indoor, Party Room
Dishwasher, Kitchen,
Washer Dryer,
One & Half Bath Room

Surrounding Area:
Kenndy Common, School,
Resort Park, Metro,
Foody World Super Market
LA . Fitness, Park & More!

Please Contact

647-294-2996

# சிரம் தாழ்த்தா வாழ்வே எமக்கான சிம்மாசனம்!

ஈழத்தமிழினமே!
முதலில் அழுவதை நிறுத்து
உனக்கானது ஒப்பாரியல்ல
பாலைவனத்தில் பாலூறாவிடினும்
பாதையிடையில் சோலை
வருமென நம்பு.
இழவு காத்தலை உன்
அகராதியிலிருந்து எடுத்தெறி
கண்ணீரை விரல்நுனியிலெடுத்துச்
சுண்டிவிடு
வாழ்விடிந்து போனதென
வாசலிற் கட்டிய
சோக தோரணங்களை அறுத்து
விழுத்து.
முகிலுரச நிமிர்ந்திருந்த தலை
கவிழ்ந்து
நிலமபார்த்து உலவுவதை
நிறுத்திவிடு
என்ன நடந்ததெனத் துன்பப்பூ
சூடியுள்ளாய்
விண்ணிடிந்தபோதும் தாங்கும்
வீரியனே!
சின்னப் புண்ணின் வலிக்காகவா
சிரிப்பிழந்து போனாய்?
ஒரு சிறகுதிர்ந்து போனதுக்காக
ராஜபறவைகள் சோககீதம் பாடுமா?
கோட்டை மதில்களைக் குண்டூசியா
துளையிடும்?
எத்தனை துயர்வரினும்
எதிர்கொள்ளப்பழகு
உள்ளெரியும் கோபத்தீ கிளறி
ஒரு பொறியெடுத்து வாசலை
ஒளிசெய்வாய்
புயலின் வலியனே!
உன்னையெவனடா
பூட்டியடைக்க முடியும்?
பாவியரால் ஜீவிதம் கொஞ்சம்
பழுதானதென்னவோ உண்மைதான்
அதற்காகக் கேவியழுவதால்
ஒன்றும் கிடைக்கப்போவதில்லை.
கோடையில் இலையுதிர்ந்து
குற்றுயிராகும் மரங்கள்
வைகாசி வந்ததும் பூப்படைந்து
புன்னகைக்கவில்லையா?
மரங்களிலிருந்து உன்மனதுக்கு
வைரம் பாயட்டும்.
இந்த மண்ணின் முந்தை
வழித்தோன்றல்கள் நாம்
சிங்களத்தின் வருகைக்கு முன்னரே
சிரசில் முடிதரித்த வம்சமெமது
தாமிரபரனிக் கரையில்
தளைத்திருந்த வேரே!
கதம்பநதி தீரத்தில் காற்றளைந்த தேரே!

எல்லாமும் இன்றிழந்து
போனாயெனினும்
மீண்டும் தொடங்கும் மிடுக்குளாய்
நீ
பூண்டும்; புல்லுமல்ல நீ
பொசுங்கிப் போவதற்கு
வெளியே வா சிறுத்தையே!
உன் மூச்சின் வீச்சில்
முனையிருந்த
வாழ்வு முளைக்கட்டும்
அகதிக்குடியிருப்பும்
நிவாரண வரிசையும்
குண்டும் குழியுமான
செம்புழுதித்தெருவும்
இயல்பிலிருந்து உன்னை
இல்லாமற் செய்யுமா?
உலையேறா அடுப்புகளின்
அவலக்குரலில்
நீ வேரிழந்து விழுந்துவிடுவாயா?
ஊர்போகும் ஏக்கத்தில் உருகி
எலும்புருக்கி நோயென இடிந்து
போவாயா?
அட; பஞ்சபூதங்களனைத்தின்
தோன்றலே!
கவலைக்கு முச்சை கட்டிக்
காற்றிலேற்றடா
நம்பிக்கை நூலில் விண்கூவட்டும்
பட்டம்.
பேச்சுவார்த்தை மேசையிற் கசியும்
சலுகை நீரில்
நாக்கு நனைக்கலாமென நம்பாதே
பூதகிகள் இப்படித்தான் பால்
கொடுக்க வருவார்கள்
ஒப்பனைக்குக் குடிப்பதுபோல்
இருக்கலாமே தவிர
அற்புதமான ஆகாரமென
அருந்திவிடாதே.
விமானமேறி வரும் வெள்ளை
மரங்களின் நிழலில்
சுகமான தூக்கம் வரமெனும்
கனவில் மிதக்காதே.
நம்பிக்கையில்லாத் தீர்மானம்
வாக்கெடுக்கும் போதில்
வென்றாலும், தோற்றாலும் உன்
விதியழியமாட்டாது
போராட்டமே உனக்கு வாழ்வெழுதி
வழிகாட்டும்
போராட்டமே எனக்கு
இழந்தவையை மீட்டு முடிதரிக்கும்
ஆனையிறவுக் கதவுகளின்
அகலத்திறப்பு
எமக்கு வாழ்வுவசாகுமென்பதற்கான
அடையாளம்

கனவின் மீதியையாவது கவனமாகப்
பொத்திவை
அதிலிருந்து தான் உனக்கான
அழகு
துளிர்க்கப்போகிறது.
பிரபாகரன்
காலமெமக்குக் கைக்கணக்கில் வீசிய
தலைவனல்ல
இவனே காலத்தைப்
படைப்பானெனச்
சொல்லியனுப்பிய பிள்ளை
தளராத உறுதிக்குச்
சான்றென்றிருக்கட்டுமென
இரண்டு நூற்றாண்டுகளுக்குமான
நியமனம்
இதுவெறும் புகழ்பாடும்
விருத்தமல்ல
காலக்குரலறிந்த வியாசனின்
கணிப்பு.
உலகத்தமிழினமே!
உனக்கான வாழ்வின் வசந்தம்
பிரபாகரனென்ற பெயரில்தான்
உலவுகின்றது
கண்டுகொண்டாயானால் காரியம்
சித்திக்கும்
தவறவிடுவாயானால் தத்தளிப்பாய்
நீ வீட்டிற் சும்மா நீட்டிப்படுத்திருக்க
விடுதலையுந்தன் கட்டிலருகே வந்து
கண் திறக்கமாட்டாது
போராடிப் பெறுவதற்குத்தான்
விடுதலையென்ற பெயர்.
பாராளுமன்றில் தருவது பாதியுண்ட
மீதிச்சோறு
அதைவாங்கித் தின்னவா
ஆசைப்படுகிறாய்?
அட எச்சிலுண்ட வம்சமல்லடா
எமது.
எத்தனை உதரக்கொடிகளைப்
புதைத்துவிட்டெழுந்தோம்
வெறும் புல்முளைக்கவா
விதைத்தோம்?
வாழ்வின் அனைத்தையும்
போருக்களித்து
வதையுண்ட பின்னும்
தாழ்வின் படுக்கையிலா
தலைசாய்க்க விரும்புவாய்?
திசையாவும் எம்வசமாகும் காலமிது
பூமிப்பரப்பெங்குமிருந்து எமக்குப்
புதுரத்தம் பாய்கிறது.
சோர்வுனக்கு ஆகாது இப்போது
நிலவு தூறும் ஒளிமழையிறங்கி
எம்பூமி சௌந்தர்யா பூசிக்கிடக்கிறது
எழில் சிலிர்த்திருக்கறிது எம்

வயல்கள்
வாய்க்காலில் பொன்னுருகிப்
பாய்கிறது
இரவுப்பறவைகளின் சிறகசைப்பில்
தாளம் பிசகாத சங்கீதம் வருகிறது
கள்ளியும், நாகதாளியும்,
ஆமணக்குமென்றாயினும்
இவை எம் காதற்கொடிகள்
வீட்டிக்கோடியில் நிற்பது வெறும்
வீரைமரமல்ல
எம் வீரமரம்
எங்கள் பரம்பரையின்
மூச்சுப்பட்டுயர்ந்தது
இந்த முதிரை மரம்
இவற்றை இழந்திருக்க எப்படி
ஒப்புவாய்?
பகையிடம் கொடுத்தபின் எப்படிப்
படுத்திருப்பாய்?
போரில் உயிர்கொடுத்துப்
போகலாமெனினும்
விடுதலையின் வேரையிழத்தல்
கூடாது
மானமே மானுடத்தின் மகுடம்
சிரம் தாழ்த்தா வாழ்வே எமக்கான
சிம்மாசனம்
பேச்சும் வார்த்தைகளும், ஒருபுறம்
புன்னைகைக்கட்டும்
நீ போருக்கான புரவிகளுக்குக்
கடிவாளம்பூட்டு தேரின்
சக்கரங்களுக்கு எண்ணைபூசு
வேல் முனைகளைக் கூர்மையாக
விளங்கச் செய்
முரசு கொட்டுவோரே! வார்பிடித்துச்
சுருதிசேருங்கள்
பரணியொன்றெழுதப் புலவோரே
தயாராகுங்கள்.
பீரங்கி வாய்கள் பூச்சூடுவதற்கல்ல...
யாரங்கே நிற்பது?
இழுத்து வாருங்கள் பீரங்கிகளை
மேசையிலிருந்து சமாதானம்
வருமெனில் சந்தோஷம்
யாரேனும் ஏமாற்ற
நினைப்பார்களானால்
இது யாராக இருந்தாலும்
இங்கே பாடம் படித்துத் திரும்புவர்
இந்தச் சத்தியத்தின் குரல் வெறும்
சங்கீதமல்ல
தமிழீழத்திற்கான தண்டோரா.
–வியாசன்–

உலைக்களம் – வியாசன் ஆனி–ஆடி
2021




# விடுதலைப்புலிகளின் மகளிர் படையணி தொடங்கப்பட்ட நாள் 18.08.1985!

இன்று விடுதலைப்புலிகளின் மகளிர் படையணி தொடங்கப்பட்டு சரியாக 38 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. 1985 ஒகஸ்ட் 18 இல் பெண்புலிகளின் முதலாவது பயிற்சிமுகாம் அதிகாரபூர்வமாகக் கொடியேற்றித் தொடங்கிவைக்கப்பட்டது.

விடுதலைப்புலிகள் மகளிர் படையணி தோற்றங்கொண்டு ஐந்தாண்டுகள் நிறைந்த நிலையில், தமிழீழ தேசியத் தலைவர் திரு வே.பிரபாகரன் அவர்கள் பலாலிப்பகுதி காப்பரண் தொகுதிகளில் பெண் போராளிகளுக்கென தனித்த பகுதிகளை ஒதுக்கியிருந்தார். கோழியின் சிறகுகளுள் குஞ்சுகள் இருந்த காலம் முடிந்துபோனது. குஞ்சுகளின் காலம்.

வீடுகளும், தோட்டங்களும், தோப்புக்களுமாகவுள்ள பலாலிப் பகுதியில் எந்த மதிலுக்குப் பின்னால் எந்த வாழை மரங்களிடையே எந்த வடலியின் மறைவில் எப்போது சிறீலங்கா இராணுவம் வந்துநிற்கும் என்று எவருக்கும் தெரியாது. இரவு, பகல் என்றில்லாமல் எப்போதுமே விழிப்பாக இருக்க வேண்டிய இடம் அது. பலருக்கு இதுவே முதற்களம். இது பெண் போராளிகளின் பகுதி என இராணுவத்தால் இனங்காணப்பட்ட இடங்களிலே ஓயாமல் முன்னேறுவதும் தொந்தரவுத் தாக்குதலும் தான். இத்தகைய தொடர் சம்பவங்களால் சோர்வடையாமல் பெண் போராளிகளுக்குத் தெம்பூட்டியது, தலைவர் அவர்கள் சொல்லிவிடுகின்ற நம்பிக்கையான வார்த்தைகளும் உத்திகளும் தான்.

1990ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் பாரிய முன்னேற்ற முயற்சியொன்றை படையினர் மேற்கொண்டனர். கப்டன் அஜித்தாவின் வழிநடத்தலில் பெண் போராளிகள் நான்குமணி நேரமாக எதிர்ச்சமராடி முன்னேற்ற முயற்சியை முறியடித்தனர். எதிரிகள் பலரை வீழ்த்தியதோடு, எம் - 203 பிஸ்ரல் உட்பட வேறுசில ஆயுதங்களையும், ஒரு இராணுவத்தின் சடலத்தையும் கைப்பற்றினர். முதன் முதலாக தனித்துப் போரிட்டு, பகைவரின் ஆயுதம் எடுத்த சமரைத் தலைமையேற்று நடத்திய பெருமை கப்டன் அஜித்தாவுக் குரியது.

1986ஆம் ஆண்டில் மன்னார் சிறீலங்கா காவல்நிலையம் மீதான தாக்குதல், தள்ளாடியிலிருந்து முன்னேறி வந்த சிறீலங்காப் படையினரை அடம்பனில் இடைமறித்துத் தாக்குதல். 1987இல் யாழ். தொலைத் தொடர்பு நிலையம் மீதான தாக்குதல், மயிலியதனைச் சிறுதளம் மீதான தாக்குதல் என ஆண் போராளிகளின் வழிநடத்தலில் களங்களாடி, சிறிது சிறிதாக போராற்றலை வளர்த்துக்கொண்டிருந்த பெண் போராளிகளுக்கு, இந்திய இராணுவக் காலம் திறந்த பல்கலைக்கழகமானது.

கல்லுண்டாய், வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், தொட்டிலடி, பொன்னாலை, மாசியப்பிட்டி, கோப்பாய், நீர்வேலி போன்ற பல இடங்களில் இந்திய இராணுவத்தினரின் ஏராளமான தாக்குதல்களை எதிர்கொண்டு பதிலடி கொடுக்கும் வாய்ப்பு இவர்களுக்குக் கிடைத்தது. சூழலை நன்கறிந்த, போர் அனுபவமுள்ள ஆண் போராளிகளுடன் நான்கைந்து பேர் கொண்ட சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து சமராடிய நாட்கள் அவை.

முன்னேறி வந்த இந்திய இராணுவம் கல்லுண்டாய் வெளியில் தளம் அமைத்து நிலை கொண்டது. லெப்.கேணல் ஜொனியின் தலைமையில் பெண்போராளிகளும் புறப்பட்டார்கள் தளத்தைத் தாக்கியழிக்க. இரண்டு இரவுகள் முயன்று, மூன்றாம் நாளிரவு பலத்த எதிர்ப்புக்களின் நடுவே தளத்தை நெருங்கினர். காப்புகளற்ற வயல் வெளிகளில் புலிகள். வரம்புகளைவிட்டு தலையை உயர்த்தியவர்களின் நெற்றிகளில் விழுந்தது சூடு. கடும் மோதலின் பின் தளத்தைத் தகர்த்து, எதிரிகளின் ஆயுதங்களை அள்ளி எடுத்தவர்கள், ஒருவரை மற்றவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள். மூன்று நாட்களாகச் சேற்றுவயலில் கிடந்ததால் உடல் முழுவதும் சேறு.



பெண் போராளிகளிடம் வந்த லெப். கேணல் ஜொனி,

“பிள்ளையள் போய் குளித்துவிட்டு கொஞ்சம் ஓய்வெடுங்கோ. அடுத்த சண்டைக்குப் போகவேண்டும்.”

என்று சொல்லி முடிப்பதற்கிடையில் வந்தது செய்தி, “சங்கானைக்கு ஆமி வந்திட்டான்.”

இராணுவத்தோடு மட்டுமல்ல போராட்டம் இயற்கையோடும் தான்.

1990ஆம் ஆண்டு. பலாலிப் பகுதியில் நிலைகொண்டிருந்த பெண் போராளிகளில் ஒரு பகுதியினர் கொக்காவிலிலுள்ள சிறீலங்கா படைத்தளத்தைத் தாக்கவென வன்னிக்கு வந்துவிட்டனர். பெண் போராளிகளுக்குரிய இலக்குகள் தலைவர் அவர்களால் தனித்துப் பிரிக்கப்பட்டன.

சண்டை தொடங்கியது. தமக்கு ஒதுக்கப்பட்டிருந்த பகைவரின் காப்பரணை மின்னல் வேகத்தில் அழித்து உள்நுழைந்தனர் பெண் போராளிகள்.

“நான் ஆமியின்ரை பொயின்ரில நிக்கிறன்” வானலையில் வந்தது மேஜர் சஞ்சிகாவின் குரல். அடுத்தடுத்த காப்பரண்களைக் கைப்பற்றவேண்டிய ஆண் போராளிகளின் அணிக்குப் பொறுப்பாகப்போன தளபதியால் நம்பமுடியவில்லை. ஆனால் சஞ்சிகா இப்படிச் செய்யக்கூடியவர்தான் என்பதும் இவருக்குத் தெரியும். உண்மையிலேயே மேஜர் சஞ்சிகாவின் அணி உள் நிற்பதை உறுதிசெய்த தளபதி, பக்கக் காப்பரண்கள் பிடிபடாத நிலையில் ஒரு அணி தனித்து நிற்பதன் ஆபத்தை உணர்ந்து தாக்குதலை வேகப்படுத்தினார். களங்களில் சஞ்சிகா ஒரு புயல்தான்.

அந்நிய இராணுவங்களாலும் சமூக விரோதிகளாலும் சூழப்பட்டிருக்கும் இடமொன்றில் ஒரு பெண் இரகசிய ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் மிகவும் சிரமம். ஈழத்தின் தெற்குப்பகுதியின் இந்நிலையைப் புரிந்துகொண்ட விடுதலைப்புலிகளின் மகளிர் பிரிவினர் தம்மை யாரென இனங்காட்டிக் கொள்ளாமல் இயங்கிக்கொண்டிருந்தனர். லெப். அனித்தாவும் தன்னை வெளிப்படுத்தாமல் தாயகத்துக்கான பணிகளில் ஈடுபட்டார்.

அனித்தாவின் வேலை மட்டக்களப்பு மாவட்டமெங்கும் விரிவாக்கப்பட்டது. இருவேறு பண்பாடுகளைக் கொண்ட தமிழ், இஸ்லாமிய சமூகத்தவரிடையே பொதுவான அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் விவசாயிகள், தொழிலாளர்கள், வணிகர்களின் எளிமையான வாழ்வைப் புரிந்துகொண்டு அவர்களுள் ஒருவராகி நிதானத்துடனும் கவனத்துடனும் செயலாற்றத் தொடங்கினார்.

இந்திய இராணுவ வருகையின் பின் அனித்தாவின் செயற்திறன் அம்பாறைக்கும் தேவைப்பட்டது. வேலைகள் விரிவாக்கப்பட்டன. எடுத்த பணியை முடிப்பதற்காகப் பல தடவைகள் பல படைத்தளங்களைக் கடந்து அம்பாறைக்கும் மட்டக்களப்புக்குமாக அவர் போய்வரவேண்டியிருந்தது.

தன்னம்பிக்கையுடனும் துணிச்சலுடனும் பகைத்தளங்களைக் கடந்து போய் வருகின்ற அனித்தா 1988.11.28 அன்று காட்டிக்கொடுக்கப்பட்டு, தேசத் துரோகிகளால் சிறைப்பிடிக்கப்பட்டு இழுத்துச் செல்லப்படும் வழியிலேயே சயனைட் அருந்தி தன்னை அழித்துக்கொண்டார்.

ஈழத்தின் தெற்கில் உதிர்ந்த முதல் வித்து லெப். அனித்தா

கள்ளீச்சையிலிருந்து வெலிகந்த நோக்கிக் காவல் உலாப் போகும் சிறீலங்கா படையினர் மீது தாக்குதல் செய்வதென முடிவெடுக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட சில போராளிகளைக் கொண்ட குழுவின் தலைவியாக மேஜர் வளர்மதி, குழுவில் ஒருவராக 2ம் லெப். நிலா.















நிலாவும் வளர்மதியும் உயிர் நண்பிகள். இருவரின் உரையாடலிலும் நகைச்சுவை இழையோடும்.

இருநாள் பயணம். தேவையான உணவுப் பொருட்கள், ஆயுத தளபாடங்களோடு பயணம் தொடர்ந்தது. அருவிகள், மலைகள் கடந்து நீண்ட பயணத்தின் முடிவில், தாக்குவதற்காக நிலையெடுத்தனர். ஊர்திகளில் வந்த சிறீலங்காப் படையினர் மீது இருபது நிமிடங்கள்வரை நீடித்த தாக்குதலில், கொல்லப்பட்ட இராணுவத்தினரின் உடல்களைக் கைவிட்டு ஏனையோர் காடுகளுக்குள் தப்பியோடினர். படையினரின் ஜீப் ஒன்றும், உழவு இயந்திரம் ஒன்றும் சேதப்படுத்தப்பட்டது. எல்.எம்.ஜி உட்பட கைப்பற்றப்பட்ட ஆயுதங்களோடு மாவீராங்கனையான 2ம் லெப்.நிலாவின் வித்துடலையும் சுமந்தபடி, மறுபடி மலைகள், அருவிகள் கடந்து தொடர்ந்தது பயணம்.

காரிருளில் தம்மை உருமறைத்த படி இருளோடு இருளாக வயல் வரம்புகளுடன் சில உருவங்கள் ஊர்ந்தன. பூநகரியிலிருந்த சிறீலங்கா படையினரின் தேடொளிகள் உயிர் பெற்றதும் அவை மண்ணோடு ஒன்றின. தேடொளி வேறுதிசை திரும்பியதும் மறுபடி ஊர்ந்தன. எனினும் ஐயங்கொண்ட படையினர் ரவைமழை பொழிந்தனர்.

ஓசையேதும் எழுப்பாமல், காயப்பட்ட தோழிகளைத் தமது தங்ககம்வரை சுமந்துவந்த வேவுப்புலிகள் அவசர முதலுதவிச் சிகிச்சையில் இறங்கினர்.

நீர் தேங்கி நிற்கும் வயல்களில், இரவுகளில் ஊர்ந்து போவதால் உடல் முழுவதும் சேறு அப்பும். சென்றபணி முடித்துத் திரும்பும்வரை சேறுதான் அவர்களுக்குப் போர்வை.

நல்ல குளிர் இரவுகளில் பூநகரிக் கடலை நீந்திக் கடந்து படையினரின் கண்களில் படாமல் கரையேறி, நாகதேவன்துறை கடற்படைத் தளத்தைக்கூட தம் வேவுக் கண்களிலிருந்து விட்டுவைக்க வில்லை இவர்கள்.

தனித்த வேவுப்பாதை. கப்டன் தேனுஜாவின் கனவு அது. அவர் விழிமூடி ஒரு வருடத்தில் நனவானது. பூநகரிப் படைத்தளம் மீது “தவளைகளெனப்” புலிகள் பாய்ந்தபோது தனித்தனியாக தாம் எடுத்த வேவுப் பாதைகளால் கப்டன் துளசிராமும் லெப். கேணல் முகுந்தாவும் அணிகளை வழி நடத்தி களம் புகுந்தனர்.

1992.03.01 அன்று தரைப்படையிலிருந்து முப்பது பெண் போராளிகள் கடலுக்குள் குதித்தார்கள்.

தலைவர் அவர்கள் கடற்புலிகளுக்குரிய பயிற்சித் திட்டங்களை வரையறுக்கும் போது நீச்சற்போட்டி ஒன்று வைத்தார். ஆண்கள் மூன்று கடல்மைல்களையும், பெண்கள் இரண்டு கடல்மைல்களையும் அடிப்படையில் முடித்திருக்கவேண்டும். ஆனால் நீச்சலுக்கான விருதைப் பெறுவதாயின், ஆண்கள் ஐந்துகடல்மைல்களையும், பெண்கள் மூன்று கடல் மைல்களையும் நீந்தி முடிக்கவேண்டும்.

பெண்கள் ஐந்து கடல் மைல்களை நீந்தி முடித்தார்கள். தலைவர் அவர்களிடமிருந்து சிறப்புப் பரிசுகளை பெற்றுக் கொண்டார்கள்.

1995ஆம் ஆண்டு ஒகத்து மாதத்தில், சிறீலங்கா கடற்படையின் முன்னாள் மாலுமிகள் உட்பட நூற்று இருபத்தெட்டுப் பயணிகளைச் சுமந்து வந்த “ஐரிஷ்மோனா” கடற்புலிகள் மகளிர் படையணியால் வழிமறிக்கப்பட்டு, முல்லைத்தீவுக் கடற்பரப்பில் தடுத்து வைக்கப்பட்டது. கடற்புலிகளின் இலக்கு “ஐரிஷ்மோனா ” அல்ல. இது இறால், இறாலை மகளிர் படையணி தக்கவைத்துக் கொண்டது.

இறால் தேடி சுறாக்கள் புறப்பட்டன. தேடிவந்த சிங்களக் கடற்படையினரின் இரண்டு சுப்படோரா படகுகள் கடற்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டன. நவீன ராடர் கருவிகளும், நவீன பீரங்கிகளும் கைப்பற்றப்பட்டன. இருபது படையினரைக் காணவில்லை என சிங்கள அரசின் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தனைக்கும் ஏதுவான இறாலை கடற்புலிகள் மகளிர் படையணி தன் தூண்டிலில் தக்கவைத்திருந்தது கடற்சமரில் முத்திரை பதித்திருந்தது.

காடு. பெருங்காடு. சிறுத்தைகள் போல் ஓசையின்றி நகர்ந்தார்கள் அவர்கள். ஒட்டவெட்டிய முடி, பார்வையில் கூர்மை, பலமான உடலமைப்பு, பார்த்தாலே தெரியும் இவர்கள் எமது சிறப்புப் படையணியினர் என்பது.

முன்னணியில் நகர்ந்த மேஜர் மாதங்கிக்கு வெளிப்புறத்தே நடக்கும் பெருஞ் சண்டையின் ஓசைகள் கேட்டுக் கொண்டிருந்தன. மணலாற்றிலுள்ள ஐந்து படைத்தளங்கள் ஒரே நேரத்தில் விடுதலைப்புலிகளால் தாக்கப்பட்டுக் கொண்டிருந்தன. சிறீலங்கா இராணுவத்தினரும் மிக விழிப்புடன் இருந்ததால், வெளிப்புறக் காப்பரணிலேயே கடும் மோதல் வெடித்திருந்தது.

மேஜர் மாதங்கியின் அணியோ தளத்தினுள் ஊடுருவி, ஆட்லறி ஏவு தளத்தைக் குறிவைத்து நகர்ந்து கொண்டிருந்தது. போகும் வழியிலேயே சண்டை தொடங்கிவிட்டது. இடைவழியில் இவர்களைக்கண்ட இராணுவம் சுட, இவர்களும் சுட்டவாறே நகர்ந்தனர். முடிந்தவரை சண்டையைத் தவிர்க்க முயன்றும், முடியாமல் போனதால் சண்டையிட்டபடியே ஆட்லறித் தளத்தினை நெருங்கியது அணி. இவர்கள் சுட்டுவீழ்த்த, புற்றீசல் போல் படையினர் வந்துகொண்டேயிருந்தார்கள்

ரவைகள் முடியும்வரை சண்டை நடந்தது. ரவைகள் முடிந்த பின்பும் சண்டை தொடர்ந்தது. சுடுகலன்களும் கைகளாலும் கால்களாலும் சிங்கள இராணுவத்தினரை அடித்து வீழ்த்தியவாறும், இழுத்து விழுத்தி மரங்களோடு மோதியவாறும்














நிலைமையைத் தொடர்ந்தும் தம் கட்டுப்பாட்டில் வைத்தபடியே, ஆட்லறியைத் தகர்த்தார்கள் இவர்கள்.

பெறுமதிமிக்க நூற்று எழுபத்தைந்து வீராங்கணைகளின் உயிர்கள், ஐநூற்று அறுபத்தாறு தூக்கமற்ற இரவுகள், மழைக் காலங்களில் நனைந்தவாறும், நீர் நிறைந்த பதுங்கு குழிகளோடும் கழிந்த நாட்கள், வெயில் காலங்களில் நாவரண்டு மர இலைகளில் வழியும் பனிநீரையும் விடாது சேகரித்துக் குடித்த நாட்கள், சிறீலங்கா படையினர் நகரும் திசைகளிலெல்லாம் பதுங்கு குழிகளை அமைத்தவாறே நகர்ந்த நாட்கள், நீண்ட தொலைதூர சுமைதாங்கிய நடைப் பயணங்கள், ஓயாத சண்டைகளால் உண்டான உடற்களைப்பு எல்லாவற்றையும் கடந்து ஓயாத விழிப்புடன் 2ம் லெப். மாலதி படையணி போரிட்டது ஜெயசிக்குறு எதிர் நடவடிக்கைக்களத்தில்.







நெடுங்கேணியில் ஆரம்பமாகி, புளியங்குளம், புதூர், மன்னகுளம், மாங்குளம், வன்னிவிளாங்குளம் என்றுபோய் கடைசியில் அம்பகாமம்வரை களம் நீண்டு அகன்றது. போரனுபவம் மிக்க பழையவர்கள், போர்க்களத்தில் வைத்தே புதிய போராளிகளுக்குச் சண்டை பழக்கிய களம் அது. மறுபடி மறுபடி சிறீலங்கா படையினரின் பதுங்கித் தாக்கும் அணிகள் ஊடுருவ முயன்றுகொண்டேயிருக்கும். இரவுபகல் என்றில்லாது எந்நேரமும் விழிப்புடனிருக்கும் 2ம் லெப்.மாலதி படையணிப் போராளிகளின் சுடுகுழல்கள் கனன்று கொண்டேயிருக்கும்.

அப்போதுதான் குறுகியகால படைய தொடக்கப் பயிற்சியை நிறைவுசெய்த புதிய அணியினர் அம்பகாமத்துக்கு வந்திருந்திருந்தனர். 1998ஆம் ஆண்டின் யூன் மாதம், ஏற்கனவே இரு தடவை சிறீலங்காப் படையினரை இவர்கள் எதிர்கொண்டிருந்தனர். இன்று மூன்றாம் முறையாக இராணுவம் முன்னேறியது.

படையினர் முன்னகர்வதை, காப்பரண்களிலிருந்து குறிப்பிட்டளவு தூரம் முன்னே அவதானிப்பு நிலையில் நின்ற 2ம் லெப்.இன்குறிஞ்சி கண்டு, சுடத் தொடங்கிவிட்டார். இவரைத் தொடர்ந்து பின்னே காப்பரணில் நின்ற தர்சினி, மேஜர் வாணி முதலானோரும் தாக்கத் தொடங்கிவிட்டனர்.

இவர்கள் பின்னே வரும்படி கத்தியதையும் கருத்திலெடுக்காமல், அவதானிப்பு நிலையைவிட்டு வெளியேறாமல் தனியாக நின்று, தனது ரவைகள் முடியும்வரை சுட்டு விட்டு, நெஞ்சில் பட்ட காயத்துடன் எழும்பி ஓடிவந்து காப்பரணில் விழுந்தவர்,



விழிமூடிப் போனார்.

அச்சம் சிறிதுமற்ற அந்தப் புதிய போராளியின் துணிச்சல் 2ம் லெப். மாலதி படையணியின் அன்றைய நாளை பெறுமதியாக்கி விட்டிருந்தது.

உலக வரலாற்றின் இரண்டாம் நோர்மன்டித் தரையிறக்கம் அது. இம்முறை அது குடாரப்புவில் 2000.03.26 அன்று அதிகாலையில் தமிழீழ விடுதலைப்புலிகளால் நிகழ்த்தப்பட்டிருந்தது.

தரையிறங்கிய வேகத்திலேயே, தொண்டமனாற்றிலிருந்து ஆனையிறவுநோக்கி நீண்டு கிடக்கும் கடல்நீரேரியைக் கடந்து, பளைக்கும் முகமாலைக்கும் இடையிலான யாழ்.நெடுஞ்சாலையை ஊடறுத்து நிலை கொண்டன புலியணிகள். நீரேரியின் கரையிலிருந்து நெடுஞ்சாலையை நெருங்குவதற்குச் சற்று முன்புவரை, ஆனையிறவைப் பார்த்தபடி 2ம்லெப்.மாலதி படையணியும், அவர்களைத் தொடர்ந்து நெடுஞ்சாலையை வெட்டிக்கடந்து கிளாலிநோக்கிப் பார்த்தபடியும் மறுபடி வெட்டிக் கடந்து சாவகச்சேரி நோக்கிப் பார்த்த படியுமாக மேஜர் சோதியா படையணியும், தொடர்ந்து சாவகச்சேரியைப் பார்த்தபடியே லெப்.சாள்ஸ் அன்ரனி படையணியும், சிறப்பு எல்லைப்படை வீரர்களும் 2ம் லெப்.மாலதி படையணியின் பிறிதொரு அணியும் நிலை கொண்டிருந்தன.

தொடங்கியது கடும் சண்டை. படையினரின் கைகளில் விழுந்த காப்பரண்களைப் போராளிகள் கைப்பற்றியபடியே போக, பின்னாலேயே படையினரும் வந்து புகுந்துவிடுவர். மறுபடியும் காப்பரண்களை மீட்டபடி போராளிகள் போக, பின்னால் வேறு படையினர் வந்து புகுந்துவிடுவர். பதினான்கு தடவைகளுக்கு மேல் படையினரிடமும் போராளிகளிடமும் காப்பரண்கள் கைமாறிக்கொண்டிருந்தன.

லெப்.கேணல் குட்டிசிறி மோட்டார் மகளிர் படையணியின் எறிகணை செலுத்திகள், முன்னரங்கக் காப்பரணில் நின்று சமராடியபடியே ஆதரவுச் சூடுகளைக் கேட்கும் போராளிகள் சொல்கின்ற ஆள்கூறுகளுக்கு அமைவாக, எறிகணைகளை ஏவிக்கொண்டிருந்தன. முன்னேறிய சிங்களப் படையினர் இப்போது எறிகணை செலுத்தியை நெருங்கிக் கொண்டிருந்தனர்

சாதாரணமாக, சமர்க்களத்திலிருந்து பாதுகாப்பான தூரத்துக்கு அப்பால்தான் எறிகணை செலுத்தி இடம் மாற்றப்படும். எறிகணை செலுத்தும் குழுவினர், தமது போர் உத்தியில் மாற்றம் செய்தனர். முன்னரங்கப் போராளிகளுக்கான ஆதரவுச்சூடு வழங்குவதை இடைநிறுத்தாமல் தொடர்ந்து செய்யும்படியே, சூழவந்த படையினரைத் தமது சுடுகலன்களால் தாக்கத் தொடங்கினர். எறிகணைகளை ஏவி, ஏவி பீரங்கிவாய் சிவந்தது. பீரங்கியைப் பகைவரிடமிருந்து பாதுகாக்க சுடுகலன்களும் சிவந்தன. பின்னரங்கில் போர் தீச்சுவாலை கக்கியது. மூன்றாம் நாளின் முடிவில், இழப்புக்களுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவம், முற்றுகை வளையத்தை விலக்கிக்கொண்டு தப்பியோடத் தொடங்கியது. பகைவர் உள்நுழைந்த பாதைகள் யாவற்றையும் எஞ்சிய போராளிகளும் எல்லைப்படை வீரர்களும் இணைந்து மூடிவிட, உள்நிற்கும் இராணுவத்துக்கு முன்புறமும் போராளிகளின் தாக்குதல், முதுகுப்புறமாகவும் தாக்குதல்.

கலைந்து செல்லும் பட்டிபோல கண்ணில் பட்ட திசைகளாலெல்லாம் முன்னரங்க காப்பரண் வரிசையைக் கடந்து ஓட முற்பட்ட இராணுவத்தினரின் கால்கள் பறந்தன. விழுந்தவரின் உயிர்களும் பறந்தன. தப்பியோடும் திசையெல்லாம் வெள்வேறு வடிவங்களில் வைக்கப்பட்டிருந்த மிதிவெடிகள், பொறிவெடிகள், சூழ்ச்சியமைப்புகள் எல்லாம் வெடிக்க, லெப்.கேணல் பொன்னம்மான் கண்ணிவெடி கூட தமிழீழத்தையே நினைக்கும் தலைவனின் உழைப்புத் தெரிந்தது.



**குறிப்புகள் :...!**

(அ) 1985.08.18 அன்று இந்தியாவின் திண்டுக்கல்லில் உள்ள சிறுமலைக் காட்டில், விடுதலைப்புலிகள் மகளிர் படையணியின் முதலாவது பாசறை ஆரம்பமானது. எனினும், பெண்களை அரசியல்மயப்படுத்தலும், போராட்டத்தில் பெண்கள் உள்வாங்கப்படலும் இதற்கு முந்தைய ஆண்டுகளிலேயே ஆரம்பித்துவிட்டன,

(ஆ) கபட் ன் அஜிதத்தா வீரசச்சாவு 1990.12.22 கட்டுவனில்,

(இ) லெப்.கேணல் ஜொனி வீரச்சாவு 1988.03.13 தேவிபுரத்தில்,

(ஈ) மேஜர் சஞ்சிகா வீரச்சாவு 1990.11.03 மாவிட்டபுரத்தில்,

(உ) 2ம் லெப். நிலா வீரச்சாவு,

(ஊ) வேவுப் புலிகள் வீரச்சாவு
கப்டன் தேனுஜா 1992.07.14 கறுக்காய்தீவில்...
கப்டன் துளசிராம் 1993.11.11 பூநகரியில்...
லெப்.கேணல் முகுந்தா 1997.06.19 குறிசுட்டானில்,

(எ) இரண்டு சுப்படோராக்கள் தாக்கப்பட்டது 1995.08.29 அன்று,

(ஏ) 2ம் லெப் இன்குறிஞ்சி வீரச்சாவு 1998.06.16 அம்பகாமத்தில்.

# 36ஆம் ஆண்டு வீரவணக்கம்

## 35th Year Veeravanakkam





**கேணல் சங்கர்**

**வைத்தியலிங்கம் சொர்ணலிங்கம்**

வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்

18.09.1949 - 26.09.2001

SEPT 26

**"மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்"**



ஈகைச்சுடர் Thileepan

# லெப். கேணல் திலீபன்

## இராசையா பார்த்தீபன்

ஊரெழு, யாழ்ப்பாணம்

27.11.1963-26.09.1987

இந்திய அரசிடம்
5 அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து
15.09.1987 தொடக்கம் 26.09.1987 வரை
12 நாட்கள் நீராகாரம் அருந்தாமல்
உணவு தவிர்ப்பு போராட்டம் நடத்தி
ஈகைச்சாவை தழுவிக்கொண்டார்

### ஐந்து அம்ச கோரிக்கைகள்:-

1. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இன்னும் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் இருப்போர் விடுதலை செய்யப்பட வேண்டும்.
2. புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக்குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேணடும்.
3. இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.
4. வடக்கு கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடன் நிறுத்தப்பட வேண்டும்.
5. இந்திய அமைதிப் படையின் மேற்பார்-வையில் ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் திரும்பப் பெறப்படுவதோடு தமிழ் கிராமங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் குடியிருக்கும் இராணுவம், பொலிஸ் வெளியேற வேண்டும்.

### Demand as follows:-

1. All Tamils detained under the Prevention of Terrorism Act should be released.
2. The colonization by Sinhalese in Tamil areas under the guise of rehabilitation should be stopped.
3. All such rehabilitation should be stopped until an interim government is formed
4. The Sri Lankan Government should stop opening new Police Stations in the Northeastern Province.
5. The Sri Lanka Army and Police should withdraw from schools in Tamil Villages & the weapons given by the the Indian Government to 'Home Guards' should be withdrawn

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

**The thirst of the Tamils is the Homeland of Tamileelam**

சங்கத்தமிழ்


36 ஆண்டுகளாக
பார்த்தீபன்
இப்போதும்
பசியோடுதான் இருக்கிறான்



MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge, Private மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான
மோட்கேஜ், குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
SUBRA
MORTGAGE SOLUTIONS
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS Brokerage # 10330
TD Canada Trust | Scotiabank | FIRST NATIONAL | radius financial
RFA | EQUITABLE BANK | HOME TRUST | RMG | MCAP
Off: 416-660-5656 / Fax: 647-351-3099 / 1585 Markham Rd, Unit 406, Toronto ON M1B 2W1




# 09.09.1990 சத்துருக்கொண்டான் இனப்படுகொலை

மட்டக்களப்பு நகரிலிருந்து இரண்டு கி.மீ. தூரத்தில் வடக்குத் திசையில் சத்துருக் கொண்டான் கிராமம் அமைந்துள்ளது. சத்துருக் கொண்டான் எல்லைக் கிராமங்களாக திராய் மடு, அரசையடி போன்ற கிராமங்கள் அமைந் துள்ளன. சிறிய குளத்தின் கீழ் வயல் நிலங் களை உள்ளடக்கி இக்கிராமம் அமைந் துள்ளது.




1990களின் ஆரம்பத்தில் உள்நாட்டு யுத்தம் மீண்டும் தீவிரமடைந்ததனைத் தொடர்ந்து சத் துருக்கொண்டானில் பாரிய இராணுவ முகா மினை சிறீலங்கா இராணுவத்தினர் அமைத் தார்கள். இதனால் மக்கள் இடம்பெயர்ந்து பாட சாலைகளிலும், கோயில்களிலும் பொது இடங் களிலும் தஞ்சமடைந்தார்கள். இவ்வாறு தஞ்சமடைந்த மக்களை மீண்டும் அவர்களின் வீடுகளில் சென்று குடியமருமாறு இராணுவத் தினர் கூறியதனைத் தொடர்ந்து, மக்கள் தங் களின் வீடுகளில் குடியமர்ந்தார்கள். இரா ணுவத்தின் கூற்றை நம்பிய தத்தமது வீடு களில் வசிக்க வந்த மக்களனைவரும் கைது செய்யப்பட்டார்கள்.

கைது செய்யப்பட்டவர்களில் எண்பத்தைந்து பேர் பெண்கள். இவர்களை முகாமிலிருந்த நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் பாலி யல் வல்லுறவிற்குற்படுத்திபின், அவர்களின் மார்பகங்கள், கை, கால் போன்றவற்றினை வெட்டி மிக மோசமான முறையிற் சித்திர வதை செய்து படுகொலை செய்தார்கள். கைது செய்யப்பட்ட ஐந்து குழந்தைகள் உட்பட அறு பத்தெட்டுச் சிறுவர்களையும் மோசமான சித் திரவதைகளின் பின் சுட்டுக்கொலை செய் ததுடன், பதினேழு பேரளவிலான ஆண் களின் அங்கங்களை வெட்டிச் சித்திரவதை செய்து படுகொலை செய்தார்கள். மொத்தமாக இருநூற்றைந்து பேர் இச்சத்துருக்கொண்டான் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டனர்.




இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர் களில் இருபத்தொரு வயதான கந்தசாமி கிருஸ்ணகுமார் மட்டுமே காயங்களுடன் தப்பி வந்து சம்பவத்தினை வெளிப்படுத்தினார்.

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு மக்கள் அமைப்பு சம்பவத்தினை வெளிப்படுத்தியது. ஆனால் இராணுவத்தினர் இவ்வாறு ஒரு சம் பவம் நடைபெறவில்லை எனத் தெரிவித் ததுடன், மக்கள் அமைப்பின் தலைவரான அருணகிரிநாதன் அவர்களை மிரட்டி இவ் வாறான சம்பவம் ஒன்று நடைபெறவில்லை என எழுத்து மூலம் பொய் அறிக்கையினைத் தருமாறு வற்புறுத்தினர். இதனையடுத்து மக்கள் அமைப்பின் தலைவர் தனது பத வியினைத் துறந்தார்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இ.நாகம்மா - வீட்டுப்பணி - 26
02. இ.தீபா - 10
03. இ.ஜெகதீசன் - 10
04. ஜி.குமுதினி - 12
05. ஜி.நேசம்மா - 25
06. ஜி.தேவராசி - 27
07. ஜி.சந்திரியா - 19
08. ஜி.சீனித்தம்பி - 70
09. ஜி.வனிதா - 12
10. ஈ.ஜீவநாதன் - 30
11. யு.மரியமுத்து - வீட்டுப்பணி - 33
12. யு.கோபிக்கண்ணன் - 12
13. யி.சீனித்தம்பி - -
14. உ.காளிமுத்து - சுயதொழில் - 55
15. உமைத்தம்பி – 70
16. நல்லையா இரமச்சந்திரன் - சுயதொழில் - 44
17. க.நல்லையா - சுயதொழில் - 72
18. க.சுரேஸ்கரன் - 11




19. கந்தன் இளையதம்பி - 55
20. கமலா - 09
21. கணபதிப்பிள்ளை தங்கமுத்து - சுய தொழில் - 46
22. பி.கந்தசாமி - 29
23. பி.கமலநாதன் - 09
24. பி.கவிதா - 12
25. பி.தமேந்தினி - 04
26. பி.ஆச்சிமுத்து - 76
27. பி.பொன்னம்மா - 70
28. பி.சந்தனம் - 37
29. பி.சிறிலட்சுமி - 18
30. பி.வினோதினி - 12
31. பி.வசந்தி - 23
32. பிரபா - 02
33. ரி.டிலானி - 05
34. ரி.நந்தினி - 16
35. ரி.நாதன் - 12
36. ரி.நாகேஸ்வரி - 37
37. ரி.நிதர்சினி - 12
38. ரி.குகன் - 10
39. ரி.கிருபாகரன் - 03
40. ரி.கண்மணி - 32
41. ரி.கண்ணன் - 25
42. ரி.பூபாலப்பிள்ளை - 65
43. ரி.பரம்சோதி - 37
44. ரி.பிரதீபன் - 05
45. ரி.தில்லையம்மா - 63
46. ரி.மகாலட்சுமி - 31
47. ரி.மலை - 55
48. ரி.ஜெயக்காந்தன் - 10
49. ரி.ஜெகன் - 09
50. ரி.மோகனச்சந்திரன் - 27
51. ரி.செல்வா - 07
52. ரி.சிறி - 28
53. ரி.விஜயகுமார் (குமரன்) - 08
54. ரி.விஜயலட்சுமி - 29
55. ரி.வசந்தி - 01
56. ரி.ராசேந்திரன் - 04
57. ஐ.முருகன் - 65
58. வை.தங்கம்மா - 38
59. வைரமுத்து அற்புதவடிவேல் - சுய தொழில் - 46
60. த.கணபதிப்பிள்ளை - 50
61. தம்பிப்பிள்ளை 72
62. தம்பிஜயா கிருபைரத்தினம் - சுயதொழில் - 50
63. ம.செல்வநாயகம் - 55
64. மு.ராமையா - 70
65. ஆர்.கமலராஜ் - 11
66. ஆர்.நேசம்மா - 62
67. ஆர்.சுதாகரன் - 10
68. ஆர்.விஜி - 08
69. ஆர்.வசந்தி - 15
70. அழகையா நாகரெட்ணம் - வீட்டுப்பணி - 16
71. அழகையா மஞ்சுளா - வீட்டுப்பணி - 14
72. அழகையா செளந்திரராஜன் - மாணவர் - 12
73. ஜெ.விஜயலட்சுமி - 10
74. ஜெ.ரமணி - 02
75. கே.மூத்ததம்பி - 79
76. கே.இளையதம்பி - 55
77. கே.ஈழன் - 15
78. கே.நாகரட்ணம் - 40
79. கே.நல்லையா - 72
80. கே.நல்லம்மா – 66
81. கே.கரிகரன் - 08
82. கே.கதிர்காமத்தம்பி - 75
83. கே.கதிர்காமத்தம்பி - 68
84. கே.குமுதா - 23
85. கே.கமலன் - 06
86. கே.கீதா - 12
87. கே.கிருஸ்ணபிள்ளை - 14
88. கே.கண்ணன் - 10
89. கே.பாக்கியம் - 46
90. கே.தாரணி - 04
91. கே.தம்பையா - 65
92. கே.தங்கம்மா - வீட்டுப்பணி - 75
93. கே.தங்கவேல் 26
94. கே.அரசம்மா - 60
95. கே.நேசம்மா - 48
96. கே.சதீஸ் - 04
97. கே.சியாமளா - 13
98. கே.சின்னமுத்து - 66
99. கே.சிவதர்சன் - 05
100. கே.சவுந்தரம் - 38
101. கே.விமலா - 02
102. கே.வசிகலா - 13
103. கே.ராசாத்தி - 12
104. கே.ரமேஸ்கரன் - 07
105. பெரியதம்பி சுயதொழில் 75
106. தேவி - 32
107. செபஸ்லின் செல்வநாயகம் - கூலித் தொழில் - 45
108. வேணுராஜ் - 25
109. லெட்சுமி - சுயதொழில் - 48
110. ஞா.செளந்தரராயன் - 26
111. சாந்திமதி - தனியார்தொழில் - 20
112. சாமித்தம்பி அழகையா - கூலித்தொழில் - 34
113. சின்னத்தம்பி வேலுப்பிள்ளை - சுய தொழில் - 68
114. சீனி கோபால் - 57
115. சித்திராதேவி - 29
116. சிவதர்சினி - 04
117. வி.நல்லையா - 27
118. வி.பூமணி - 45
119. வி.யோதிவடிவேல் - மாணவர் - 06
120. வி.சர்மிளா - மாணவர் - 08
121. வி.சாந்திமதி - 20
122. வி.லட்சுமி - 48
123. இரட்ணராஜா ருக்தி - 06
124. ஏ.ஜீவா - 15
125. எ.உமைத்தம்பி - 70
126. ஏ.நவரட்ணம் - 45
127. ஏ.மஞ்சுளா - 18
128. ஏ.ஆத்தப்பிள்ளை - 72
129. ஏ.அழகையா - 10
130. ஏ.அருள் - 09
131. ஏ.பொன்னுத்துரை - 62
132. ஏ.சுதா - 09
133. ஏ.சீத்தா - 18
134. எஸ்.இந்திராணி - 10
135. எஸ்.ஜீவமலர் - 25
136. எஸ்.நாகதேசி - 12
137. எஸ்.நிர்மலா - 13
138. எஸ்.நல்லையா - 45
139. எஸ்.கந்தசாமி - 29
140. எஸ்.காசிபதியர் - 60
141. எஸ்.கஜேந்தினி - 02
142. எஸ்.கவிதா - 09
143. எஸ்.குணரட்ணம் - 33
144. எஸ்.பாலிப்போடி - 62
145. எஸ்.பிரியா - 03 மாதம்
146. எஸ்.புண்ணியமூர்த்தி - 13
147. எஸ்.தங்கம்மா - 57
148. எஸ்.தங்கேஸ்வரி - 24
149. எஸ்.தவகுணேஸ்வரன் - 25
150. எஸ்.மகேஸ்வரி - 28
151. எஸ்.மலர் - 09
152. எஸ்.அழகையா - 50
153. எஸ்.யோகராசா - 14
154. எஸ்.நேசம் - 52
155. எஸ்.பொன்னம்பலம் - 55
156. எஸ்.பொன்னம்மா - 24
157. எஸ்.தெய்வானை - 45
158. எஸ்.செல்வராசா - 31
159. எஸ்.ஞானேஸ்வரி - 38
160. எஸ்.சபாபதிப்பிள்ளை - 70
161. எஸ்.சுரேஸ் - 02
162. எஸ்.சறோசாதேவி - 28
163. எஸ்.சின்னப்பிள்ளை - 35
164. எஸ்.சின்னத்தம்பி - 27
165. எஸ்.சீவரத்தினம் - 12
166. எஸ்.வடிவேல் - 65
167. எஸ்.விஜயன் - 01
168. எஸ்.வினோதரன் - 05
169. எஸ்.வள்ளிப்பிள்ளை - 75
170. எஸ்.ராசலிங்கம் - 58
171. எஸ்.ரவீந்திரன் - 21
172. எய்.நாகரெட்ணம் - சுயதொழில் - 45
173. எய்.சுதா - மாணவர் - 09
174. என்.இராசம்மா - 70
175. என்.குமுதினி - 18
176. என்.பாக்கியம் - 66
177. என்.பாலாத்தை - 70
178. என்.பிரேமா - 18
179. என்.பிரதீபன் - 05
180. என்.தர்சினி - 06
181. என்.தீபன் - 09
182. என்.ஜெகன் - 12
183. என்.சொர்ணம்மா - 44
184. என்.வேணுதாஸ் - 03 மாதம்
185. என்.வேணுராஜ் - 04 மாதம்
186. என்.ஞானரத்தினம் - 32
187. என்.சித்திராதேவி - 22
188. என்.சிவதர்சன் - 25
189. எம்.பாக்கியம் - வீட்டுப்பணி - 53
190. எம்.பரமேஸ்வரி - 32
191. எம்.சைலயா - 07
192. எம்.வைரமுத்து - 55
193. எம்.துளசி - 04
194. எம்.பெரியதம்பி - 75
195. எம்.தேவகி - 25
196. எம்.சுபோசினி - 12
197. எம்.சிவஞானம் - 35
198. எம்.விஜயன் - 19
199. எம்.ராசா – 24

சன்றனர். கொண்டுசெல்லப்பட்ட இருபத்து மூன்று இளைஞர்களும் கடும் சித்திரவதை களினால் உயிரிழந்தார்கள். 12.09.1990 அன்று சித்திரவதையினால் உயிரிழந்த அனைவரது உடல்களையும் தம்பிலுவில் கிராமத்தில் ஒரே குழியினுள் போட்டுப் புதைத் தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 இளையதம்பி செல்வராசா - 30
02 கனகசூரியர் கோபாலசிங்கம் - 28
03 கனகரத்தினம் தங்கவேல் - 19
04 கந்தப்போடி புஸ்பராசா - 23
05 காசிப்பிள்ளை சிவகுமார் - 31
06 குழந்தைவேல் பொன்னுத்துரை - 26
07 குலசேகரம் செல்வநாயகம் - 26
08 கணபதிப்பிள்ளை நேசதுரை - 22
09 குணரத்தினம் முரளிதரன் - 21
10 குணரத்தினம் சுதாகரன் - 23
11 துரையப்பா நடேசன் - 23
12 தம்பிமுத்து பாக்கியராசா - 27
13 தம்பிராசா விவேகானந்தன் - 22
14 மயில்வாகனம் பரமேஸ்வரன் - 27
15 ஆறுமுகம் நடேசன் - 29
16 வெள்ளைப்பொடி தவராசா - 23
17 ஞானப்பிரகாசம் யூவானில் - 22
18 சதாசிவம் தங்கத்துரை - 23
19 சிவநாதபிள்ளை தங்கத்துரை - 23
20 வீரக்குட்டி தங்கவேல் - 27
21 வரதராசன் வரதீஸ்வரன் - 20
22 இராசமாணிக்கம் தியாகராசா - 23
23 ஏகாம்பரம் தமிழ்வாணன் - 19

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

[redacted]

# வந்தாறுமூலைப்படுகொலை 05,23.09.1990

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக் களப்பு அமைந்துள்ளது. இம் மாவட்டத்தில் வந்தாறுமூலைக் கிராமதத்தில் கிழக்குப் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. இலங் கையிலுள்ள பதின்மூன்று பல்கலைக்கழகங் களில் கிழக்குப் பல்கலைக்கழகமும் ஒன் றாகும். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மூவா யிரம் மாணவர்கள் வரை ஆண்டு தோறும் கல்வி கற்கிறார்கள்.

இவர்களில் ஏறக்குறைய ஐநூறு முதல் எழு நூறு வரையான பட்டதாரிகள் ஆண்டு தோறும் வெளியேறுகின்றார்கள். இப்பல் கலைக்கழகத்தில் கலை, வர்த்தகம், முகா மைத்துவம், விஞ்ஞானம், பௌதீகவியல், கணினி, இசை, நடனம் போன்ற பல்வேறு துறைகள் தமிழ்மொழி மூலம் கற்பிக்கப் படுகின்றன.




1990 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் உள்நாட்டு யுத்தம் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து மட்டக் களப்பு மாவட்டத்தில் பல பகுதிகளிலும் பொது மக்கள் மீது சிறீலங்கா இராணுவத்தினரின் தாக்குதல்கள் அதிகரிக்கத் தொடங்கின. இதன் விளைவாகப் பொதுமக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்து கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்தார்கள்.

உலகத்தில் பல்கலைக்கழகங்கள், வைத்திய சாலைகள் பாடசாலைகள் வணக்கத்தலங்கள் போன்றவற்றில் பொதுமக்கள் தங்களைப் பாது காப்பதற்காகச் தஞ்சமடைவது வழக்கமாகும்.

அவ்வாறே கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் பொதுமக்கள் தஞ்சமடைந்தனர். 05.09.1990 அன்று சத்துருக்கொண்டான் ,ராணுவ முகாமி லிருந்து பெருந்தொகையான இராணுவத் தினர் வாகனங்களில் பல்கலைக் கழகத்திற்கு வந்து பல்கலைக்கழகத்தில் அகதிகளாகத் தஞ்சமடைந்திருந்த இளைஞர்களில் 158 பேரைக் கைதுசெய்து கைகள், கால்கள் கட்டி இராணுவ வாகனங்களில் ஏற்றி, எல்லை யோரக் கிராமங்களுக்குக் கொண்டு சென்று, துப்பாக்கிகளால் சுட்டும், ஏனைய கூரிய ஆயு தங்களினால் தாக்கிப் படுகொலை செய்தனர்.

23.09.1990 இல் மீண்டும் கிழக்குப் பல் கலைக்கழகத்திற்கு வந்த இராணுவத்தினர் அங்கு தஞ்சமடைந்திருந்த 16 பொதுமக்களை கைதுசெய்து கொண்டு சென்று, முதல் நாள் போன்றே இவர்களையும் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்தனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமது உயிர் களைப் பாதுகாப்பதற்காக தமது வீடுகள், சொத் துக்கள் உட்பட அனைத்து உடமைகளையும் இழந்து மூன்றுவேளை உணவினை ஒழுங் காக உண்ண முடியாமல் அகதிகளாக இருந்த பொதுமக்களில் இருநூற்றி இருபத்தாறு பேர் இராணுவத்தினரால் கைதுசெய்து கொண்டு செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்கள். அத்துடன், பலர் காணாமல் போனார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இளையதம்பி பாக்கியநாதன் - தொழிலாளி - 22
02. இராசையா ஜெயநாதன் தொழிலாளி 35
03. இராசையா டேவிட் - சாரதி - 34
04. இராசதுரை கனகசபை - கடற்றொழில் - 18
05. நாகராசா ரகுநந்தன் - தொழிலாளி - 27
06. நடராசா ஜோச்ஸ்ரான்லி - அரசஊத்தி யோகத்தர் - 39
07. நடேசன் சுப்பிரமணியம் - சுயதொழில் - 29
08. நவரத்தினம் பிரியதர்சினி - 5
09. நல்லதம்பி மகேந்திரன் - தொழிலாளி - 28
10. நல்லதம்பி நாகராசா - சுயதொழில் - 25
11. கந்தையா கதிரவேல் - தொழிலாளி - 20
12. கந்தையா தவராசா - தொழிலாளி - 18
13. கந்தையா ஆனந்தரெட்ணம் - கடற் றொழில் - 28
14. கந்தையா செல்வராசா - தொழிலாளி - 28
15. கந்தப்போடி ஜெயசீலன் - தொழிலாளி - 19
16. கந்தப்போடி செல்வராசா - தொழிலாளி - 45
17. கந்தசாமி நவரெட்ணம் - சுயதொழில் - 19
18. கந்தசாமி சிறிஸ்கந்தராசா - சுயதொழில் - 24
19. கதிராமப்போடி பரமேஸ்வரி - வீட்டுப்பணி - 31
20. கணேசன் தியாகராசா - தொழிலாளி - 24
21. கிருஸ்ணப்பிள்ளை முருகேசு - தொழி லாளி - 24
22. கருணாகரன் அருணாசலம் - தொழி லாளி - 29
23. கணபதிப்பிள்ளை தங்கத்துரை - சுய தொழில் - 25
24. கணபதிப்பிள்ளை முருகையா - தொழி லாளி - 18
25. பூபாலப்பிள்ளை தெய்வேந்திரமூர்த்தி - அரசஊழியர் - 33
26. பஞ்சாசரம் நடராசா - தொழிலாளி - 25
27. வைரமுத்து புஸ்பராசா - சுயதொழில் - 40
28. வைரமுத்து தர்மலிங்கம் - சுயதொழில் - 60
29. தாமோதிரம் வள்ளிப்பிள்ளை - விவசாயம் - 77
30. தம்பிஜயா ஜெகன் - தொழிலற்றோர் - 11
31. தம்பியப்பா வினாயகமூர்த்தி - சாரதி - 26
32. தம்பிமுத்து பீதாம்பரம் மாணவர் 18
33. மார்க்கண்டு மகேந்திரன் - தனியார் தொழில் - 19
34. மாமாங்கம் சண்முகநாதன் - கடற் றொழில் - 18
35. மாரியப்பா தமிழ்செல்வன் - மாணவர் - 15
36. முத்தையா கந்தசாமி - மாணவர் - 19
37. முத்துப்பிள்ளை தருமலிங்கம் - தொழி லாளி - 69
38. மூத்ததம்பி சின்னமுத்து - தொழிலற்றோர் - 70
39. முத்துலிங்கம் மோகனசுந்தரம் - கடற் றொழில் - 27
40. மகேந்திராஜா சிலக்சனா - தொழிலற்றோர் - 6
41. அமிர்தலிங்கம் ஜெயசங்கர் - சுயதொழில் - 36
42. அழகிப்போடி குமார் - மாணவர் - 21
43. அழகையா யோகராசா - தொழிலாளி - 19
44. அருமைத்துரை விமலன் - தொழிலாளி - 18
45. அருமைத்துரை இன்பம் - சுயதொழில் - 18
46. அருணாச்சலம் சின்னத்தம்பி - கடற் றொழில் - 44
47. ஆறுமுகம் கந்தலிங்கம் - சுயதொழில் - 30
48. ஆறுமுகம் கிருபாமூர்த்தி - தொழிலாளி - 26
49. ஆறுமுகம் தாமோதரம்பிள்ளை - தொழி லாளி - 22
50. ஆறுமுகம் விவேகானந்தன் - தனியார் தொழில் - 29
51. அல்போன்ஸ் நெல்சன் - மாணவர் - 18
52. ஜோசப் சுந்தரலிங்கம் - தொழிலாளி - 33
53. ஜோசப் சிவகுமார் - தொழிலாளி - 16
54. கே.கனேஸ்வரி - தனியார்தொழில் - 26
55. கே.சீதேவி - தொழிலற்றோர் - 5
56. கோ.மகேந்திரன் - சுயதொழில் - 27
57. சோமலிங்கம் வாசகன் - அரசஊழியர் - 70
58. செல்லையா உதயநாதன் - விவசாயம் - 28
59. செல்லையா சுப்பிரமணியம் - சுயதொழில் - 59
60. செல்வராசா உதயகுமார் - சுயதொழில் - 31
61. செல்வராசா நவரெத்தினம் - தொழிலாளி - 27
62. வெள்ளைச்சாமி கண்ணையா - விவ சாயம் - 45
63. வேலுப்பிள்ளை பாக்கியராசா - சுய தொழில் - 32
64. வேலுப்பிள்ளை யோகன் - சுயதொழில் - 30
65. வேலுப்பிள்ளை ராசு - தொழிலாளி - 22
66. ஞானமூர்த்தி கதிர்காமத்தம்பி - தனியார் தொழில் - 20
67. சுப்பையா பாலசுப்பிரமணியம் - சுய தொழில் - 40
68. சுப்பையா எட்மன் - சுயதொழில் - 19
69. சதாசிவம் குபேரன் - சுயதொழில் - 19
70. சி.சரோசாதேவி - தனியார்தொழில் - 25
71. சின்னப்பு யோகராசா - சுயதொழில் - 28
72. சின்னத்துரை புஸ்பராசா - கடற்றொழில் - 22
73. சின்னத்தம்பி யோனாஸ் - சுயதொழில் - 35
74. சின்னராசா ராஜேந்திரம் - மாணவர் - 23
75. சீனித்தம்பி பிள்ளைநாயகம் - தொழிலாளி - 22
76. சித்திரவேல் சதாநந்தகுமார் - மாணவர் - 16
77. சிதம்பரப்பிள்ளை தணிகாசலம் - அரச ஊழியர் - 40
78. சிவகுரு நடராசா - சுயதொழில் - 37
79. சிவசுப்பிரமணியம் கிருபாகரன் - மாணவர் - 21
80. சிவலிங்கம் செல்லத்தம்பி - சுயதொழில் - 21
81. சண்முகம் செல்வரெத்தினம் - மாணவர் - 6
82. வீரக்குட்டி பாலகப்பொடி - தொழிலாளி - 55
83. எ.காசுபதி - தொழிலாளி - 74

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக் கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. இந்துமதி - மாணவர் - 15
02. புலேந்திரன் சாந்தமேரி - கடற்றொழில் - 04
03. தம்பியப்பா குழந்தைவேல் - சுயதொழில் - 25
04. தங்கராசா பிரபானந்தராசா - சுயதொழில் - 27
05. சீ.சம்புரணநாதன் - சுயதொழில் - 27
06. சித்திரவேல் மணிமேகலை - தொழி லாளி - 18

இச்சம்பவத்தில் காணாமல்போனவர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. இராஜேஸ்வரி ரஞ்சன் - தொழிலாளி - 27
02 இராசநாயகம் சிவலோகநாயகி - அரச ஊழியர் - 17
03. ந. கிருபாகரன் - தொழிலாளி - 22
04. கந்தையா முத்துவடிவேல் - தொழிலாளி - 17
05. குட்டியாண்டி இராமசாமி - மாணவர் - 22
06. தம்பியப்பா சகாயராசா - தொழிலாளி - 25
07. மாடசாமி சங்கர் - மாணவர் - 22
08. செல்வநாயகம் ஜெயராசா - விவசாயம் - 21
09. சா.வினோராஜ் - மாணவர் - 22
10. சாமுவேல் யோகேந்திரன் - தொழிலாளி - 19

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# கைதடி கிருசாந்தி படுகொலை 07.09.1996



கிருசாந்தி - ராசம்மா - பிரனவன்



கிருசாந்தி குமாரசாமி

யாழ் குடாநாட்டின் தென்மராட்சிப் பிரதேசத்தில் கைதடிக் கிராமம் அமைந்துள்ளது. யாழ் நகரப் பகுதியிலிருந்து கிழக்குப் புறமாக யாழ். - கண்டி வீதி வழியாக ஏறக்குறைய ஐந்து மைல் தொலைவில் இக்கிராமம் அமைந்துள்ளது.

கைதடிச் சந்தியிலிருந்து வடக்குப் புறமாக இரு நூறு யார் தூரத்தில் கிருசாந்தியின் வாழ்விடம் உள்ளது. இயற்கை எழில் கொண்டதும், பெரும்பகுதி விவசாயப் பகுதியாகவுமுள்ள கைதடிக் கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருந்த குமாரசாமி இராசம்மா தம்பதியினர் பிரசாந்தி, கிருசாந்தி, பிரணவன் ஆகிய மூன்று பிள்ளைகளோடு தமது வாழ்க்கையினை நடத்தி வந்தார்கள்.

தந்தையார் குமாரசாமி 1984 தை மாதம் காலமானதும், தாயின் அரவணைப்பிற் பிள்ளைகள் வாழ்ந்து வந்தார்கள். தந்தையின் இழப்பின் பின் மூத்த புதல்வி பிரசாந்தி க.பொ.த உயர்தரம் வரை கல்விகற்று, உயர்கல்வி கற்பதற்கு வசதிகளற்று உறவினர்களின் உதவியுடன் கொழும்பில் சிறிது காலம் தங்கியிருந்து கணினிக் கல்வி கற்றுப் பின்னர் வெளிநாடு செல்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்து வெளிநாடு சென்றார்.

குமாரசாமி இராசம்மா தம்பதிகளின் இரண்டாவது மகளான கிருசாந்தி யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் கல்வி பயின்றுவந்தார். கல்விப் படிப்பில் க.பொ.த சாதாரண பிரிவில் திறமை சித்தியடைந்ததும், க.பொ.த உயர்தரப் பிரிவில் விஞ்ஞானப் பிரிவில் கல்வி பயின்று வந்தார். இளைய மகன் பிரணவன் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியில் சாதாரண பிரிவில் கல்வி பயின்று கொண்டிருந்தார்.

1996ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானத்துறையில் கல்வி பயின்று வந்த கிருசாந்தி முதல் நாள் நடந்த இரசாயனவியற் பாடத்தினை திறம்பட எழுதியிருந்தார். இப் பாடத்திற்குரிய பெறுபேறு முதல் தரம் எனப் பின்னர் தெரியவந்தது. 07.09.1996 அன்று நடந்த இரண்டாவது பாடம் இராசாயனவியல் பகுதி ஒன்று பரீட்சையை எழுதியிருந்தார். அன்றையதினம் தனது உற்ற நண்பி ஜனாநந்தினி கணநாதனின் மரணச் சடங்கிற்குச் சென்று விட்டு மதியம் 01:30 மணியளவில் கண்டி வீதி வழியாக வீடு திரும்பிக் கொண்டிருந்தார் அவ்வேளை செம்மணி வெளியருகில் யாழ் நகரை வரவேற்கும் வரவேற்பு வளைவு அமைந்துள்ள இடத்தில் காவலரணிலிருந்த இராணுவத்தினர் கிருசாந்தியை வழிமறித்து நாற்பத்தைந்து நிமிடங்களாக விசாரித்துக்கொண்டிருந்தார்கள்.

கிருசாந்தி காவலரணில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்ட உறவினர் தாயாரிடம் சென்று சம்பவத்தினைத் தெரியப்படுத்தியிருந்தார். மதியம் 02:30 மணியளவில் சம்பவத்தினைக் கேள்வியுற்ற தாயார் இராசம்மா அயலவரான கிருபாமூர்த்தியின் உதவியுடன் சம்பவ இடத்தினை நோக்கி விரைந்தார். இதன் பின்னர் தமது படிப்பினை முடித்து வீடு திரும்பிய கிருசாந்தியின் தம்பியார் பிரணவனும் சம்பவத்தினை அறிந்து தயாருக்குப் பின்னால் சென்றார். தாயார் இராசம்மா குமாரசாமி, இளைய சகோதரன் பிரணவன் மற்றும் அயலவர் கிருபாமூர்த்தி ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்தபோது தடுத்து வைத்து விசாரிக்கப்பட்ட கிருசாந்தியைக் காணவில்லை. செம்மணி வீதியில் அமைந்திருந்த இராணுவ காவலரணிற் கேட்டபோது தாங்கள் யாரையும் கைது செய்யவில்லை எனக் குறிப்பிட்டார்கள். இதைத் தொடர்ந்து தாயார் சுண்டுக்குளி பாடசாலை மற்றும் மரணச்சடங்கு நிகழ்ந்த ஜனாநந்தினி கணநாதன் வீட்டிற்கு சென்று விசாரித்தபோது, கிருசாந்தி வந்து போனதாகக் கூறினார்கள். மீண்டும் தாயார் கிருசாந்தி தடுத்து வைக்கப்பட்டு விசாரித்த இடமான செம்மணி பகுதிக் காவலரணில் கடமையிலிருந்த படையினரிடம் விசாரிக்கச் சென்ற பின்னர் இவர்களும் காணாமற்போனார்கள்.

1996ஆம் ஆண்டு நடுப்பகுதியில் யாழ்குடா முழுவதையும் இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டு வந்த பின்னர் மாலை 6மணியுடன் ஊரடங்கு உத்தரவு அமுலிலிருந்தது. இவ்வாறான நெருக்குவாரங்களிற்குள் மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.



இதனால் 07.09.1996 அன்றைய தினம் கிருசாந்தியைத் தேடிச் சென்ற தாயார், தம்பியார், அயலவர் ஆகியோர் மாலை நேரம் ஆகியும் வீடு திரும்பவில்லை. ஆயினும் ஊரடங்கு உத்தரவால் உறவினர்களால் உடனடியாக விசாரிக்க முடியாதிருந்தது. மறுநாள் 08.09.1996 காலை கிருசாந்தி குடும்பத்தினரது உறவினர்களான ஆறுமுகநாதன், கோடீஸ்வரன் ஆகியோரும் கிருபாமூர்த்தியின் மனைவியான புவனேஸ்வரியும் தமது குடும்ப உறவினர்களைத் தேடி அதே இராணுவ முகாமிற்குச் சென்று விசாரித்த போது, அப்படி இங்கு யாரையும் கைது செய்யவில்லை எனத்தெரிவித்தார்கள். பின்னர் யாழ். மனித உரிமை ஆணைக்குழு, யாழ் காவற்றுறை நிலையம் போன்ற இடங்களில் முறைப்பாடுகள் செய்தார்கள். இருந்தபோதும் அவர்களது மனம் கேட்காது மீண்டும் சம்பவம் நிகழ்ந்த செம்மணிக் காவலரணிலிருந்த இராணுவத்தினரிடம் கேட்டபோது "நாங்கள் யாரையும் கைது செய்யயவில்லை எனினும் மாலை நேரம் வந்து பாருங்கோ" என்றனர். இதைக்கேட்ட உறவினர்கள் கிருசாந்தி குடும்பத்தினருக்கு ஏற்பட்ட நிலை தமக்கும் ஏற்பட்டு விடுமோ எனப் பயந்து மாலைவேளை அங்கு செல்லவில்லை. தொடர்ந்தும் மனித உரிமைகள் ஆணைக் குழு, காவற்றுறை நிலையம் என்பவற்றில் முறைப்பாடு செய்தார்கள்.

உறவினர்கள் எடுத்த முயற்சியின் பயனாக சம்பவதினதத்திலிருந்து நாற்பத்தைந்தாம் நாள் இராணுவத்தின் ஐநூற்று இருபத்தோராம் பிரிகேட் படைப்பிரிவு அதிகாரிகள் உறவினர்களை விசாரணைக்காக அழைத்தார்கள். இதில் ஆறுமுகநாதன், புவனேஸ்வரி, கோடீஸ்வரன் ஆகியோர் சென்றிருந்தனர். விசாரணைகளில் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்களெனக் கருதப்பட்ட இராணுவத்தினர் ஆறு பேரையும் அழைத்து விசாரித்தபோது, கிருசாந்தி குடும்பத்தினர் உயிருடன் இல்லை என்ற செய்தி உறவினர்களிடம் கூறப்பட்டது.

குற்றஞ்சாட்டப்பட்ட நான்கு இராணுவத்தினரும் இரண்டு காவற்றுறையினரும் சம்பவம் நிகழ்ந்த இடத்தினையும், புதைகுழியையும் காட்டுவதாக ஒப்புக்கொண்டனர். யாழ். வரவேற்பு வளைவு அமைந்துள்ள பகுதியிலிருந்த செம்மணிக் காவலரணிலிருந்து நூறு யார் தூரத்தில் நாயன்மார்கட்டு வீதியிலுள்ள மதகு அருகில் புதைகுழி அமைந்திருந்தது. கிருசாந்தியும் தாயாரும் ஒரு புதைகுழியிலும், பிரணவன் மற்றும் அயலவர் கிருபாமூர்த்தி இன்னொரு புதைகுழியிலுமாகக் கிடந்தனர். நான்கு அடி ஆழத்தில் உருக்குலைந்து, சிதைந்து, கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் சடலங்கள் காணப்பட்டன. கிருசாந்தியின் தாயார் அணிந்த சேலை, மூக்குக்கண்ணாடி, செருப்பு என்பன ஒரு பொலித்தீன் பையில் புதைகுழியினுள் கிடந்தது. கிருசாந்தி படையினரால் பாலியல்வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டும் கழுத்துப் பகுதி கயிற்றினால் நெரித்துக் கொல்லப்பட்டிருந்தார். பின்பு, தோண்டி எடுக்கப்பட்ட சடலங்கள் யாழ் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று, பின்னர்




கொழும்புக்கு அனுப்பப்பட்டன. அங்கு மரபணுப் பரிசோதனை யாவும் பூர்த்தியான பின்னர் அடக்கம் செய்யப்பட்டன. கிருசாந்தி குடும்பத்தினர், கிருபாமூர்த்தி ஆகியோரின் உயிரிழப்புத் தொடர்பான வழக்கு உறவினர்களால் நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. தொடர் விசாரணைகள் மூன் சந்தேகத்தின் பேரிற் கைதுசெய்யப்பட்ட ஆறு இராணுவத்தினரும் குற்றங்களை ஒப்புக்கொண்டதன் பேரில் குற்றவாளிகளென அடையாளங் காணப்பட்டார்கள்.

குற்றவாளிகளென அடையாளங் காணப்பட்டவர்களில் ஒருவரான "லான்ஸ் கோப்ரல் சோமரட்ண ராஜபக்ச" கிருசாந்தி மற்றும் குடும்பத்தினர் மீதான தகவல்களை வழங்கியதுடன், மேலும் செம்மணிப் பகுதியில் அமைந்த வயல் நிலங்களில் மேலதிகாரிகளின் உத்தரவின் பேரில் இரவு நேரங்களில் கொண்டுசென்று புதைக்கப்பட்ட சடலங் களில் முன்னூறு, நாநூறு பேரது சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்களையும் அடையாளப்படுத்த முடியுமெனவும் வாக்குமூலம் அளித்தார். இதன்மூலம் யாழ் குடாநாட்டில் காணாமல் போனோர் பலரது நிலைகளை இப் புதை குழிகளிலிருந்து அறிய முடிந்தது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. குமாரசாமி இராசம்மா - உப அதிபர் - 59
02. குமாரசாமி கிருசாந்தி - மாணவி - 18
03. குமாரசாமி பிரணவன் - மாணவன் - 16
04. சிதம்பரம் கிருபாமூர்த்தி - எழுதுனர் - 38

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# செம்மணிப் புதைகுழிகள் 1996

யாழ். குடாநாட்டில் 1996 நடுப்பகுதியிலிருந்து ஆறுமாத காலப்பகுதியில் காணாமற்போன வர்களின் நிலை...? யாழ். மாவட்டத்தின் நல்லூர்ப் பிரதேசத்தில் அரியாலைக் கிராமம் அமைந்துள்ளது. அரியாலைக் கிராமத் திலுள்ள செம்மணிப் பகுதி யாழ் நகரத்தி லிருந்து யாழ்.-கண்டி வீதி வழியாக ஏறக் குறைய நான்கு கிலோமீற்றர் தூரத்தில் யாழ் நகரை வரவேற்கும் வளைவுக்கல் பகுதியில் அமைந்துள்ளது.

1994இல் புதிதாக ஆட்சியினைப் பொறுப் பேற்ற சனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கா தலைமையிலான அரசாங்கம் மனித உரிமைகளை நிலைநாட்டுவதாக கூறி கடந்த காலங்களில் காணாமற்போனவர்கள் புதைக்கப்பட்ட தென்னிலங்கையிலுள்ள சூரிய கந்த புதைகுழிகள் போன்ற புதைகுழிகளை விசாரணைக்குட்படுத்தியது.

1994ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் பத்தொண் பதாம் திகதி புலிகளுக்கும் அரசிற்கும் இடை யிலான சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந் தன.

அதனைத்தொடர்ந்து "சமாதானத்திற்கான போர்" என்னும் பெயரில் மீண்டும் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

முதற்கட்டமாக 1995 இன் இறுதிகளில் யாழ் நகரையும், 1996 இன் நடுப்பகுதிகளில் யாழ் குடாநாடு முழுவதனையும் இராணுவத்தினர் கைப்பற்றினர்.

1995இன் பிற்பகுதியில் பலாலியிலிருந்து யாழ் நகரை நோக்கி ஆரம்பிக்கப்பட்ட "றிவிரெச" இராணுவ நடவடிக்கையினால் நான்கு இலட் சத்து ஐம்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் யாழ்ப்பாணம் வலிகாமப் பிரதேசத்திலிருந்து ஓரிரு நாட்களில் செம்மணி வீதி, கோப்பாய் வீதி வழியாக யாழ் மாவட்டத்தின் தென்ம ராட்சி, வடமராட்சிப் பகுதிகளுக்கும் ஏனைய மாவட்டங்களுக்கும் இடம்பெயர்ந்து சென்ற பின்னர் யாழ். நகரத்தை இராணுவத்தினர் கைப்பற்றினர். 1996 சித்திரை மாதம் யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளான தென்ம ராட்சி, வடமராடச்சி போன்ற பிரதேசங் களையும் இராணுவதத்தினர் கைப்பற்றினர் புலம் பெயர்ந்தவர்களும், வடமராட்சி, தென் மராட்சி மக்களுமாக யாழ் குடாநாட்டு மக் களில் ஐம்பது வீதமான மக்கள் வெளிமாவட் டங்களுக்குச் செல்ல மிகுதி ஐம்பது வீத மானவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டிற்குட் சென்றார்கள். 1996ஆம் ஆண்டு நடுப்பகுதிக் குப் பின்னர் யாழ்குடா முழுவதையும் தமது கட்டுப்பாட்டிற்குள் இராணுவத்தினர் கொண்டு வந்தனர்.





"சமாதானத்துக்கான போர்" மூலம் இரா ணுவத்தினர் யாழ் குடாநாட்டை தமது கட்டுப் பாட்டின் கீழ் கொண்டுவந்த பின்னர் யாழ் நகரத்திலிருந்த இராணுவத்தினருக்குப் பொறுப்பாக மேஜர் ஜெனரல் ஜானகப் பேரேரா இருந்தபோது குடாநாட்டில் கைதாவோர், காணாமற்போவோர் பட்டியல் நாள்தோறும் அதிகரித்துச் சென்றதுடன், பெண்கள் மீதான பாலியற் துன்புறுத்தல்களும் மக்கள் உயிரிழப் புகளும் அதிகரித்தன. 1996 நடுப்பகுதிக்குப் பின்னான ஆறு மாதக் காலப்பகுதியில் யாழ் பாணத்தில் காணாமற்போனோர் பட்டியல் எழுநூறிற்கு மேல் அதிகரித்தது. யாழ். குடாவில் காணாமற்போன இளைஞர், யுவதிக ளினது பெற்றோர்கள், உறவினர்கள் ஒன்று சேர்ந்து "கைதானோர் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம்" என்ற அமைப்பை உரு வாக்கி இன்றுவரை போராட்டம் நடத்தி வரு கின்றனர்.

காணாமற்போனவர்களின் உறவினர் களினால் மேற்கொள்ளப்பட்ட போராட்டத் தினாலும் சர்வதேச அழுத்தத்தினாலும் அன் றைய சனாதிபதி சந்திரிக்கா பண்டாரா நாயக்கா குமாராதுங்க இராணுவத்தினராற் கைது செய்தபின்னர் காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரிக் இராணுவ உயர் அதி காரிகளைக் கொண்ட ஆணைக்குழுவினை அமைத்தார்.

1997இன் நடுப்பகுதியில் பாதுகாப்பு அமைச் சினால் நியமிக்கப்பட்ட பனாங்கொடை, பந் துல குணவர்த்தன ஆகிய இராணுவ உயரதி காரிகளைக் கொண்ட குழு விசாரணையை மேற்கொண்டது. பாதுகாப்புஅமைச்சினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு மூன்று தடவைகள், நான்கு தடவைகளென மாறி மாறி விசாரணைகளை நடத்தியும் கைதா னோர், காணாமற்போனவர் தொடர்பாக இன் றுவரை எந்தவிதமான இறுதியான தீர்வும் உறவினர்களுக்கு வழங்கப்படவில்லை.

1996 செப். ஏழாம் திகதி சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டுப் பாலியல்வல்லுறவிற்கு உட்படுத்தப ்பட்ட பின்னர் கழுத்து நெரிக்கப் பட்டதால் உயிரிழந்தார். கிருசாந்தியைத் தேடி இராணுவமுகாமிற்குச் சென்ற தாயாரான இராசம்மா, சகோதரர் பிரணவன், அயலவர் கிருபாமூர்த்தி ஆகியோரும் இராணுவத் தினராற் படுகொலை செய்து புதைக்கப் பட்டனர்.

கிருசாந்தியும் அவரது உறவினர்களும் இரா ணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு உயிரி ழுந்தது தொடர்பாக நீதிமன்றில் அவர்களது உறவினர்களால் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு, வழக்கின் தீர்ப்பின்படி குற்றவாளிகளாக அடை யாளங்காணப்பட்ட ஐந்து இராணுவத்தினருக் கும் ஒரு காவற்றுறையினருக்கும் தண்டனை வழங்கப்பட்டது.

தீர்ப்பு வழங்கப்பட்டவர்களிலில் லான்ஸ் கோப் ரல் சோமரட்ணா ராஜபக்ச விசாரணையின் போது கீழ்வருமாறு வாக்குமூலம் அளித்தார்.

"யாழ்குடாநாட்டில் பரவலாக கைதுசெய்து காணாமற்போனவர்களில் பெரும்பாலானவர் கள் சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். இவர்களின் சடலங்கள் மேலதிகாரிகளின் உத்தரவின்பேரில் இரவில் எடுத்துச்செல்லப்பட்டு செம்மணியில் புதைக்கப் படுவதுண்டு. முந்நூறு, நானூறு பேரை புதைத்த புதைகுழிகளை என்னால் காண் பிக்க முடியும்" என்றார்.

1999ஆம் ஆண்டில் "லான்ஸ் கோப்ரல் சோம ரட்ணா ராஜபக்ச" வினால் செம்மணியில் அடையாளம் காட்டப்பட்ட இடங்களில் புதை குழிகளைத் தோண்டும் பணி ஆரம்பிக் கப்பட்டது.

1999ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் செம் மணிப் புதைகுழிகள் வவுனியா மாவட்ட நீத வான் இளஞ்செழியன், றுகுணு பல்கலைக் கழக மருத்துவப்பீட பேராசிரியர் நெரியல்ல, மற்றும் சட்டத்தரணிகளான கேசவன், இளங் கோ, பரமராஜா, பொன்.பூலோகசிங்கம் ஆகி யோர் முன்னிலையில் தோண்டப்பட்டன. இச் செம்மணிப்பகுதியில் அமைந்த அரி யாலை கொட்டுக் கிணற்றடி, தயா கட்டடம் அமைந் துள்ள பகுதி, செம்மணிவளைவுப் பகுதியென புதைக்கப்பட்ட இடங்கள் அடையாளப்படுத் தப்பட்டது.

முதற்தடவையாக புதைகுழி தோண்டும்போது பதினொரு எலும்புக்கூடுகள் கண்டுபிடிக் கப்பட்டன. இவை யாழ் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுப் பிரேதபரிசோதனையின் பின் பதினாறு வயதுக்கும் முப்பத்தைந்து வயதுக் கும் உட்பட்டோரினதென அடையாளங் காணப்பட்டது. இதன்போது சைவ மத அந் தணர் ஒருவர் சாளி மோட்டார்சைக்கிளுடன் புதைக்கப்பட்டிருந்தமையும் கண்டுபிடிக் கப்பட்டது. அத்துடன் முதல் கட்டம் முடி வடைந்தது.

இரண்டாவது தடவை தோண்டுவதற்கு முன் பாக அப்பகுதியின் பல இடங்களில் இரவு நேரங்களில் மக்கள் செல்வதை இராணுவம் தடைசெய்தது. மேலும் அவ்வேளையில் அப்பகுதியில் வாகனங்கள் அதிகளவில் நட மாடியதை மக்கள் அவதானித்தாத்கள். பின் னர் இரு வாரம் கழிந்த நிலையில இரண் டாவது புதைகுழி தோண்டும் பணி ஆரம்ப மாகியது. ஆறு எலும்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டன. இவற்றில் ஒன்று பெண்ணி னுடையதும் மிகுதி ஆண்களினுடையவை யென அடையாளங்காணப்பட்டன.

இத்துடன் செம்மணிப் பகுதியில் மனிதப் புதை குழிகளைத் தோண்டும் பணிகளை இடை நிறுத்தினார்கள். இன்றுவரை செம்மணி மனிதப் புதைகுழிகள் தொடர்பாக எந்தவித மான இறுதி முடிவினையும் நீதித்துறை மேற்கொள்ளவில்லை.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலை கள் (1956-2008)



# மந்துவில் படுகொலை 15.09.1999

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்திற்கு அருகில் மந்துவில் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்து மக்களின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய வகையில் மந்துவில் சந்தியில் பொது நிறுவனங்கள், வியாபார நிலையங்கள், சிறிய சந்தை, கோயில், தேவாலயம் என்பன அமைந்துள்ளன. மந்துவிற் கிராம மக்கள் நாளாந்த தேவைகளிற் பெரும்பாலானவற்றை இங்கே பூர்த்திசெய்து வாழ்ந்து வந்தனர்.



15.09.1999 அன்று வழமைபோல குழந்தைகள், இளையவர், முதியவரென பலதரப்பட்டவர்களும் சந்திக்குத் தமது தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு வந்திருந்தனர். காலை 10.25 மணியளவில் விமானப் படையின் இரண்டு "கிபீர்" குண்டுவீச்சு விமானங்கள் முல்லைத்தீவு வான்பரப்பினூடாக பறந்து வந்து மந்துவிற் பகுதியை பத்து நிமிடங்களாக வட்டமிட்டு மக்கள் கூடி நின்ற மந்துவில் சந்தைப் பகுதிமீது குண்டுத் தாக்குதலை நடத்தின.

விமானத் தாக்குதலில் சம்பவ இடத்தில் பன்னிரண்டு பொதுமக்கள் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களின் உடல்கள் சில அவ்விடத்திலும், வீதியிலும், பற்றைக்குள்ளும், கிணற்றுக்குள்ளும் தூக்கி வீசப்பட்டிருந்தன. இறந்தவர்களின் உடல்கள் சிதைந்த நிலையிலிருந்தன. படுகாயமடைந்திருந்தவர்களை அப்பகுதி மக்கள் வாகனங்களில் ஏற்றி புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார்கள். இதில் பத்திற்கும் மேற்பட்டவர்கள் அன்று மாலையே உயிரிழந்தனர். இச்சம்பவத்தின் போது நாற்பதிற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். வியாபார நிலையங்கள், பயன்தருமரங்கள், கால்நடைகள் போன்ற பல லட்சம் பெறுமதியான சொத்துக்களும் அழிந்தன.

இச்சம்பவத்தில் கணவரை இழந்த்த சுப்பிரமணியம் சரஸ்வதி கூறும்போது, "எனது கணவர் காணியில் கிடைக்கும் தேங்காய்களைக் கொண்டு சென்று மந்துவில் சந்தியில் விற்றுவிட்டு வருவார். சம்பவ தினமன்றும் பத்துத் தேங்காய்களை விற்றுவிட்டு சாமான்கள் வாங்கி வரவென்று போனார். கிபிர் விமானங்கள் சந்திப் பகுதியில் குண்டுகளைப் போட்டதென்று அறிந்தவுடன், தகப்பனைத் தேடி மகன் பிறேமன் போனார். நான் என்ன நடந்ததோ என்று தெரியாமல் பயத்துடனிருந்தேன். மகன் போன போது வேலிக் கரையில் நாடியைப் பொத்திப் பிடித்தபடி படுத்திருந்தாராம். உடனே வீதியில் வந்த மோட்டார் சைக்கிளை வாங்கி புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு ஏற்றிக்கொண்டு போகும் போது இடை நடுவிலே இறந்து விட்டார். ஏற்கனவே எனது ஆறாவது மகன், 1985 ஆம் ஆண் டு சிறீலங்கா இராணுவப் பிரச்சனைக்குப் பயந்து, வவுனியாவில் இருந்த மூத்த மகனின் வீட்டில் இருந்து பத்தாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்த வேளை, 1985ம் ஆண்டு வைகாசி மாதம் இருபதாம் திகதியன்று வவுனியா ஆச்சிக்குளம் பகுதியில் வைத்து சிறீலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். தற்போது பதின்நான்கு ஆண்டுகளின் பின்னர் எனது கணவரையும் சிறீலங்கா விமானப்படையினர் குண்டு வீசிக் கொன்றுள்ளனர்."




இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சின்னையா ஜெயபாலசிங்கம் - சுய தொழில் - 37
02. சண்முகம் கிருபாகரன் - தொழிலாளி - 22
03. சவிரி யோன் விவசாயம் - 52
04. சங்கரப்பிள்ளை செல்வமாணிக்கம் - தொழிலற்றோர் - 70
05. ஞானசேகரம் இலட்சுமிப்பிள்ளை - வீட்டுப் பணி - 43
06. ஜெயராமன் சந்திரகுமார் - தனியார் தொழில் - 20
07. அலன்றோஸ் கொண்டியூசியஸ் - கடற்றொழில் - 19
08. அந்தோனிப்பிள்ளை - தனியார்தொழில் -
09. ஆறுமுகம் ஜெயராமன் - 50
10. சின்னையா ஜெயபாலசிங்கம் - விவசாயம் - 37
11. பாக்கியநாதன் றீற்றம்மா - வீட்டுப்பணி - 56
12. தனராஜ் ஜெனோவி - வீட்டுப்பணி - 24
13. வேதநாயகம் செபஸ்தியாம்பிள்ளை - கடற்றொழில் - 52
14. துரைசிங்கம் சபாநாயகம் - மாணவன் - 21
15. இராசநாயகம் உதயகுமார் - கடற்றொழில் - 20
16. இராசேந்திரம் சத்யகுமார் - தனியார் தொழில் -25
17. குணசிங்கம் ஜெயச்சந்திரன்- சுயதொழில் -33
18. கணபதிப்பிள்ளை சத்தியபாமா - தொழிலாளி - 25
19. கனகசபை மிதிலா - வீட்டுப்பணி - 26
20. அன்ரனிலியோ கிறிஸ்ரிஸ்புளோரன்ஸ் - வீட்டுப்பணி - 54
21. செல்லையா ஆறுமுகம் - 59
22. கணபதிப்பிள்ளை யோகராசா - 36
23. அன்ரனிதவராசா திரேசம்மா - 50
24. அன்ரனிலியோ மெல்றோஸ் - 24
25. சின்னத்தம்பி தம்பு - 55
26. ஜெயமஸ் ஜெயசங்கர் - 33
27. பத்மராசா ஜெனிற்றா - மாணவி - 15
28. சந்திரசேகரம் சயந்தினி - மாணவி - 12
29. தம்பையா சுப்ரமணியம் - விவசாயம் - 67

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. சூ.பேதுறுப்பிள்ளை - 80
02. இ.தனேஸ்வரி - 55
03. இ.மகேஸ்வரி - 55
04. நா.அருந்தவமலர் - 52
05. நாகலிங்கம் - 45
06. க.தங்கையா - 48
07. கனகையா - 43
08. கந்தையா நாகலிங்கம் - 35
09. கந்தையா வள்ளிப்பிள்ளை - 70
10. கதிரேசு தேவராசா - 39
11. கி.அன்னலட்சுமி - 61
12. கிருஸ்ணபிள்ளை அன்னலட்சுமி - 51
13. குணசிங்கம் - 50
14. குணரத்தினம் நிறஞ்சன் - மாணவன் - 09
15. பால்ராஜ் பாசமலர் - 27
16. பாலசிங்கம் பால்ராஜ் - சுயதொழில் - 29
17. பத்மராஜா மதியமலர் - தொழிலாளி - 40
18. பி.மரியமலர் - 52
19. பீற்றர்கென்றிலோல் லோறன்சியா - 18
20. சைலன் குழந்தை 03
21. த.பாலசிங்கம் - 66
22. த.தனுசா - குழந்தை - 03
23. த.தேவராசா - 39
24. தி.தர்சினி மாணவி 17
25. தியாகராசா தர்சினி - மாணவி - 17
26. தியாகராசா செல்வராணி - 44
27. ம.தனராஜ் - 20
28. மயில்வாகனம் - 45
29. மகாலிங்கம் தனராஜா - 29
30. மரியநாயகம் - 48
31. முத்துசாமி - 48
32. முத்துசாமி கோழிமனசாமி - 48
33. அ.,ருதயராசா - 20
34. அ.மரியசோபனா - 23
35. அ.விதுசன் - 35
36. அன்ரன் பெனடிற் - 51
37. அலன்றோஸ் மரியநாயகி - 40
38. ஜெ.ஜெயசங்கர் - 30
39. ஜெ.சரஸ்வதி - 50
40. ஜெயசங்கர் விமல்ராஜ் - மாணவி - 06
41. ஜெயராமு சரஸ்வதி - 50
42. ஜெயராமன் - 60
43. யோன் நான்சி - 19
44. கே.தவசீலன் - 19
45. கே.மேனகா மாணவன் 18
46. கோபாலகிருஸ்ணன் பத்மாவதி - 45
47. பொ.வள்ளிப்பிள்ளை - 90
48. பெர்னான்டோ அன்ரலிவின்சன் - 35
49. பெரியதம்பி நடராசா - கடற்றொழில் - 51
50. தெ.மரியமலர் - 68
51. சே.மரியம்மா - 68
52. சேதுப்பிள்ளை - 80
53. செல்லையா சந்திரசேகரம் - சுயதொழில் - 27
54. செல்லத்துரை மகேஸ்வரி - 46
55. ச.யோகராணி - 41
56. ச.லோகிதா - 15
57. ச.சர்மிலா - 23
58. சின்னத்தம்பி கந்தசாமி - 37
59. சீனியர் சிவநாதன் - 18
60. சிவகுரு சூரியமூர்த்தி - கடற்றொழில் - 33
61. சிவானந்தம் சுதாகரன் - 19
62. சிவநேசன் அழகேஸ்வரி - வீட்டுப்பணி - 29
63. சிவசுப்பிரமணியம் கம்சநந்தினி - வீட்டுப் பணி - 21
64. சுசிதரன் சூட்டி - 29
65. சரஸ்வதி - 50
66. சற்குணன் யோகராணி - 41
67. ராஜா சஜீபன் - குழந்தை - 03

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# சிலாவத்துறைப் படுகொலை 02.09.2007

2007இல் சிறீலங்கா இராணுவத்தினரின் மன்னார் மீதான வலிந்த தாக்குதலின் விளைவாக சிலாவத்துறையைச் சேர்ந்த மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறத் தொடங்கினர். இவ்வாறு ஓடிக்கொண்டிருந்த 13 குடிமக்களை ஏற்றிக்கொண்டு வான் ஒன்று சிறீலங்கா இராணுவத்தினரின் கிளைமோர்த் தாக்குதலுக்கு இலக்கானது. இச்சம்பவம் 2007 செப்ரெம்பர் 02ஆம் நாள் இடம் பெற்றது. இராணுவத்தின் மத்தியில் எற்பட்ட இம்மோதலின்போது கொல்லப்பட்ட பொது மக்களின் உடலம் இரண்டு நாட்களாக அகற் றப்படவில்லை. பழுதடைந்த உடலம் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவால் மன்னார் வைத் தியசாலைக்கு எடுத்துவரப்பட்டது. இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் ஒரு தந்தை, தாய், 04 வயது மகனும் உள்ளடங்குவார்கள்.

இதிலிருந்து மூன்று வாரங்களின் பின்னர் செப்ரெம்பர் 26ஆம் நாள் வணபிதா நீக்கிலாப் பிள்ளை பாக்கியரஞ்சித் இவ்வாறானதொரு கிளைமோர்த்தாக்குதலில் இதற்கு அரு காமையிலுள்ள இடத்தில் வைத்துக் கொல் லப்பட்டார். அவர் அப்பொழுது தாக்குதல் காரணமாக பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு உணவு விநியோகம் செய்து கொண்டிருந்தார். இதில் அவரது உதவியாளரும் கொல்லப் பட்டார்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. யேசுதாசன் எலிசபெத் - 42
02. ஜெயராஜ் ஒஸ்கார் - 20
03. கிருக்ஷ்ணபாலன் - 25
04. மணியம் ஜெயராஜ் - 50
05. ஜோன்ஸ் -
06. நாகமுத்து சரோஜர - 60
07. புகேந்திரன்
08. புவி சுவேதா - 04
09. செல்வகுமார் - 24
10. செல்வகுமார் பிரின்ஸி, 25
11. செல்வராசா ராகுலன், 04

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)














SRI LANKAN CONTRIBUTION TO UNITED NATIONS PEACEKEEPING OPERATIONS

# கப்டன் லலித், கப்டன் விஜயசிறீவர்த்தன, துடுகல்ல, உதயகுமாரா, கான்ஸ்டபிள் நசார் ஆகியோர் அரியாலையில் கைதானோரை கொலை செய்தனர்!

## கோப்ரல் ராஜபக்சவின் நீதிமன்ற வாக்குமூலம்

1996ஆம் ஆண்டு முதல் நான் அரியாலை படைமுகாமில் கப்டன் லலித் கேவாவின் கீழ் பணியாற்றினேன். அரியாலைப் பகுதியிலிலுள்ள விபரங்களைச் சேகரிப்பது தான் எனது பணி. அக்காலப்பகுதியில் அரியாலைப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடாத்தப்படும். பிடிக்கப்படும் பொதுமக்கள் நெடுங்குளம் பகுதிக்குக் கொண்டு வரப்பட்டு முகமூடிகள் முன்னால் நிறுத்தப் பட்டு விசாரணை செய்யப்படுவது வழக்கம்.



ஒரு நாள் ஐம்பது பேரை முகமூடி போட்ட தலையாட்டிகள் அடையாளம் காட்டினார்கள். அவர்கள் ஐம்பது பேரையும் வீடியோவில் நாம் படமெடுத்தோம். அதனை நாம் ஏற்கனவே வைத்துள்ள குடியிருப்பாளர் அட்டவணையுடன் ஒப்பிட்டுப்பார்த்தோம். அதன் பின்னர் என்னிடம், ஆகியோர் வீடுகளுக்குச் சென்று மக்களுடன் நட்புறவு மாதிரிப் பழகி படங்களில் தெரியும் சந்தேக நபர்களை கைது செய்யும்படி புலனாய்வுப் பிரிவு லெப். லலித் கேவாகே துடகல்ல பணித்தனர். நாமும் அப்படியே செய்தோம்.

அரியாலை தபாற்கட்டைச் சந்தியில் ஏழாம் “சீ” பிரிவு முகாம். “சீ” முகாமிற்கு கப்டன் ஜெயவர்த்தனாவே பொறுப்பு. அம்முகாமிலும் சிலர் கைதாகி தடுத்து வைக்கப்பட்டனர். அரியாலை துண்டிப் பகுதியில் சிவில் நிர்வாகக் கடமையில் நான் இருந்ததால் அப்பகுதி முழுவதும் எனக்குத் தெரியும். எனக்குத் தமிழ் தெரியாதாதலால் குணரட்ணம் என்பவரே மொழி பெயர்த்து உதவுவார். அவரது வீட்டிற்கும் நான் அடிக்கடி சென்றுள்ளேன். கைது செய்யப்படுவோர்களை விசாரணை நடத்த “சீ” பிரிவு முகாமிற்கும், செம்மணி முகாமிற்கும், தபாற் கட்டை முகாமிற்கும் மாறிமாறிப் போய் வருவேன். இவ்வாறு நான் சென்று வருவதால் கைது செய்யப்பட்டு அம்முகாம்களில் இருப்போரை நான் காணக்குடியதாக இருந்தது, கிருஷாந்தியைக் கொலை செய்தது யாரென்று எனக்குத் தெரியாது அவர்கள் கொண்டு வரும் சடலங்களைப் புதைப்பது தான் எனது வேலை. கிருஷாந்தி கொலை தொடர்பாக மேலதிகாரிகள் கைதுசெய்யப் படவுமில்லை. அவர்களுக்கெதிரான வழக்குமில்லை. ஆனால் எனக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இறுதியாக கொலை செய்தது நான் தான் எனக் கூறப்பட்டு மற்றவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளார்கள். நான் தான் முதன் முதலாக வாக்கு மூலம் அளித்தேன். சடலங்களை புதைத்த பத்து இடங்களை என்னால் சரியாக இடங்காட்ட முடியும். ஐந்து இடங்களை ஏ.எஸ். பெரேராவால் காட்ட முடியும். ஏனைய இடங்களை ஜெயதிலகாவால் காட்ட முடியும். நீதிமன்றம் அவர்களையும் அழைக்கவேண்டும்.

அரியாலையில் கல்வித்திணைக்கள ஊழியர் செல்வரட்ணம் என்பவரை நாம் கைது செய்து “சீ” பிரிவு முகாமிற்குக் கொண்டு சென்றோம். மறுநாள் அவரின் மனைவி முகாமிற்கு வந்து தனது கணவனின் கைது பற்றி கேட்டார். அவ்வேளை செல்வரட்ணம் கைகால் கட்டப்பட்ட நிலையில் இருந்தார். அவர் தனக்கும் புலிகளுக்கும் எவ்வித தொடர்புமில்லை எனவும், தன்னை விடுவிக்கும் படியும் என்னிடம் மன்றாடினார். அவரை எனக்குத் தெரியும் என நான் கூறி, கப். லலித் கேவாவையும் கப். விஜெய சிறீவர்த்தனாவையும் அவரை விடுவிக்கும்படி கோரினேன். அவர்களும் விடுவிப்பதாகக் கூறினார்கள். ஆனால் மறுநாள் அங்குள்ள அறையொன்றில் பத்துச் சடலங்கள் கிடந்தன. கப்டன் லலித்தும் லெப். துடுகல்லையும் தான் செல்வரட்ணத்தை கைது கெய்து முகாமில் வைத்திருந்தனர். எனவே அவர்களது கொலைக்கும் அவர்கள்தான் பொறுப்பு. “சீ” பிரிவு முகாமிற்கென சித்திரவதை முகாம் ஒன்றும் உண்டு. இதேபோல அரியாலையில் யோகேஸ்வரன் என்பவரும் கைதுசெய்யப்பட்டு “சீ” பிரிவு முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டார். உறவினர்கள் கெஞ்சி மன்றாடியும் அவரை விடுதலை செய்ய அதிகாரிகள் மறுத்து விட்டனர். அவரை சித்திரவதை செய்வதற்காக செம்மணியிலுள்ள கோவிலுக்கருகிலுள்ள சித்திரவை முகாமிற்கு பகல் பத்து மணியளவில் கொண்டு சென்றனர். அவ்வேளை அவரை விடுதலை செய்யுமாறு மேலிடத்திலிருந்து உத்தரவு வந்தது. அந்த உத்தரவுடன் நான் அங்கு சென்றேன். ஆனால் அங்கு நான் சென்று பார்த்தபோது அதிகாரிகளான உதயகுமார விஜய சிறீவர்த்தன, துடுகல்ல ஆகியோர் யோகேஸ்வரனைத் தலை கீழாகக் கட்டிவிட்டு பிளேட்டினால் அவரை வெட்டிக் கொண்டிருந்தனர். மற்றொரு அறையில் வேறு ஒருவர் பொல்லொன்றால் அடித்து கொலை செய்யப்பட்டுக் கிடந்தார். பின்னர் அவ் வீட்டின் முன் புறமாக அவர்களின் சடலங்கள் புதைக்கப்பட்டன. மேலிடத்திலிருந்து யோகேஸ்வரனை விடுவிக்க வந்த உத்தரவை சொல்வதற்காகவே நான் அங்கு போனேன்.




அரியாலையில் சுதாகரன், பார்த்தீபன் ஆகிய இருவர் வியாபாரம் செய்வதற்காக பாஸ் அனுமதி கோரி என்னிடம் வந்தனர். நான் அதை லலித் கேவாவிடம் கூறினேன். அவர்கள் இருவரையும் கூட்டிவரும் படி அவர் சொன்னர். அதன்படி நான் இருவரையும் தபாற்கட்டை முகாமிற்குக் கூட்டிச் சென்றுவிட்டேன். ஆனால் அந்த இருவரையும் துடுகல்லவும், விஜயவர்த்தனாவும் கட்டித் தூக்கி கொலைசெய்து விட்டனர். அப்போது அங்கு அப்துல்ஹமீட் நசார், அமரசிங்க ஆகியே பொலீஸ் காரரும் இருந்தனர். அவர்களுக்கு நன்கு தமிழ் தெரியும். இவர்கள் மொழிபெயர்ப்பாளர்களாக இருப்பார்கள். ஒருநாள் அவர்கள் நெடுங்குளம் வீதியிலுள்ள வீடு ஒன்றைசோதனையிட உதவும்படி தொலை வானொலி மூலம் எனக்கு செய்தி தந்தனர். ஏ.எஸ். பெரேரா என்ற சிப்பாயுடன் நான் அந்த வீட்டிற்குச் சென்றேன். அந்த வீட்டில் ஒரு ஆண் தனது பிள்ளையுடன் இருந்தார். அவரின் மனைவி பக்கத்து வீட்டிற்கு அவ்வேளை சென்றிருந்தார் இவ்விருவரையும் நாம் கூட்டிவர அவர்களை செம்மணி உப்பளத்திற்கு அழைத்துச் சென்றனர். என்னை மண்வெட்டி ஒன்றினை எடுத்து வரும்படி சொன்னார்கள். நான் அங்கிருந்து சென்றேன். திரும்பி வந்தபோது அங்கே அப்பெண் உடைகள் எதுமின்றி நிர்வாணமாகக் காணப்பட்டார். இப்பெண்ணுக்கு மிக அருகில் கப். லலித் நின்றார். சற்றுத் தள்ளி அந்தப் பெண்ணின் கணவரும் மற்ற இருவரும் நின்றனர். நானும் பெரேராவும் மண்வெட்டியைக் கொண்டு சென்றோம். அம் மண்வெட்டியை வாங்கிய கப். லலித்கேவாவும் அப்துல்ஹமீட் நசாரும் அவ் இருவரையும் (கணவரையும், மனைவியையும்) அதனால் அடித்துக் கொன்றனர். அவ்விரு சடலங்களையும் செம்மணியில் புதைத்தனர். அவ்விடத்தை என்னால் காட்ட முடியும்.


JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சினை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Free Estimate!
Call today
$50 OFF
Broken Glass...?
We will fix it within 24 hour.
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# கோட்டை இராச்சியத்தில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட கோட்டை கந்தசுவாமி கோயில்!



சிவ பூமியின் சுவடுகளைத் தேடி நான் சென்ற இடங்களில் ஒன்று தான் பண்டைய கோட்டை இராச்சியம். எனது அன்றைய ஆய்வுப் பயணம் கோட்டை இராச்சியத்தின் தலைநகரில் அமைந்திருந்த கோயில்களைக் கண்டறிவதாகும்.

கொழும்பு கோட்டையில் இருந்து பத்தரமுல்லைக்குச் செல்லும் வீதியில், ராஜகிரிய சந்தியை அடுத்து ஒரு கி.மீ தூரத்தில் உள்ள தியவன்னா ஓயா குளத்தின் எதிர்ப் பக்கம் கோட்டை வீதி சந்தி அமைந்துள்ளது. இச்சந்தியில் இருந்து தெற்குப் பக்கமாக 1.7 கி.மீ தூரம் வரை உள்ள பிரதேசம் உள் கோட்டையாகவும், இங்கிருந்து மேலும் ஒரு கி.மீ தூரத்தில் உள்ள மிரிஹான சந்தி வரையான பிரதேசம் வெளிக் கோட்டையாகவும் பண்டைய காலத்தில் விளங்கின. இவை அத்துள் கோட்டே, பிட்ட கோட்டே என அழைக்கப்படுகின்றன. இவ்விரு கோட்டைகளும் மொத்தமாக 6 சதுர கி.மீ பரப்பளவில் அமைந்திருந்தன. உள் கோட்டை மட்டும் 1.8 சதுர கி.மீ பரப்பளவைக் கொண்டிருந்தது. ஓர் முக்கோண வடிவிலான இப்பிரதேசமே சுமார் 600 வருடங்களுக்கு முன்பு தோற்றம் பெற்ற கோட்டை இராச்சியத்தில் தலைநகர் பகுதியாகும். இப்பிரதேசத்தின் வடமுனையில் இருந்து, வடமேற்கு முனை வரை மூன்றரை கி.மீ தூரத்திற்கு கொலன்னாவ கால்வாய் அரணாகவும், வடமுனையில் இருந்து வடகிழக்கு முனை வரையான நான்கு கி.மீ தூரத்திற்கு தியவன்னா ஆறு அரணாகவும் அமைந்திருந்தது. இம்முக்கோண பிரதேசத்தின் தெற்கில் இருந்த கீழ்ப்பகுதி “கபோக்” என்றழைக்கப்படும் சிவப்பு நிற முருகைக் கற்களினால் கட்டப பட்ட உயர்ந்த கோட்டை மதில்கள் மூலம் பாதுகாக்கப் பட்டிருந்தது. இக்கோட்டை இராச்சியத்தில் உள் கோட்டைக் குள்ளும், வெளிக் கோட்டைகுள்ளும் பல கோயில்கள் அமைக் கப்பட்டிருந்தன.

கோட்டை இராச்சியத்தில் இருந்த கோயில்கள் பற்றிய சிங்கள மொழிக் குறிப்புக்கள் சிலவற்றைத் தேடினேன். அப்போது கொடகே புத்தக சாலையில் இரண்டு முக்கிய நூல்கள் கிடைத்தன. இவை இரண்டு சந்தேச நூல்களாகும். இந்நூல்களில் பொ.ஆ. 15ஆம் நூற்றாண்டில் கோட்டை இராச்சியம் அமைக்கப்பட்ட பின்பு கட்டப்பட்ட கந்தசுவாமிக் கோயில் பற்றிக் கூறப் பட்டுள்ளது. இக்கோயில் கோட்டை மன்னர்களால் பூஜிக்கப் பட்டதாகத் தெரிய வருகிறது. கோகில சந்தேச, பரவி சந்தேச ஆகிய சிங்கள தூது விடு இலக்கியங்களில் கோட்டை கந்த சுவாமி கோவில் பற்றிய பாடல்கள் உள்ளன. கோட்டை அரச மாளிகையின் அருகில் உள் கோட்டையினுள் இக்கோயில் அமைந்திருந்தது.

எனக்குக் கிடைத்த இரு ஆதாரங்களையும் வைத்துக் கொண்டு முதலில் அத்துள் கோட்டே பகுதிக்குச் சென்றேன். அங்கே பரகும்பா பிரிவேன எனும் ஓர் பௌத்த விகாரை உள்ளது. அங்கு கோட்டை இராச்சியம் பற்றிய சில தகவல்கள் கிடைத்தன. முக்கியமாக இக்கோட்டை இராச்சியத்தில் நான்கு முனைகளிலும் நான்கு தெய்வங்களுக்குரிய காவற் கோயில்கள் அமைந்திருந்ததாக அங்கிருந்த முக்கியஸ்தர்கள் கூறினர்.

அவற்றையும் எடுத்துக்கொண்டு ஒரு நாள் முழுவதும் கோட்டை இராச்சிய தலைநகரின் சுவடுகளைத் தேடி அலைந்தேன். மாளிகை வீதி, பெத்தகான நினைவுத் தூபி, அழகேஸ்வரர் மாளிகை, உள் கோட்டை அகழி, வெளிக்கோட்டை மதில், கருங்கல் அம்பலம், தலதா மாளிகை ஆகியவற்றை கண்டேன். மாலை 6 மணியாகி விட்டது. வீடு திரும்பி விட்டேன்.

கிடைக்கப்பெற்ற குறிப்புகளை அன்றிரவு ஆராய்ந்தேன். அப்போது கோட்டை இராச்சியத்தில் கந்தசுவாமிக் கோயில் இருந்த இடத்தை ஓரளவு அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. இருப்பினும் அதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என எண்ணினேன்.

அடுத்தநாள் காலை குறிப்பிட்ட இடத்தைத் தேடிச் சென்றேன். அது அது ஓர் மேட்டு நிலம். அங்கு தான் கோட்டை தொல் பொருள் காட்சிச்சாலை அமைந்துள்ளது. அங்கு சென்று பார்த்த போதுதான் பல உண்மைகள் தெரிய வந்தன. அந்த மெட்டு நிலத்தில் தான் கந்தசுவாமி கோயில் அமைந்திருந்ததாக அறியக் கிடைத்தது. அது மட்டுமல்லாது கோயிலின் இரண்டு கற்தூண்களின் துண்டுகளையும், கோயிலின் அதிஸ்டானத்தில் இருந்த யாளவரி சிற்பத் துண்டுகள் இரண்டையும் கண்டேன். இரண்டு நாட்கள் தேடலின் பின்பு இந்த அறிய பொக்கிஷங்கள் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியாக இருந்தது.

அங்கிருந்த அதிகாரி சில குறிப்புகளைத் தந்தார். கோட்டை இராச்சியம் பற்றிய மேலும் விபரங்கள் தேவை என்றால் கொழும்பு தேசிய நூதனசாலையில் முயற்சி செய்து பாருங்கள் என்றார். அப்போது நேரம் காலை 10 மணி. உடனே கொழும்பு தேசிய நூதனசாலைக்கு விரைந்தேன்.

அங்குள்ள நூலக அதிகாரியை சந்தித்து எனது தேவையை விளக்கினேன். அவர் பழைமை வாய்ந்த ஓர் உசாத்துணை நூலைத் தந்தார். அந்த நூலைப் புரட்டிப் பார்த்தவுடன் வியப் படைந்தேன். நான் எதிர்பார்க்காத மிகப்பெரிய பொக்கிஷம் அதிலே கிடைத்தது. அதுதான் போர்த்துக்கேயரால் இடித்தழிக் கப்பட்டு சுவடுகள் கூட இல்லாமல் போன கோட்டை கந்த சுவாமிக் கோயில் பற்றிய கல்வெட்டு. அது பற்றிய ஓர் குறிப்பு அந்நூலில் காணப்பட்டது. நூதனசாலை மூடும் வரையும் கோட்டை இராச்சியம் பற்றிய பல குறிப்புக்களை வாசித்து குறிப் பெடுத்தேன். அவற்றை போட்டோ பிரதி எடுக்கக் கேட்டேன். அனுமதி கிடைக்கவில்லை. கடைசியில் ஓர் உயர் அதிகாரியோடு பேசி கந்தசுவாமிக் கோயில் பற்றிய கல்வெட்டு குறிப்பை மட்டும் போட்டோ பிரதி எடுத்துக் கொண்டேன்.

பொ.ஆ. 1415 முதல் 1597 வரை தென்னிலங்கையின் இராச தானியாக விளங்கிய கோட்டையில் கந்தசுவாமி கோயில் அமைக்கப்பட்டிருந்தது. கொழும்பு பொரல்லயிலிருந்து பத்தர முல்ல செல்லும் வீதியில் உள்ள தியவண்ண ஓயாவின் இரு பாலங்களுக்கிடையில் தெற்கு நோக்கி பிட்டகோட்டே வரை உள்ள இடமே கோட்டை இராச்சியத்தின் தலைநகரமாகும். தியவண்ண ஓயாவின் கிளை ஆறுகளாலும், சதுப்பு நிலங் களினாலும் சூழப்பட்டு விளங்கும் இப்பகுதி உயர் மேடுகளையும், பள்ளங்களையும் கொண்ட முக்கோணப் பிரதேசமாகும். தியவண்ண ஓயாவும், அதையண்டிய சதுப்பு நிலப்பகுதியும் இயற்கை அரணாக அமைந்த இப்பகுதி சுமார் இரண்டு நூற்றாண்டு காலம் தென்னிலங்கையின் முக்கிய ஆட்சிப் பகுதியாக விளங்கியுள்ளது.

கோட்டை கந்தசுவாமிக் கோயில் அரச மாளிகைக்கருகில் உள் கோட்டையில் அமைக்குமளவிற்கு முக்கியத்துவம் பெற்றிருந்தது. அன்று கோட்டை மன்னர்களாலும், இந்து, பௌத்த மக்களாலும் பூஜிக்கப்பட்ட இக்கோயில் ஈ.டபிள்யூ. பெரேரா என்பவரின் வளவிற்கு அருகில் இருந்த மேடான இடத்தில் அமைக் கப் பட்டிருந்தது.

கருங்கற்தூண்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்த இக் கந்தசுவாமி கோயில் அன்று “மகாசேனன் மாளிகை” என்றும் அழைக்கப்பட்டு வந்தது. சீரும் சிறப்புடனும் விளங்கிய இக் கோயில் போர்த்துக்கேயரால் இடித்து அழிக்கப்பட்டது.

இன்று ஜயவர்தனபுர கோட்டே தொல்பொருட் காட்சிச்சாலை அமைந்திருக்கும் இடம்தான் ஈ.டபிள்யூ. பெரேரா என்பவரின் வீடு இருந்த இடம். இதனருகில் தான் புராதன கந்தசுவாமி கோயில் அமைந்திருந்ததாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இக்கோயிலின் எஞ்சிய சின்னங்கள் எனக் கருதப்படும் கற் தூண்கள் இரண்டும், மேலும் சில கற்தண்டங்களும் கோட்டே தொல்பொருட் காட்சிச் சாலையில் இன்றும் காணப்படுகின்றன.

கோட்டை இராச்சியத்தை ஆண்ட 6ஆம் பராக்கிமபாகுவின் விசுவாசமிக்க படைத் தளபதியாகவும், குடும்ப நண்பராகவும் விளங்கிய பணிக்கலவன் எனும் தமிழ்த் தளபதியின் மகனே செண்பகப் பெருமாள். இவனின் வீரதீரச் செயல்களினாலும், தனது விசுவாசமிக்க படைத் தளபதியின் நட்பின் பேரினாலும் செண்பகப் பெருமாளை மகனாகத் தத்தெடுத்தான் பராக்கிரம பாகு மன்னன். சுத்த சைவனான செண்பகப் பெருமாளின் குடும்பத்தினரின் வேண்டுகோளின் பேரில் கந்தசுவாமி கோயில் அமைக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

மேலும் இவ்வாலயம் பற்றி “சலலீஹினி சந்தேச” எனும் சிங்கள இலக்கிய நூலில் “மகாசேனன் எனும் தேவ அரசனின் மாளிகை” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கோட்டை இராச்சிய காலத்தில் முருகனை “மகாசேனன்” எனவும் பெளத்த மக்கள் அழைத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

கோட்டை கந்தசுவாமி கோயில் பற்றிய மேலும் பல முக்கிய சான்றுகள் கிடைத்துள்ளன. இக்கோயிலில் பொறிக்கப் பட்டிருந்த தூண் கல்வெட்டு ஒன்றும், மேலும் இக்கோயிலுக்குரிய தூண்கள் சிலவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு கண்டி வீதியில் 6ஆவது மைல் கல் அருகில் இருக்கும் மதகு ஒன்றின் அடிப்பகுதியில் இருந்து 32 கற்தூண்கள் கண்டுபடிக்கப்பட்டன. அந்நியர் ஆட்சிக்காலத்தில் இடிக்கப்பட்ட கோயில்கள், மாளிகைகள் போன்றவற்றின் கற்தூண்கள் கோட்டைகள் கட்டுவதற்கும், தேவாலயங்கள் கட்டுவதற்கும் மட்டுமல்லாது பாதைகள் அமைக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. போர்த்துக்கேயரின் காலத்தில் இடிக்கப்பட்ட கந்தசுவாமி கோயிலின் தூண்களும் பாதைகள் அமைக்கும் பிரசித்திப் பெற்ற ஆங்கிலேய நிறுவனமொன்றினால் மதகு கட்டுவதற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளது. இலங்கைத் தொல்பொருள் திணைக் களத்தின் அதிகாரியான ஜோசப் பியர்சன் என்பவரால் மதகின் கீழ்ப்பகுதியில் இத்தூண்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
இவற்றில் 13 தூண்கள் எளிமையான முறையில் சதுர வடிவில் செதுக்கப் பட்டுள்ளன. 11 தூண்களின் அடிப்பகுதி உச்சிப் பகுதியும், சதுர வடிவிலும் நடுப்பகுதி எண்கோண வடிவிலும் அமைக்கப் பட்டுள்ளது. 8 தூண்கள் பலவித சிற்பங்கள் செதுக்கப்பட்ட தூண்களாக உள்ளன. மிகுதி ஒரு தூண் கல்வெட்டு பொறிக்கப்பட்டதாக உள்ளது. தமிழ்மொழியில் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டின் மூலம் இத்தூண்கள் கந்தசுவாமி கோயிலுக்குரியவை எனத் தெரிய வருகிறது. இத்தூணில் 9 வரிகளில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.



இக்கல்வெட்டில் விஜயபாகு தேவரின் 11 ஆவது ஆட்சியாண்டில் வைகாசி மாதம் 10ஆம் நாள் ஒரு பிரதிநிதி மூலம் கந்தசுவாமி கோயிலுக்கு அளிக்கப்பட்ட தானம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பிரதிநியின் பெயர் தெளிவாகத் தெரியவில்லை. வழங்கப்பட்ட தானம் என்ன என்பதும் தெரியவில்லை. இக்கல்வெட்டு மேலும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டால் பல தகவல்களைப் பெறக் கூடியதாக இருக்கும்.

இக்கல்வெட்டும், தூண்களும் கோட்டை இராச்சியத்தில் அமைக்கப்பட்டிருந்த கந்தசுவாமி கோயிலின் எச்சங்களா அல்லது கோட்டைக்கு வெளியே களனிய பகுதியில் அமைந்திருந்த வேறு ஒரு கந்தசுவாமி கோயிலின் எச்சங்களா என்பது மேலாய்வு செய்யப்பட வேண்டும்.

பொ.ஆ. 14ஆம் நூற்றாண்டில் கோட்டை இராச்சியம் போது அழகேஸ்வரனால் கோட்டையின் நான்கு மூலைகளிலும் நான்கு காவற்கோயில்கள் கட்டப்பட்டன. இவற்றில் சுப்பிரமணியர் கோயிலும் ஒன்றாகும். இக்கோயிலும் மேலே குறிப்பிட்டிருந்த கந்தசுவாமி கோயிலும் ஒரே கோயில்களா அல்லது இருவேறு கோயில்களா என்பதும் தெரியவில்லை. இருப்பினும் கடந்த இரண்டு நாட்கள் பெரு முயற்சியின் பின்னர் கோட்டை இராச்சியத்தில் இருந்து அழிந்து போன ஓர் கோயில் பற்றிய மிக முக்கிய விபரங்களைக் கண்டறிந்ததில் மனம் நிறைந்திருந்தது.

என்.கே.எஸ்.திருச்செல்வம்
வரலாற்று ஆய்வாளர்
இலங்கை

நன்றி: என்.கே.எஸ். திருச்செல்வம்



விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு
437.345.4203

# சிதறடிக்கப்படும் தமிழ் கவனக்குவிப்பு!

ஆகத்து 20, 2023




குருந்தூர் மலை; வெடுக்குநாறி மலை; பறாளை முருகன் கோயில்; தையிட்டி; திருகோணமலை, பெரியகுளம் உச்சிப் பிள்ளையார் மலை; மாதவனை மயிலைத்த மடு மேய்ச்சல் தரை; இராவணன் தமிழனா இல்லையா? மேர்வின் டி சில்வா தமிழர்களின் தலைகளைக் கொய்வாரா… என்றிவ்வாறாக அண்மை காலங்களில் தமிழ்க்கட்சிகள்; செயற்பாட்டாளர்கள்; ஊடகங்களின் கவனம் வெவ்வேறு திசைகளில் ஈர்க்கப்படுகின்றது. கிழமைக்கு ஒன்று அல்லது நாளுக்கு ஒன்று என்று ஏதோ ஒரு விவகாரம் தமிழ் மக்களின் கவனத்தை ஈர்க்கிறது.

எங்காவது ஒரு புதிய விகாரை கட்டப்படுகிறது, அல்லது எங்காவது ஒரு தொல்லியல் சின்னம் அபகரிக்கப்படுகிறது, எங்காவது ஒரு நிலத்துண்டு அளவீடு செய்யப்படுகிறது அல்லது அல்லது பறிக்கப்படுகின்றது, அல்லது யாராவது ஒரு சிங்கள அரசியல்வாதி தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களை வெளிப்படையாகப் பேசுகிறார்… இப்படியாக அடிக்கடி புதிது புதிதாக விவகாரங்கள் மேலெழுகின்றன. தமிழ் அரசியல்வாதிகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகங்களில் கவனங்கள் புதிய விடயங்களின் மீது குவிக்கப்படுகின்றன.

இவ்வாறு தமிழ்ச்சமூகத்தின் கவனத்தை அடுத்தடுத்து புதிய விடயங்களின் மீது குவியவைப்பதன் மூலம் திட்டமிட்டுத் தமிழ்ப் போராட்டசக்தி சிதறடிக்கப்படுகின்றதா? அரசாங்கம் திட்டமிட்டு “ட்ரெண்ட்களை செற்” பண்ணுகின்றதா?

சரத் வீரசேகர சொல்லுகிறார் இராவணன் ஒரு தமிழ் அரசன் இல்லையென்று. மேர்வின் டி சில்வா சொல்கிறார்… விகாரைகள் கட்டப்படுவதை எதிர்த்தால் தமிழ் மக்களின் தலைகளைக் கொய்து வருவேன் என்று. நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவற்றிற்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இவையெல்லாம் மினக்கெட்டுப் பதில்கூற வேண்டிய விடையங்கள் அல்ல. அவர்கள் திட்டமிட்டு தமிழ்மக்களின் கவனத்தை சிதறடிக்கிறார்கள். அவர்கள் திட்டமிட்டு தமிழ் மக்களை ஆத்திரப்படுத்துகிறார்கள். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் செயற்பாட்டாளர்களும் கட்சிகளும் இது விடயத்தில் அரசாங்கம் விரும்புவதுபோல அல்லது சிங்கள பௌத்த தீவிரவாதிகள் விரும்புவதுபோல அவர்கள் இழுக்கும் திசைக்கெல்லாம் எடுபடக்கூடாது. நிதானமாக விடயங்களை அணுக வேண்டும். அரசாங்கம் அல்லது சிங்கள பௌத்த தேசியவாதிகள் திட்டமிட்டு ட்ரெண்ட்களை செட் பண்ணுகின்றார்கள். அந்த ட்ரெண்டின் பின் தமிழ்மக்கள் அலையத் தேவையில்லை. அலையவும் கூடாது.

இந்த விடயத்தில் ஒரு மையத்திலிருந்து முடிவெடுக்கும் மக்களாக, ஒரு மையத்திலிருந்து விவகாரங்களை விளங்கிக் கொள்ளும் மக்களாக, ஒரு மையத்திலிருந்து எதையும் அணுகும் மக்களாக தமிழ் மக்கள் திரள வேண்டும். பிரச்சினைகளை அவற்றின் தொகுக்கப்பட்ட வடிவத்தில், அவற்றுக்குப் பின்னால் இருக்கும் அரசியல் சித்தாந்தத்தின் அடிப்படையில் ஒட்டுமொத்த வரைபடம் ஒன்றுக்குள் வைத்து தமிழ்மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் ஏற்கனவே சிதறிப்போயிருக்கும் தமிழ் மக்களின் கவனத்தை மேலும் சிதறடிப்பதன் மூலம் அரசாங்கம் தான் விரும்பியதைச் சாதித்து விடும்.



இங்கே நான் கட்சிகளின் ஐக்கியத்தைப் பற்றிக் கதைக்க வரவில்லை. பல மாதங்களுக்கு முன் காரைநகர் பிரதேச சபையில் யாரைத் தவிசாளராகத் தெரிவது என்று விவகாரத்தின்போது தமிழ்த் தேசிய முன்னணியோடு நான் உரையாடினேன். அப்பொழுது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் என்னிடம் சொன்னார்… சாதி ஏற்றத்தாழ்வுகள் போன்ற விவகாரங்களில் நீங்கள் சுட்டிக்காட்டும் பிரச்சினைகளை நாங்கள் உடனடியாகத் தீர்த்து வைப்போம். ஆனால் ஐக்கியம் என்ற ஒரு விடயத்தை மட்டும் தயவு செய்து எங்களிடம் கேட்க வேண்டாம்… என்று.

இக்கட்டுரை கட்சிகளின் ஐக்கியத்தைப்பற்றி உரையாடவில்லை. தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவது பற்றியே உரையாடவிழைகிறது. தேசியவாத அரசியல் என்றால் ஒரு மக்கள் கூட்டத்தை பெருந்திரளாகத் திரட்டுவதுதான். தமிழ் மக்கள் ஒரு பெரும் திரளாக: தேசமாக விவகாரங்களை எதிர்கொள்ள வேண்டும். நடைமுறையில் அவ்வாறு தமிழ்மக்களை ஒரு தேசமாகத்திரட்டும் பொழுது புனிதர்களையும் விசுவாசிகளையும் உண்மையானவர்களையும் மட்டும் வைத்து ஒரு தேசிய இயக்கத்தை கட்டியெழுப்புவது அம்புலி மாமாக் கதைதான். ஏனென்றால் ஒரு மக்கள் கூட்டம் எனப்படுவது பல்வேறு அடுக்குகளை கொண்டிருக்கும். பல்வேறு அபிலாசைகளை கொண்டிருக்கும். பல்வேறு நோக்குநிலைகளைக் கொண்டிருக்கும். ஒரு மக்கள் கூட்டத்தைத் தட்டையாக, ஒற்றைப் பரிமாணத்தில் விளங்கிக் கொள்ள முடியாது. அதற்குள் பல்பரிமாணம் இருக்கும் என்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஒரு மக்கள் கூட்டத்துக்குள் நல்லவர்களும் இருப்பார்கள் கெட்டவர்களும் இருப்பார்கள். ஒரு நபர் ஒரே நேரத்தில் தேசியவாதி போலவும் இருப்பார் அதே சமயத்தில் ஆண் ஆதிக்கவாதியாகவும் இருப்பார்.ஒரு நபர் ஒரே நேரத்தில் சாதிவாதியாகவும் இருப்பார் தமிழ் தேசியவாதியாகவும் தோற்றம் காட்டுவார். ஒரு நபர் ஒரே நேரத்தில் மதவாதியாகவும் இருப்பார் தமிழ் தேசியவாதியாகவும் தோற்றம் காட்டுவார். தேசியவாதம் எனப்படுவது பல்வகைகளில் மீது ஒரு மக்கள் திரளைக் கட்டியெழுப்புவது என்ற கோட்பாட்டு விளக்கத்தின் அடிப்படையில் சிந்தித்தால் மதவாதி, சாதிவாதி, பிரதேசவாதி, ஆணாதிக்கவாதி போன்றவர்கள் தேசியவாதிகளாக இருக்கமுடியாது. ஆனால் தமிழ்க் கட்சிகளில் காணப்படும் முக்கியஸ்தர்களில் எத்தனை பேர் அவ்வாறு முழுமையாக தேசிய பண்பு மிக்கவர்களாக இருக்கிறார்கள்? ஏன் ஆயுதப் போராட்டத்திலேயே அந்த பிரச்சினை இருந்ததுதானே? ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட இயக்கங்கள் மத்தியில் காணப்பட்ட போராளிகள் எத்தனை பேர் அவ்வாறு தேசியப் பண்பு மிக்கவர்களாக காணப்பட்டார்கள்? இது ஒரு அடிப்படைப் பிரச்சினை.

ஒரு மக்கள் இயக்கம் என்று வரும்பொழுது ஒரு பெரிய கட்சி என்று வரும் பொழுது அதற்குள் நல்லதும் இருக்கும் கெட்டதும் இருக்கும். ஒரு மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய இயக்கம் எனப்படுவது அந்த மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய நல்லதையும் கெட்டதையும் பிரதிநிதித்துவப்படுத்தும் என்பது யதார்த்தமாகும். ஒரு பெரிய மக்கள் இயக்கம் எனப்படுவது அல்லது ஒரு பெரிய தேசிய இயக்கம் எனப்படுவது முழுக்க முழுக்க கொள்கைவாதிகளையும் தூய்மைவாதிகளையும் புனிதர்களையும் மட்டும் வைத்து கட்டியெழுப்பப்படும் ஒன்று அல்ல. யதார்த்தத்தில் அது ஒரு மக்கள் கூட்டத்தில் காணப்படும் எல்லா அடுக்குகளையும் ஏதோ ஒரு மையத்தில் இணைப்பதாகவே காணப்படும். இது தமிழ்த் தேசிய இயக்கங்களுக்கும் பொருந்தும்.

புனிதர்களையும், நல்லவர்களையும், கொள்கைவாதிகளையும், இலட்சியவாதிகளையும் மட்டும்வைத்து ஒரு தேசிய



இயக்கத்தைக் கட்டமுடியாது. ஆனால் குறிப்பிட்ட இயக்கத்தில் அல்லது கட்சியின் மையத்தில் இருப்பவர்கள் அல்லது வழிகாட்டும் பொறுப்புகளில் இருப்பவர்கள் ஒப்பீட்டளவில் அதிகம் தேசிய பண்பு மிக்கவர்களாக இருக்கவேண்டும் என்பது ஒரு கட்டாய நிபந்தனையாகும். ஒரு கட்சியின் அல்லது மக்கள் இயக்கத்தின் முடிவெடுக்கும் பொறுப்புகளில் இருப்பவர்கள் கொள்கைவாதிகளாக இலட்சியவாதிகளாக தேசிய பண்பு ஒப்பிட்டுளவில் அதிகம் கூடியவர்களாக இருக்கவேண்டும் என்பது கட்டாயம். கட்சித் தொண்டர்கள் ஆதரவாளர்கள் எல்லாரிடமும் அவ்வாறு எதிர்பார்க்க முடியாது. அவர்களிடமிருக்கும் எதிர்த்தேசிய அம்சங்களைக் களைநீக்கம் செய்ய வேண்டியது அல்லது இருள் நீக்கம் செய்ய வேண்டியது மையக்குழுவின் பொறுப்பு. அல்லது தலைமை தாங்கும் நபர்களின் பொறுப்பு.

எனவே ஐக்கியத்தை கட்டியெழுப்பும் பொழுது அந்த ஐக்கியத்துக்குள் பலதும் பத்தும் இதுக்கும் என்ற யதார்த்தத்தை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு ஐக்கியத்தைக் கட்டியெழுப்பிய பின் அந்த ஐக்கியத்திற்கு தலைமைதாங்கும் தரப்புகள் அந்த ஐக்கியத்தை எப்படிக் கொள்கை அடிப்படையில் பலப்படுத்துவ; இறுக்கமாக்குவது என்று சிந்திக்கலாம். புனிதர்களையும் நீதிமான்களையும் மட்டும் வைத்துக்கொண்டு ஐக்கியத்தை கட்டியெழுப்பலாம் என்றால், தமிழ்மக்கள் என்றைக்குமே ஒரு பெருந்திரளாக வர முடியாது. நீதிமான்களிடந்தான் நீதியைக் கேட்கலாம் என்றால் தமிழ் மக்கள் யாகந்தான் செய்ய வேண்டும்.

எதிரிக்கு எதிரான கோபந்தான் கடந்த பல தசாப்தங்களாக தமிழ்மக்களை ஒப்பீட்டளவில் பெருந்திரளாகக் கூட்டிக்கட்டி வைத்திருக்கிறது. அதாவது இன எதிர்ப்புணர்வு அல்லது இனமான உணர்வு போன்றவைதான் தமிழ்மக்களைப் பெருமளவுக்கு ஒரு தேசமாகத் திரட்டி வைத்திருக்கின்றன. மாறாக தேசியவாதம் தொடர்பான அறிவுபூர்வமான விஞ்ஞானபூர்வமான கொள்கைகளை விளங்கி தமிழ்மக்கள் ஒரு பெருந்திரளாக மேல்லெழுந்தார்கள் என்பது உண்மையல்ல. உலகம் முழுவதிலும் உள்ள பெரும்பாலான எல்லாத் தேசிய இன விடுதலைப் போராட்டங்களுக்கும் இது பொருந்தும். கருத்து மக்களை திரட்டுவதை விடவும் எதிரிக்கு எதிரான கூட்டுணர்ச்சி ஒரு மக்கள் கூட்டத்தை இலகுவாகத் திரட்டிவிடும்.

ஒரு பெருந்திரளைக் கட்டியெழுப்புவது அல்லது ஒரு பேரியக்கத்தை கட்டியெழுப்புவது அல்லது ஒப்பீட்டளவில் பெரிய ஐக்கியத்தை கட்டியெழுப்புவது அதாவது தமிழ்மக்களை ஆகக்கூடிய பட்சம் ஒரு பெருந்திரளாகக் கட்டியெழுப்புவது என்பது கொள்கையின் அடிப்படையில் அல்லது, புனிதமான, விட்டுக்கொடுக்கப்பட்ட அளவுகோள்களின் அடிப்படையில் என்றைக்குமே சாத்தியப்படப் போவதில்லை. தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்ல இப்பூமியில் எந்த ஒரு மக்கள் கூட்டத்தையும் அவ்வாறு புனிதமான அளவுகோல்களின் அடிப்படையில் நிறுவனமயப்படுத்த முடியாது.

இது மக்கள் இயக்கங்களுக்கு மட்டுமல்ல மத நிறுவனங்களுக்கும் பொருந்தும். உலகில் உள்ள எல்லா மத நிறுவனங்களிலும் அதன் மூலப்புத்தகங்களில் உள்ள புனிதமான அம்சங்கள் பேணப்படுகின்றனவா? மதங்களில் மட்டுமல்ல மதங்களை நிராகரித்த இடதுசாரி இயக்கங்கள் மத்தியிலும் அதே பிரச்சினை உண்டு.

மக்களை நிறுவனமயப்படுத்தும் பொழுது அந்த மக்கள் மத்தியில் இருக்கும் பலங்களை மட்டுமல்ல, பலவீனங்களையும் சேர்த்து நிறுவனமயப்படுத்தாமல் இருப்பது என்பது மிகவும் சவால் மிகுந்தது. ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியில் இருக்கும் பலவீனங்களையும் ஏற்றுக்கொண்டு அவர்களை நிறுவனமயப்படுத்திய பின் தலைமை தாங்கும் பொறுப்பில்



இருப்பவர்கள் அந்த பலவீனங்களை படிப்படியாக அகற்ற வேண்டும். அதுதான் நடைமுறைச் சாத்தியமானது.

தமிழ்மக்கள் மத்தியில் இதுவரையிலும் தோன்றிய எல்லா ஐக்கியங்களும் எல்லா சிவில் கட்டமைப்புகளும் மக்கள் அமைப்புகளும் அவ்வாறு பலங்களையும், பலவீனங்களையும் வைத்துக்கொண்டுதான் கட்டியெழுப்பப்பட்டன. புனிதமான கூட்டு என்று எதுவுமே இந்தப் பூமியில் கிடையாது. முழுக்க முழுக்க கொள்கை ரீதியிலான கூட்டு என்பதும் இந்த பூமியில் கிடையாது. தூய தங்கத்தை வைத்து நகை செய்ய முடியாது. தங்கத்தை ஆபரணமாக்குவதென்றால் அதில் செப்பைக் கலக்க வேண்டும். நாங்கள் அணியும் எல்லாத் தங்க நகைகளிலும் கலப்பு உண்டு என்ற நடைமுறையை ஏற்றுக்கொள்ள வேண்டும். இது அரசியலுக்கும் பொருந்தும். மக்கள் இயக்கங்களுக்கும் செயற்பாட்டு இயக்கங்களுக்கும் பொருந்தும். தலைமைகள் உறுதியாக இருந்தால்சரி. “ஆயிரம் ஒட்டகங்களுக்கு ஒரு சிங்கம் தலைமை தாங்கலாம். ஆனால் ஆயிரம் சிங்கங்களுக்கு ஓர் ஒட்டகம் தலைமை தாங்க முடியாது. சிங்கமாக இருப்பதா ஒட்டகமாக இருப்பதா என்பதனை தமிழ்த் தலைமைகள் தீர்மானிக்க வேண்டும். இல்லையென்றால் புதிய தலைமைகள் மேலெழ வேண்டும்.

ஏனெனில் தமிழ் மக்களின் கவனக்குவிப்பு திட்டமிட்டுச் சிதறடிக்கப்படுகிறது. தமிழ்மக்களால் ஒருமித்துப் போராட முடியவில்லை. அது அதன் எதிர்மறை விளைவாக ரணில் விக்கிரமசிங்கவின் சிங்களபௌத்த வாக்கு வங்கியைத்தான் வளர்க்கும். தமிழ்மக்கள் சிதறி நின்று போராடினால் அது எதிரிக்கு சேவகம் செய்யும். திரண்டு போராடினால் அங்கே அதிசயங்களும் அற்புதங்களும் நிகழும்.

நன்றி: நிலாந்தன்


AFFORDABLE
REFRIGERATION
SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643


DEBT
SOLUTIONS
GTA INC.
CREDIT CARD &
DEBT SOLUTIONS
வங்கிக் கடன்களில்
80% வரையிலான
கழிவு
Reduce your
debts upto
80%
கடன் அட்டைகளினது தொல்லையா? வங்கிக்கடன் தொல்லையா? சம்பளத்தில் பறிமுதலா?
CREDIT CARD PROBLEMS, BANK LOAN PROBLEMS, WAGE GARNISHEE PROBLEMS
உங்கள் வங்கிக் கடன்களை திருப்பிச் செலுத்துவது சதவீதத்தில்
(PERCENTAGE) தீர்மானிக்கப்படமாட்டாது.
கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், கடன் தொடர்பான சட்டப் பிரச்சனை.
COLLECTION COMPANIES PHONING AT WORK OR HOME, LAWSUITS
உங்கள் வருமானம் (INCOME), செலவு (EXPENSES), என்பவற்றை வைத்து
உங்கள் கடன்களில் (DEBTS) சிறிய மாதாந்தத்தொகையை மட்டும் செலுத்தும்
முறை மூலம் உங்கள் மொத்தக் கடன்களில் (TOTAL DEBTS) இருந்து
விடுதலை பெறலாம்.
உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்.
We will protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIG,
Life Insurance, Stocks, Bonds & Shares)
DSC DEBT SOLUTION CANADA
Head Office Location:
10 Milner Business Court, Suite 300
Scarborough ON M1B 3C8
(One Block North of 401 on Markham)
2 Robert Speck Parkway, Suite 750
Mississauga ON, L4Z 1H8
2 Country Court Blvd, Suite 400
Brampton ON, L6W 3W8
Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Federal Government Registered & Certified (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation
Tel: 647-274-2832
www.debtsolutioncanada.ca

# வெறுப்புக் கோலங்கள்...!

இன்று எமது வரலாற்று பகைச் சக்தியான சிங்களப் பேரினவாதம் தற்போது தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து நமது மக்களுக்குச் செய்யும் இரத்தத்தை உறைய வைக்கும் கொடுமைகள் நாளாந்தம் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இதேபோலவே தமிழீழ மண்ணை முழுமையாக விழுங்கிய இந்தியப் படையெடுப்பு. எமது போராட்டத்தின் இருண்ட காலமாக என்றைக்கும் இருக்கும் அந்த ஆக்கிரமிப்புக் காலகட்டத்தின் போது நிகழ்ந்த உண்மை நிகழ்வுகளை கதை வடிவில் – உணர்வு பூர்வமாக நமது தமிழீழ எழுத்தாளர்கள் எமது இனத்திற்கு ஏற்பட்ட கொடுமைகளின் வரலாற்றுப் பதிப்பாக – நூல் வடிவில் வெளியிட்டுள்ளனர். முதலாவது தொகுதி "அம்மானைக் கும்பிடுறானுகள்...!" என்ற பெயரிலும். இரண்டாவது தொகுதி "வில்லுக்குளத்துப் பறவை" என்ற பெயரிலும் வெளியிடப்பட்டுள்ளன.

சிங்கள வெறிப்படை,

"அமைதிப் படை" – ஓநாய்களின் வேட்டைக்குப் பலியான அப்பாவி மக்களின் கதைகள் – போராட்டத்தை நெஞ்சார நேசித்துச் செயற்பட்டதில் தம்மைப் பலியாக்கிய மக்களின் கதைகள் – போராளிகளை நேசித்து. அவர்களைக் காப்பாற்றத் துணிவுடனும் சாதுரியத்துடனும் செயற்பட்ட மக்களின் கதைகள்...

எல்லாமே நாம் வாழ்ந்த காலத்தின் உண்மைகளை நெஞ்சிற் பதியுமாறு நெருக்கமாய்ச் சொல்கின்றன.
அவற்றில்...இருந்து.

*அந்த இளமனங்களில் தோன்றிய வெறுப்புக் கோலங்கள்... இந்த ஜன்மத்தில் மாறப் போவதில்லை.*

*அவர்களின் பகைவர்களை அவர்கள் மறக்கப் போவதும் இல்லை!*



## வெறுப்புக்கோலங்கள்!

பெரியவன் அந்த உயர்ந்த பனையின் அரைவாசிக்கு ஏறிவிட்டான். முன்னால் தெரிந்த காட்டுப் பிரதேசம், காலை நேரத்தில் மிக அழகாகவே இருந்தது. ஆனால் அழகை ரசித்துக் கொண்டிருக்க அவனால் முடியாது. தொடர்ந்து ஏறினான். அப்பனையின் முக்கால் பங்கைத் தாண்டிய பின், ஒரு முறை திரும்பிப் பார்த்தான். தூரத்தில் அந்த வயல்வெளிகளைத் தாண்டி பெரிய வெளியில், பிரசித்திபெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் தெரிந்தது; அதற்குப் பின் இருந்த நந்திக் கடலும் நான்றாகவே தெரிந்தது. எப்பொழுதுமே உயரத்தில் இருந்து பார்க்கையில் உண்மையையும் முழுமையையும் காணலாம் என எண்ணிக்கொண்டு, தொடர்ந்து ஏறினான்.



பெரியவனுக்கு இப்பொழுதுதான் பதினைந்து வயதாகிறது. ஆனால் அதற்கிடையில் அவனை நம்பி நாலு தம்பி, தங்கைகள் வீட்டில் காத்திருக்கிறார்கள். அவன் இன்று கள்ளு இறக்காவிடின் அனைவரும் பட்டினிதான். அப்பொழுதுதான் நாலு ஐந்து வெடிச்சத்தங்கள் கேட்டன. “வந்திட்டாங்கள், துலைந்தது! இண்டைக்கு ஆர் ஆரோ தெரியேலை” என நினைத்தபடியே, திரும்பிப்பார்த்தான். பாடசாலைக்குள் அந்தப் பச்சைப்பேய்கள் தெரிந்தன. சீக்கியர்கள்தான் வந்திருக்கிறாங்கள். தலைப் பாகைகள் தெரிகின்றன. “இப்ப இறங்கிப்போனால் இவங்களிட்ட அடிவாங்க வேண்டும்; பத்து நாளைக்கு சீவ ஏலாது. வீட்டிலயும் பட்டினிதான் கிடக்கவேணும்” என எண்ணியபடியே, மரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தான். அவனது சிந்தனைகள் கடந்த காலத்தில் இருந்தன.

அப்பாவையும், அம்மாவையும் இவங்கள்தான் பிடித்தாங்கள். ஒரு வருசமாகப்போகுது. எங்கேயோ தெரியவில்லை, இந்தியப் படையின்ர எல்லா முகாமிலயும் போய்க் கேட்டாச்சு. முல்லைத்தீவில், வவுனியாவில், திருகோணமலையில், பலாலியில... ஒரு இடமும் இல்லையாம் தாங்கள் பிடிக்கேலயாம். சீ இவங்கட நாற்றம் பிடிச்ச படைமுகாமுக்கை கைகளும் கால்களும் கட்டுப்பட்டு அதுகள் பாவம் என்ன சித்திரவதை அனுபவிக்குதுகளோ! யாருக்குத் தெரியும்? பெண்கள் என்றாலே நாயாக அலையும் இந்த நாய்கள் என்ன பாடு படுத்துதுகளோ. அவையோடபோன, என்ரை கடைசித் தம்பியையும் தங்கச்சியையும், அம்மாவோட தான் விட்டாங்களோ தெரியாது. அதுகள் கைக்குழந்தைகள். அன்றுகூட குழந்தையளுக்கு கடுமையான சுகமில்லையெண்டுதான் மருந்தெடுக்கப் போனதுகள். வற்றாப்பளை அம்மன் கோயில் கோபுரத்தைப் பார்த்தபடியே! “அம்மாளாச்சி நீதான் அதுகளைக் காப்பாற்றவேண்டும்” என சற்று வாய்விட்டே உரத்துக் கூறினான். அடுத்த கணம் தவறுவிட்டவன்போல சலித்தபடியே “அம்மாளாச்சி! உன்னால உன்ரை கோயிலுக்குள் அகதிகளாக தஞ்சமடைந்தவர்களையே காப்பாற்றமுடியேல. நீ எப்படி என்ரை அப்பாவையும், அம்மாவையும் காப்பாற்றப் போகிறாய்? உன்ரை கோயிலுக்கு உள்ளதானே ஆறுமுகம் வாத்தியாரும் இன்னும் ஆறு அப்பாவிகளும் ஷெல்விழுந்து செத்தவர்கள்!” என எண்ணியபடியே இறங்கிக் கொண்டிருந்தான். தூரத்தில் இந்தியப்படையினர் சென்று கொண்டிருந்தனர். அவர்களை நன்றாகப் பார்த்தான். “அட, நடுவில செம்மறிமுத்தனும், ராசனும் போய்க்கொண்டிருக்கினம். ஊருக்கு உதவாத வேலையளைச் செய்திட்டு, ஈ பிக்கு ஓடினவர்கள். இப்ப வந்து தங்களுக்கு பிடிக்காதவங்களை எல்லாம், புலிகள் என இந்தியருக்கு காட்டிக் கொடுகிறாங்கள். இந்தியப் படைபோன பிறகு இவங்கள் என்ன செய்யப் போறாங்கள்? பார்ப்பம். நானே அடிச்சுக் கொல்லுறனோ இல்லையோ பாரன்.” என எண்ணியபடியே நடந்தான்.

* * *

1987 மார்கழி, முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்தியப் படையினர் தங்களின் காட்டுமிராண்டித்தனத்தைக் கட்டவிழ்த்து விட்டிருந்தனர். இடைவிடாத ஷெல் தாக்குதல்கள், கொடூரக் கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள் தொடர்ந்து கொண்டிருந்தன. அமைதிகாக்கும் படை ஊரை அழித்துக்கொண்டிருந்தது - கொடுமையாக, மிகக் கொடுமையாக அழித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுதுதான் ஒரு நாள்...

இரத்தினத்தின்ர கடைசிப் பிள்ளைகள் இரண்டும் நோய்ப் படுக்கையில் கிடந்தனர். தேவராசா வைத்தியரும் கைவிரிச்சுப் போட்டார். “ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோக வேண்டும்” அநத ஓலைக் குடிசையின் திண்ணையிலிருந்து இரத்தினம் சிந்தித்துக்கொண்டிருந்தான். முப்பத்தியேழு வயதிலும் அவனது இரும்புத்தேகம் நடுங்கிக் கொண்டிருந்தது. அவனது மனைவி, தனது பிள்ளைகளின் தலைமாட்டிலிருந்து அழுதுகொண்



டிருந்தாள். முப்பத்திநான்கு வயதிற்குள் எட்டுப் பிள்ளைகளைப் பெற்றுப் போட்ட அவளால், அந்த நிலைமையைத் தாங்க முடியவில்லை. அவள் தனது கணவனிடம் கூறினாள்.

"வாப்பா! போவம், அவங்கள் சுட்டாப் பரவாயில்லை; என்ர கண்ணுக்கு முன்னால என்ர பிள்ளைகள் சாவதை பார்த்துக் கொண்டிருக்க என்னால் ஏலாது."

இரத்தினம் நிமிர்ந்தபடியே கூறினான். "நான் கொண்டு போய்ட்டுவாறன்."

"ஓ, நீ செத்த பிறகு நான் உயிரோட இருப்பன் என்று நினைக்கிறாயா! நானும் வாறன்" என்றபடியே வெளிக்கிட்டாள் அவள்.

பெரியவன் சமையற்கட்டின் திண்ணையில் அமர்ந்திருந்தான். அவனைச் சுற்றி அந்தச் சின்னஞ் சிறுசுகள் ஐந்தும் ஒட்டியிருந்தன. தலைக்கு மேலாகச் செல்லும் ஒவ்வொரு ஷெல்லும் சற்று தள்ளி விழுந்து அதிரும்பொழுது, அதுகள் அலறியபடியே அவனைக் கட்டிப் பிடித்தன. பெரியவன் தூரத்தில் தெரியும் காட்டை வெறித்துப் பார்த்தபடியே இருந்தான். அவனது தாயார் கூறினாள் – "தம்பி பெரியவன், அந்த சிவப்புச் சேலையையும், சட்டையையும் எடடா, ஆஸ்பத்திரியில நிக்கவேண்டி வந்தாலும் வரும்."

அவர்கள் புறப்பட்டனர். இரத்தினம் தனது மகன் பெரியவனை அழைத்தான்.

"தம்பி பெரியவன், தம்பி தங்கச்சிகளை நல்லா பார்த்துக்கொள் ராசா. நாங்கள் வந்திடுவம்; ஏதும் பிரச்சினை எண்டால் அம்மம்மா வீட்ட போங்கோ"

இரத்தினம், ஒரு கணம் பிள்ளைகளை ஏக்கத்துடன் பார்த்தான்.

அவர்கள் வற்றாப்பளைச் சந்திக்கு வந்தனர். ஊர் அடங்கி இருந்தது. விடிந்து பத்து மணி கூட ஆகவில்லை. மூன்றாம் கட்டையை நோக்கி நடந்தனர். பெரும் வீதியைத்தாண்டி வயல் வெளியில் வந்துகொண்டிருந்தனர். தூரத்தில் முல்லைத்தீவு பிரதான வீதியில் மஞ்சள் பாலம் தெரிந்தது. இருவரும் திரும்பிப்பார்த்தனர். வற்றாப்பளை அம்மன் கோயில் நன்றாய்த் தெரிந்தது. "அம்மாளாச்சி, நீதான் காப்பாற்றவேண்டும்." அவர்களது தலைக்கு மேலாக ஷெல்கள் சென்றன. தூரத்தில் துப்பாக்கி வெடிகளும் கேட்டன.

"இவங்கள் ஏன் நிழலைக்கண்டெல்லாம் பயப்படுறாங்கள். "புல் பூண்டெல்லாம் புலிகளோ இவங்களுக்கு! உலகத்தில் புலிகளைத் தவிர வேற உயிர்களே இல்லையோ? ஏன் இப்பிடிச் செய்கிறாங்கள்" என்றாள் இரத்தினத்தின் மனைவி.

"இவையள் புலிகளையும் பிடிக்கப் போறதில்லை எலிகளையும் பிடிக்கப் போறதில்லை. எங்களைப் போன்ற அப்பாவிகளைத் தான் பிடிப்பாங்கள். நீ வேகமா நட" என்றான் இரத்தினம்.

இரத்தினம், எப்பொழுதுமே, எவருக்குமே பயந்து நடப்பவனில்லை. சிறுவயது முதலே பனையேறி உரத்த உடம்பு, எந்நேரமும் பாளைக் கத்தியுடன் திரிவதால் அவனை எவருமே நெருங்குவதில்லை. ஆனால் இன்று இந்த அரக்கர்களின் துப்பாக்கிகளின் முன்... மூன்றாம் கட்டைச் சந்தி தெரிந்தது. திடீரென அவர்களை நோக்கி சில வெடிச்சத்தங்கள், "கான்ட்ஸ் அப்" எனக் கத்திக் கொண்டே பற்றைகளுக்குள்ளிருந்து ஓடிவந்த இந்தியப்படையினர், அவர்களைச் சுற்றி நின்றனர்.

"ஐயா! ஆஸ்பத்திரிக்கு..." அவனது வயிறில் ஒரு உதை விழுந்தது. தொடர்ந்து பல உதைகள் அடிகள். அவனது தோளிலிருந்த குழந்தையை ஒருவன் பறித்தான். மேலும் பல உதைகள் அனுக்கு, புரியாத மொழியில் ஏசியபடியே விழுந்தன. நிமிர்ந்து பார்த்தான். ஒரு சீக்கிய சிப்பாய் அவனது குழந்தையின் கழுத்தை முறித்துவிட்டுக் கீழே எறிந்தான்; வீரிட்டுக்கொண்டிருந்த குழந்தை அடங்கியது.

"ஐயா! என்ர குழந்தை"

மேலும் பல அடிகள், துப்பாக்கிகளின் அடிப்பாகங்கள் அவனது தலையில், முகத்தில்... தள்ளாடியபடியே விழுந்தவன் மீண்டும் நிமிர்ந்து பார்த்தான். அவனது மனைவி சேலை அகற்றப்பட்டு, சட்டை கிழிக்கப்பட்டு, பத்து பதினைந்து இராணுவத்தினர் அவளைச் சுற்றி ஒரு சிப்பாயின் முரட்டுக் கரங்கள் அவளது பாவாடையை...

இரத்தினம் கிளர்ந்தெழுந்தான், முன்னால் நின்ற இருசிப்பாய்களும் சற்றுத் தள்ளிவிழுந்தனர். பின்னால் வந்தவனுக்கு ஒரு உதை. தனது மனைவியை நோக்கி நான்கு அடிகள்... ஒரு சிப்பாயின் எஸ்.எம்.ஜி. துப்பாக்கி ரவை முடியும்வரை இயங்கியது. இரத்த வெள்ளத்தில் அவன். தலை நிமிர்ந்தான், அவனது மனைவி சாறு பிழியப்பட்டு வெறும் சக்கையாகிக்கொண்டிருந்தாள. அவள் கையிலிருந்த கைக்குழந்தை சற்றுத் தள்ளிக்கிடந்தது. அதன் கழுத்தில் ஒரு சிப்பாய் தனது "பூட்ஸ்" கால்களால் மிதித்து, அது இறந்த பின்பும் நசித்துக்கொண்டிருந்தான். "இவர்கள் இதற்குப்பதில் சொல்ல வேண்டும். எத்தனை காலஞ் சென்றாலும் எனது பிள்ளைகள் இவர்களைப் பழிவாங்குவார்கள்."

மேலும் இரண்டு ரவைகள் அவன் தலையில். இந்த மனிதர்களின் குரல்கள் அந்த மிருகங்களுக்கு விளங்கவில்லை.

* * *

ஒரு வருடத்தின் பின்பு...

மூன்றாம் கட்டை இந்தியப்படை முகாமிற்கு அருகில் இருந்த அந்த பற்றைக் காட்டுக்குள் எவருமே போவதில்லை. அப்படிச் சென்றால் அவர்கள் சுட்டுக் கொல்லப்படுவார்கள். ஆனால் அன்று மாலை சில மாடுகள் அதற்குள் சென்றுவிட்டன. மாடு மேய்க்கும் சிறுவன் மாடுகளை நோக்கி ஓடினான். மாடுகளை துரத்தியபடியே கீழே பார்த்தான். ஒரு மண்டையோடு; நிமிர்ந்தான், மரத்தில் முள்ளுக்கம்பிகளால் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது ஒரு மனித எலும்புக்கூடு. பயத்தில் திரும்ப ஓடினான் – வழியில் ஒரு சிறிய மண்டையோடு. அதனைத்தாண்டி ஓடிக் கொண்டிருந்தான் ஊரை நோக்கி. கிராமம் முழுவதும் கதை பரவியது.

பெரியவன் சிந்தித்துக் கொண்டிருந்தான்; ஒரு வேளை எனது தாய் தந்தையருடையதோ? மனம் இருப்புக்கொள்ளவில்லை. தனது சித்தப்பா, மாமாவினருடன் பேசினான். அவர்கள் நால்வரும் அவ்விடத்தை நோக்கிப் புறப்பட்டனர். இந்தியப் படையினர் எவ்வளவு பேரைக் கொன்றுவிட்டார்கள்! இது ஆற்றை எலும்புக்கூடோ? ஆருக்குத்தெரியும். கிராமத்தவரின் வழமை போலவே, அவர்களின் மனமும் வற்றாப்பளை அம்மனை நினைத்துக் கொண்டது.

"இவர்களாக இருக்கக்கூடாது" மாமா கூறினார்.
"அவங்கள் கண்டால் பிரச்சினை, சட்டைகளை கழட்டுங்கோ மாடு மேய்க்கிறவை மாதிரி நாலு பேரும் வெவ்வேறு திசையால போவம்."

அவர்கள் அவ்விடத்தை அடைந்தனர்.முதலில் அந்தச் சிறிய தலையோடு; பின்பு மரத்தில் கட்டப்பட்டிருந்த மனித எலும்புக் கூடு ஆகியவை தெரிந்தன. மனித நேயத்தை மறந்த அந்த மிருகங்களின் கொடூரச் செயல், அவர்களின் மனங்களில் கொதிப்பை உண்டாக்கிக் கொண்டிருந்தது.

பெரியவன் சிறிது தள்ளி இருந்த பற்றைக்குள் குனிந்து பார்த்தான். மீண்டும் ஒரு மனித எலும்புக்கூடு. மனித உடல் உக்கிய பின்பும், நிலத்தில் புதைத்தும் புதையாமல் கிடக்கும் அந்த நீண்ட தலைமயிர்கள்; அது ஒரு பெண் என்பதைக் காட்டியது. பெரியவன் அருகில் இருந்த சிறிய மரத்தில் சாய்ந்தான். அவனது கண்களில் ஒரு பொலீத்தின் பை தெரிந்தது. மரத்தின் கிளைகளுக்கிடையில் செருகப்பட்டிருந்த அதை எடுத்துப் பிரித்தான். அந்தச் சிவப்புச் சேலையும், சட்டையும்! அது அவனுக்கு தெரிந்த சேலையும் சட்டையும், அவனது அம்மா புறப்படுகையில் அவன் கொடுத்துவிட்டது. கத்துவதற்கோ, அழுவதற்கோ தெரியாது அவன் வாயினைத் திறந்தான்.

அவனது வாயை மூடியபடியே மாமா கூறினார்.

"அது அம்மாதான்; தம்பி தங்கச்சியின்ர எலும்புக் கூடுகளும் இருக்கு. அழுவதால் பிரயோசனம் இல்லை, பின்பு நீ ஏதாவது செய்துகொள்! இவங்கட அநியாயத்தை நான் மறக்கமாட்டன் நீயும் ஒருபோதும் மறந்திடாதை."

அவர்கள் அப்பகுதி விறகுகளையும், கட்டைகளையும் குவித்தனர். நான்கு எலும்புக்கூடுகளையும் ஒன்றாகவே வைத்து, பெரியவனே தீயிட்டான். புகை வானத்திற்கு எழுந்தது. நான்கு தலையோடுகளுடனும் அவர்கள் நால்வரும் இப்பொழுது, துணிந்து நிமிர்ந்து நடந்தனர். அவர்களது மனங்களில், வெறுப்பு மண்டிக் கிடந்தது; வேதனை நிறைந்திருந்தது. இராணுவத்தினரால் என்ன செய்ய முடியும்? சுடமுடியும், அதைத் தவிர அவர்களால் என்னதான் செய்ய முடியும்? எழுந்த புகையை நோக்கி இந்தியப்படையினரின் ஷெல்கள் வந்து விழுந்தன. இந்த அடக்குமுறை இயந்திரங்கள் துப்பாக்கிகளை இயக்கியபடியே அவ்விடத்தை நோக்கி முன்னேறின.

பெரியவனது குடிசையில் அந்தக் கிராமமே கூடி இருந்தது. நான்கு தலையோடுகளும் அந்த மக்களுக்கு வேடிக்கையாகத் தெரியவில்லை; வேதனையை விதைத்துக் கொண்டிருந்தன. இதற்கு காரணமானவர்கள்மீது வெறுப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தன; அவர்களது கேவலமான அடிமை நிலையை உணர்த்திக் கொண்டிருந்தன. ஓரமாக நின்ற பெரியவனைச் சுற்றி அவனது தம்பி தங்கைகள் நின்றனர். சின்னத்தங்கச்சி கேட்டாள், "அப்பா, அம்மாவை ஆமிக்காரங்கள் சுட்டுப் போட்டாங்களோ?" என்று.

பெரியவன் "ஆமாம்" என்று தலையை ஆட்டினான். அவர்கள் ஆறுபேரும் அமைதியாக அழுதுகொண்டு இருந்தார்கள். ஆனால்! அவர்களின் மனங்கள் எரிமலையாகக் குமுறிக் கொண்டிருந்தன.

அந்த இளமனங்களில் தோன்றிய வெறுப்புக் கோலங்கள்... இந்த ஜன்மத்தில் மாறப்போவதில்லை.

அவர்களின் பகைவர்களை அவர்கள் மறக்கப் போவதும் இல்லை!

- தமிழீழம், மார்கழி 1989

உலக வணிகம் ULAGA VANIKAM

# 2024



# LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY



## உலக வணிகம் ULAGA VANIKAM

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

**தொடர்புகளுக்கு 437.345.4203**

# ஏகாதிபத்தியத்தை மண்டியிட வைத்த மாவீரன்! வெனிசுலாவின் வீரப்புதல்வன் ஹியுகோ சாவேஸ்!

-ஐங்கரன் விக்கினேஸ்வரா -

11.08. 2023



**"யோ ஸா சாவேஸ்" [நானே சாவேஸ்] என்று கண்களில் நீர் வழிய முழங்கியபடியே இருபது இலட்சம் மக்கள் தங்களுடைய தேசத்தின் வீரப்புதல்வனது உடலை ஏந்திச் சென்றனர். அரியதொரு தலைவனைத் திடீரென்று இழந்த அதிர்ச்சியில் தவிக்கின்றனர் வெனிசுலா மக்கள்.**

### அமெரிக்காவை மண்டியிட வைத்த வீரப் புதல்வன்:

அமெரிக்காவை மண்டியிட வைத்த வீரப் புதல்வன் வெனிசுலாவின் அதிபர் ஹியுகோ சாவேஸ் மார்ச் 5-ஆம் தேதியன்று மறைந்தார். அவருக்கு வயது 58.

தமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய அதிபர் ஹியுகோ சாவேஸின் மரணச் செய்தியைக் கேள்வியுற்றுக் கதறியழுத வெனிசுலா மக்கள், "வாழ்வதும் மரிப்பதும் வேறுவேறல்ல. வாழ்தலின் மரித்தல் சிறந்ததாகவும் இருக்கலாம் - வாழும் காலத்தில் செயவேண்டியதை ஒருவன் செய்திருந்தால்" என்று கூறினார் கியூபாவின் மறைந்த விடுதலைப் போராளியும் கவிஞனுமான ஜோஸ் மார்ட்டி.

இவ்வண்ணமே செய்ய வேண்டியதைச் செய்தவர்தான் சாவேஸ் என்ற போதிலும், அரியதொரு தலைவனைத் திடீரென்று இழந்த அதிர்ச்சியில் தவித்தனர் வெனிசுலா மக்கள்.

### வெனிசுலாவின் எண்ணெய் வளம்:



வெனிசுலாவின் எண்ணெய் வளம் முழுவதையும் தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்த அமெரிக்காவின் எக்சான் மொபில் உள்ளிட்ட நிறுவனங்கள் தம் இலாபத்தில் ஒரு வீதத்தை மட்டுமே கொடுத்து வந்ததை 13 சதவீதமாக உயர்த்திச் சட்டமியற்றியவுடன், சாவேஸுக்கு எதிரான இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பை அமெரிக்கா அரங்கேற்றியது.

ஆனால், உலகம் முழுவதும் பல நூறு ஆட்சிக்கவிழ்ப்புகளை நடத்திய அனுபவம் கொண்ட அமெரிக்கா, வெனிசுலாவில் மண்ணைக் கவ்வியது. பல்லாயிரக்கணக்கான மக்கள், குறிப்பாகப் பெண்கள் இராணுவத்தை முற்றுகையிட்டுப் பணிய வைத்தனர். 28 மணி நேரத்தில் ஆட்சிக்கவிழ்ப்பு தோற்றது. சாவேஸ் மீண்டும் பதவியில் அமர்ந்தார்.

தமக்குச் சொந்தமான எண்ணெய் நிறுவனங்களில் வேலை நிறுத்தத்தை அமெரிக்க முதலாளிகளே தூண்டிவிட்டனர். பொருளாதாரம் நிலைகுலைந்தது. உள்நாட்டிலேயே மக்களுக்கு எரிபொருள் இல்லை. "முதலாளிகளிடம் பணியாதே சாவேஸ். நாங்கள் தாக்குப்பிடிக்கிறோம்" என்று கூறி அத்தனை துன்பங்களையும் சகித்துக் கொண்டார்கள் மக்கள்

### அமெரிக்க மேலாதிக்க எதிர்ப்பின் சின்னம்:

அமெரிக்க மேலாதிக்க எதிர்ப்பின் வலிமையான குறியீடாக சாவேஸ் இருந்தார். சாவேஸின் மீது கொலைவெறி கொள்வதற்கான எல்லா முகாந்திரங்களும் அமெரிக்காவுக்கு இருந்தன.

2001-இல் இராக்கிற்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதித்து, சதாமுடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று உலக நாடுகள் அனைத்தையும் அமெரிக்கா மிரட்டிவைத்திருந்தபோது, சாவேஸ் ஈராக் சென்றார்.



அப்போது புஷ் கண்டனம் தெரிவித்தபோது, "வெனிசுலா இறையாண்மை கொண்ட ஒரு நாடு என்பதை புஷ்ஷுக்கு நினைவுபடுத்துகிறேன்" என்று அலட்சியமாக பதிலளித்தார்.

ஆப்கான், இராக் ஆக்கிரமிப்புகளை வெளிப்படையாக எதிர்த்துக் குரல் கொடுத்தார். 2008-இல் காசாவின் மீது இசுரேல் படையெடுத்த மறுகணமே, தூதரக உறவைத் துண்டித்துக் கொண்டார் அவர்.

### ஏழைகளுக்காகப் போரிட்ட சாவேஸ் :

1954-இல் மிகவும் வறிய குடும்பத்தில் பிறந்த அவர், இளம் வயதிலேயே இராணுவத்தில் சேர்ந்தவர் சாவேஸ். இராணுவத்தில் சேர்ந்தவுடன், செங்கொடி இயக்கம் என்றழைக்கப்பட்ட மாவோயிஸ்டு கொரில்லாக்களை ஒடுக்குவதற்கான படைப் பிரிவுக்குத்தான் அனுப்பப்பட்டார்.

ஏழைகளுக்காகப் போரிட்ட மாவோயிஸ்டுகள் மீது அரசு ஏவிய சித்திரவதைகளும் படுகொலைகளும் அவரைச் சிந்திக்கத் தூண்டின.



1989-இல் சர்வதேச நாணய நிதியத்தின் ஆணைக்கேற்ப வெனிசுலாவில் அதிரடியாக அமல்படுத்தப்பட்ட மானியவெட்டுகள் மற்றும் தனியார்மய நடவடிக்கைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த மக்கள் போராட்டம் ஒடுக்கப்பட்டு, நாடு முழுவதும் 3000 பேர் கொல்லப்பட்டனர்.

1973-இல் சிலியில் நிகழ்ந்த ஆட்சிக்கவிழ்ப்பு, அலண்டே கொலை, இலத்தீன் அமெரிக்க நாடுகள் அனைத்திலும் அமெரிக்காவால் திணிக்கப்பட்ட இராணுவ சர்வாதிகார ஆட்சிகள் என்ற பின்புலத்தில் தென் அமெரிக்கக் கண்டம் முழுவதும், அமெரிக்க எதிர்ப்பும் சோசலிச நாட்டமும் கொண்ட பலவிதமான ஆயுதக் குழுக்கள் தோன்றியிருந்தன.

### 1998இல் அதிபராக வெற்றி:

அத்தகைய குழுவொன்றை இராணுவத்திற்குள் சாவேஸும் உருவாக்கியிருந்தார். 1992-இல் ஒரு ஆட்சிக்கவிழ்ப்பை நடத்த முயன்றும் தோற்றார். "தோழர்களே, துரதிருஷ்டவசமாக எங்கள் இலட்சியத்தில் வெற்றி பெற இயலவில்லை - இப்போதைக்கு" என்று தொலைக்காட்சியில் பேசினார் சாவேஸ்.

"இப்போதைக்கு" என்ற அந்த ஒரு சொல் மக்கள் நினைவில் பதிந்திருந்தது. சிறைத்தண்டனை முடிந்து வெளியே வந்த பின்னர், 1998-ஆம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தலில் போட்டியிட்ட சாவேஸ் வெற்றி பெற்றார்.

### சாவேஸின் வெற்றிக்கு காரணம்:

நாட்டின் எண்ணெய் வளம் தந்த வருவாயை மக்கள் நலத்



துக்குப் பயன்படுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியதுதான் சாவேஸின் வெற்றிக்கு காரணம் ஆகும்.

2005-இலேயே நூறு விகித கல்வியறிவு சாதிக்கப்பட்டுவிட்டது. மக்களுக்கு உணவு உத்திரவாதம் செயப்பட்டிருக்கிறது. சுமார் 3 இலட்சம் பேருக்கு நிலம் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான கூட்டுறவுக் கழகங்கள் எல்லாத் துறைகளிலும் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

கியூபாவிலிருந்து சுமார் 25,000 மருத்துவர்கள் பணியிலமர்த்தப்பட்டு மக்களுக்கு தரமான மருத்துவம் இலவசமாக வழங்கப்படுகிறது. முதல் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரையில் கல்வி இலவசமாக வழங்கப்படுகிறது. வீடற்றவர்களுக்கு 5 இலட்சம் வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.

**வெனிசுலாவில் வீடற்றவர்களே இல்லை !**

வெனிசுலாவில் வீடற்றவர்களே இல்லை என்று கூறும் விதத்தில், சாவேஸின் ஆட்சியில் 6 ஆண்டுகளில் மேலும் 20 இலட்சம் வீடுகள் கட்டப்பட்டன. மற்ற உற்பத்தி சார்ந்த உழைப்புகளைப் போலவே பெண்களின் குடும்ப உழைப்புக்கும் ஊதியம் வழங்கப்படவேண்டும் என்று கூறி, குடும்ப உழைப்பில் ஈடுபடும் பெண்களுக்கு அரசு ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது.

ஏழை, எளிய உழைக்கும் மக்கள் மீது இயல்பிலேயே அவரிடம் ததும்பிய நேசத்தையும், உண்மையான அக்கறையையும் அவரது எதிரிகள்கூட மறுக்க முடிந்ததில்லை. சாவேஸ் மக்களுடன் நேருக்குநேர் உரையாடி, அவர்கள் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் "ஹலோ பிரசிடென்ட்" என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி இதற்கு சான்றாக அமைந்தது.

கல்வி, மருத்துவம் போன்றவற்றை மக்களின் அடிப்படை உரிமைகளாக சாவேஸ் மாற்றியதை எதிர்க்கவும் முடியாமல், இத்துறைகளிலிருந்து தனியார் முதலாளிகள் விரட்டப்பட்டதை ஏற்கவும் முடியாமல் தவித்தனர் அமெரிக்க சார்பு முதலாளிகள், "மாதம் 25,000 ரூபாய் (450 டாலர்) தருகிறோம். நீங்கள் விரும்பிய வண்ணம் தரமான சேவையை விலை கொடுத்து வாங்கிக் கொள்ளலாம்" என்று 'உங்கள் பணம் உங்களை கையில்' திட்டத்தைப் போலவே தனியார்மயத்தின் தந்திரத்தை கடைவிரித்துப் பார்த்தனர். மக்கள் மசியவில்லை.

**வெனிசுலா மருத்துவத் துறை:**

சாவேஸ் மருத்துவ சேவைகளைத் தேசியமயமாக்கினார். சாவேஸின் திட்டங்கள் வெனிசுலாவின் கஜானாவைக் காலியாக்கிவிடும் என்றும் பொருளாதார வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் என்றும் முதலாளித்துவ ஊடகங்கள் கூக்குரலிட்டுப் பார்த்தன.

வெனிசுலாவின் பொருளாதாரம் கடந்த பத்து ஆண்டுகளில் சராசரியாக 5.8 % வளர்ச்சியைக் கண்டது. மானியவெட்டு, மக்கள் மீது வரிவிதிப்பை அதிகப்படுத்துவது, தனியார்மயம் போன்ற வழிமுறைகள் மூலம்தான் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முடியும் என்ற சர்வதேச நிதி நிறுவனங்களின் தீர்வை சாவேஸ் பொய்ப்பித்தார்.

எண்ணெய், மின்சாரம், தொலைபேசி, சிமென்டு உற்பத்தி உள்ளிட்ட கேந்திரத் தொழில்துறைகளை பொதுச்சொத்தாக்குவது, மற்ற தென் அமெரிக்க நாடுகள் மற்றும் ஆசிய ஆப்பிரிக்க நாடுகளுடனான வணிகத்துக்கு முதன்மை முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் வணிகத்துக்கு அமெரிக்க-ஐரோப்பிய நாடுகளைச் சார்ந்திருப்பதிலிருந்து விடுவிப்பது, தென் அமெரிக்காவைத் தனது சுதந்திர வர்த்தக வலையத்துக்குள் கொண்டு வர முயன்ற அமெரிக்காவின் சதியை முறியடித்து, தென் அமெரிக்கக் கண்டத்தின் நாடுகளுக்கான தனி வர்த்தக வலையத்தை உருவாக்கியது சாவேஸ் நிகழ்த்திய சாதனைகளாகும்.

**சாவேஸ் நிகழ்த்திய சாதனைகள்:**

உலக வங்கிக்குப் போட்டியாக தென் அமெரிக்க நாடுகளுக்கான ஒரு பொது வங்கியை உருவாக்கியது, தேசிய எல்லைகளைக் கடந்து தென் அமெரிக்கக் கண்டம் என்ற முறையில் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு எதிராக நாடுகளை ஒன்றுபடுத்தியது.

வணிகம்-இலாபம் என்ற முதலாளித்துவ அளவுகோல்களை நிராகரித்து வெனிசுலாவின் எண்ணெய், எரிவாயுவை கியூபா



வுக்கும் பிற தென் அமெரிக்க நாடுகளுக்கும் மலிவு விலையில் வழங்கியது போன்றவையெல்லாம் மிகவும் குறுகிய காலத்தில் சாவேஸ் நிகழ்த்திய சாதனைகள் ஆகும்.

அமெரிக்க ஆதரவுடன் நடந்த ஆட்சிக் கவிழ்ப்பை எதிர்த்து வெனிசுலா மக்கள் கார்கஸ் நகரில் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் பின்னர் வெனிசுலா இராணுவத்தால் கைது செய்யப்பட்டிருந்த சாவேஸ், மக்களின் போராட்டத்தையடுத்து விடுதலை செய்யப்பட்டார்.

இவையனைத்தும் வெனிசுலாவின் முதலாளித்துவ அரசமைப்புக்கு உட்பட்டு, முதலாளித்துவக் கட்சிகளையும், பெரும் தனியார் முதலாளிகளையும், அவர்களால் அவர்களுக்காக உருவாக்கப்பட்ட அரசு இயந்திரத்தையும், 95% அவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஊடகங்களையும் வைத்துக்கொண்டே செயப்பட்ட சீர்திருத்தங்கள் ஆகும்.

**வெனிசுலா ஆட்சிக் கவிழ்ப்பு:**

மென்மேலும் மக்களிடம் செல்வதன் மூலமும், தங்களுடைய கோரிக்கைக்கான போராட்டத்தில் அவர்களையும் ஈடுபடுத்துவதன் மூலமும் சாவேஸ் அவற்றை எதிர்கொண்டிருக்கிறார்.

முதலாளித்துவத்தைக் கட்டுப்படுத்துகின்ற, அதிகாரவர்க்கத்தின் அதிகாரங்களைக் குறைத்து மக்களின் அதிகாரத்தை அதிகப்படுத்துகின்ற சட்டங்கள், திட்டங்களைக் கொண்டுவரும்போது, அவை குறித்துத் தேசம் தழுவிய வாக்கெடுப்பு நடத்தி முடிவெடுப்பது என்ற முறையின் மூலம், எதிரிகளை அரசியல் ரீதியில் பலமிழக்கச் செய்திருக்கிறார்.

தேர்ந்தெடுத்தவர்களைத் திருப்பி அழைக்கும் உரிமை என்பதை வெனிசுலாவின் அரசியல் சட்டத்தில் சாவேஸ்தான் அறிமுகப்படுத்தினார். சாவேஸ் ஒரு சர்வாதிகாரி என்ற அவதூறு பிரச்சாரத்தில் தொடங்கி ஆட்சிக்கவிழ்ப்பு வரையில் அனைத்தையும் முயன்று பார்த்த அமெரிக்கா திருப்பி அழைக்கும் உரிமையையும் பயன்படுத்திப் பார்த்தனர். அதிலும் தோற்றனர்.

**சாவேஸின் உற்ற தோழர் நிக்கோலஸ் மாதுரோ:**

வெனிசுலாவின் புதிய அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சாவேஸின் உற்ற தோழர் நிக்கோலஸ் மாதுரோ.

சாவேஸ் தன்னை ஒரு சோசலிஸ்டு என்றும் கிறித்தவர் எனறுமே சொல்லிக் கொண்டார். அவருடைய கட்சி பல்வேறு விதமான குட்டி முதலாளித்துவ, தேசியவாத, சோசலிச சக்திகளின் கூட்டணியாகவே இருந்தது.

19-ம் நூற்றாண்டைச் சேர்ந்த வெனிசுலாவின் விடுதலைப் போராளியான சைமன் டி பொலிவாரையே தனது வழிகாட்டியாக அவர் அறிவித்துக் கொண்டிருந்தார்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு, தென் அமெரிக்க ஒற்றுமை, சகோதரத்துவம் ஆகியவை இணைந்த, கம்யூனிசத்தின்பால் பெருமதிப்பு கொண்ட ஒரு கண்ணோட்டம் சாவேஸை வழிநடத்தியது.

தான் படைக்க விரும்புவது 21-ஆம் நூற்றாண்டின் சோசலிசம் என்று அவர் கூறிக்கொண்டபோதும், அதனை அவர் விளக்கவுமில்லை. ரசிய - சீன சோசலிசங்களுக்கு எதிராக நிறுத்தவுமில்லை.

"சாவேஸ் ஒரு புரட்சிகரமான தேசியவாதி. அவருடைய ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியத்தின் புரட்சிகரமான தன்மை அவரை சோசலிசத்தை நோக்கித் தள்ளிக்கொண்டே இருந்தது. அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராக, தேசிய எல்லை கடந்து தென் அமெரிக்க கண்டத்தை ஒற்றுமைப்படுத்த முயன்ற பொலிவார், ஜோஸ் மார்டி ஆகியோர் விதைத்த மரபு சாவேஸின் பின்புலமாக அமைந்தது" என்று மதிப்பிடுகிறார் அஜாஸ் அகமது.

தனது கொல்லைப்புற சோதனைச்சாலையாக தென் அமெரிக்க நாடுகளைப் பயன்படுத்தி வரும் அமெரிக்கா, 1970-களில் தனது கைப்பாவை ஆட்சிகளைப் பல நாடுகளில் நிறுவியதுடன், 1980-களிலேயே தனியார்மய தாராளமயக் கொள்கைகளை அந்த நாடுகளில் சோதிக்கத் தொடங்கியது.

இதன் விளைவாக, 1980-களின் இறுதியில், ஆசிய நாடுகளில் புதிய தாராளவாதக் கொள்கை தீவிரமாக கடைவிரிக்கப்பட்ட காலத்தில், அங்கே "ஏகாதிபத்தியங்களின் கடையை மூடுவதற்கான" மக்கள் கலகங்கள் வெடிக்கத் தொடங்கி விட்டன.

**ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆளுமை:**

இந்தப் பின்புலம் வலிமையானதொரு கம்யூனிஸ்டு கட்சியை அதிகாரத்துக்குக் கொண்டுவரும் அளவுக்கு மக்களைப் புரட்சிகரமான மாற்றத்துக்கு உள்ளாக்கவில்லை என்ற போதிலும்,



சாவேஸ் என்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆளுமையைத் தோற்றுவித்திருக்கிறது.

"நானே சாவேஸ்" என்ற கதறியபடியே அவரது உடலைப் பின்தொடர்ந்து செல்லும் வெனிசுலாவின் உழைக்கும் மக்கள், சாவேஸ் தங்களைக் காலத்தால் முந்திக் கொண்டுவிட்டதைத் தம் கண்ணீரால் உணர்த்தியுள்ளனர்.



# செம்மணி

செம்மணித்தாயே!
நீ கண்ணீர்விட்டுக் கலங்கும்
இந்நேரம்
அருகில்லா உறவுகளானோம்.
“இல்லையே அவர்களிப்போ” எனச்
சொல்லி அழுதிருப்பாய்.
உன்னில் உறவுகளைப் புதைத்த குழிமீது
புல்லும் முளைத்திருக்கும்.
உள்ளே வந்திருப்பின்
புதைந்திருக்க வேண்டியோர் பாடுகிறோம்.
ஆட்காட்டியின் அவலக்குரலையும் மீறிக்
கேட்கிறதா எம்பாடல்?





# சிலரை அடித்து கொன்றார்கள் சிலரின் தலையைச் சீவினார்கள் சிலரை மொத்தக் குடும்பமாகவே கொன்றார்கள்!

## செம்மணி புதைகுழி விசாரனையில் கோப்ரல் ராஜபக்ச அளித்த அதிர்ச்சி வாக்குமூலமச் சுவடுகள் – 19.06.1996



**செம்மணி புதைகுழி விசாரணையில் சிப்பாய் தரும் அதிர்ச்சி வாக்குமூலம் செம்மணியில் எலும்பக் கூடுகள் மீட்பு. மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன. – 19.06.1999**

சர்வதேசமும் எதிர்பார்த்திருந்த யாழ். குடாவின் செம்மணி புதைகுழிகள் திட்டமிட்டபடி 16.06.1999 திகதி அகழ்வுக்கு உட்படுத்தப்பட்டன. கிருஷாந்தி குமாரசாமி பாலியல் வல்லுறவுக் கொலை வழக்கின் முதலாவது எதிரியான, மரண தண்டனை விதிக்கப்பட்ட சிப்பாய் சோம ரட்ண ராஜபக்ச இப்புதைகுழிகளை இனங்காட்டினார். அவர் இனம் காட்டிய ஒரு புதைகுழி தோண்டப்பட்டபோது இரு மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.



இங்கே தோண்டுங்கள் – நீதிபதி மயில்வாகனம் இளஞ்செழியன் இடத்தைச் சுட்டிக்காட்டுகின்றார்

16ம் திகதி காலை எலும்புக்கூடுகள் புதைகுழியில் காணப்பட்டதும் அகழ்வுகள் இடைநிறுத்தப்பட்டன. மீண்டும் மறு நாள் காலை அகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டு அக்குழியில் இருந்து இரு எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டதுட்ன. அக்குழியில் இருந்து நீளக் காற்சட்டை, ரீ சேட் ஆகியவற்றின் பாகங்களும் கண்டெடுக்கப்பட்டன. இதனையடுத்து புதைகுழியைத் தோண்டும் பணியை இடைநிறுத்துவதாக யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி எம் இளஞ்செழியன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிக்கையை எதிர்வரும் 15ம் திகதிக்கு முன்னர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி, அதன்பின்னர் புதைகுழியைத் தோண்டுவதற்கான அடுத்த திகதி அறிவிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். தற்பொழுது புதைகுழிகள் தோண்டும் பணி இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. புதைகுழி அகழ்வுகளின் நிலை இவ்வாறிக்க, புதைகுழிகளை இனங்காட்டுவதற்காக நீதிமன்றத்திற்கு அழைத்துவரப்பட்ட ராஜபக்ச அளித்த சாட்சியத்தில் பல அதிர்ச்சிகரமான விடயங்கள் வெளிவந்துள்ளன. யாழ். அரியாலைப் பகுதியிலும் பல புதைகுழிகள் இருப்பதாகவும் அவ்வாறான 18 புதைகுழிகளில் பத்தினை தன்னால் தெளிவாக அடையாளம் காட்ட முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.



சர்வதேச கண்காணிப்பாளர்கள் சூழநிற்கத் தோண்டப்படுகின்றன



எம் மண்ணில் துள்ளித்திரிந்த எம் உடன்பிறப்புகள் செம்மணிச் சகதியிலிருந்து எலும்புக்கூடாக...




### அரியாலை முகாமில் நடந்தகோரம்

நான் அரியாலை முகாமில் கடமையாற்றிய காலத்தில் பல இளைஞர்களும் யுவதிகளும் விசாரணைக்காக அங்கு கொண்டு வரப்பட்டு கொடுமையான சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள் எனவும் குறிப்பிட்டிருக்கிறார். சிலரது தலையை வெட்டியும். சிலரை அடித்தும் இக் கொலைகள் நிகழ்ந்துள்ளன. மேலும் பலர் குடும்பம் குடும்பமாகவும் கொலை செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கொலை செய்யப்பட்டவர்களை புதைக்கும் வேலையில் படை அதிகாரிகளால் தான் ஈடுபடுத்தப்பட்டதாகவும் அவர் அப்போது குறிப்பிட்டார். ஆனால் தான் சிறையில் இருந்த காலத்திலே செம்மணிப் புதைகுழிப் பகுதியில் மாற்றங்கள் செய்யப்பட்டதாக தான் அறிந்து கொண்டதாகவும் அவ்வாறு மாற்றங்கள் ஏதாவது செய்யப்பட்டிருப்பின் தான் அதற்குப் பொறுப்பாளர் அல்ல எனவும் தெரிவித்தார்.

புதைகுழியை இனங்காட்டுவதற்காக கடுமையான பாதுகப்புடன் ராஜபக்ச நீதிமன்றம் அழைத்துவரப்பட்டார். விசாரணைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர், செம்மணிப் புதைகுழியை தோண்டுவதற்காக சிறீலாங்காவின் இரகசியப் பொலிஸ் பணிப்பாளர் கஜநாயக்கா நீதிமன்றத்தில் மனு ஒன்றினை தாக்கல் செய்த போதிலும் அம்மனுவினை நிராகரித்து நீதிபதி நீதிமன்றத்தின் நடைமுறைக்கு புறம்பான அனுமதியை தாம் வழுங்கமுடியாது எனவும், ராஜபக்சவுடன் பொலிசார் சென்றுதான் புதைகுழிகளை தோண்டலாம் எனவும் தெரிவித்ததை அடுத்து ராஜபக்சவை அழைத்துக் கொண்டு செம்மணிப் பகுதிக்கு பொலிசாரின்குழு சென்றது. விசாரணைகள் நடந்த வேளை யாழ். நீதிமன்றத்தை சுற்றியும் யாழ். நாகர், செம்மணி, அரியாலை ஆகிய பகுதிகளில் ஏராளாமன சிறீலங்கா படையினரும் பொலிசாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.



நடந்த கொடுமைக்கு இன்னும் ஆதாரம்காண (?) கொழும்புக்கு அனுப்பும் முயற்சி

செம்மணிப் புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட இரு எலும்புக்கூடுகளும் கடந்த 18ம் திகதி உறவினர்களால் அடையாளம் காணப்பட்டன. இவ்விரு எலும்புக்கூடுகளுக்கும் உரியவர்கள் அரியாலை செம்மணி வீதியிலுள்ள வாகனத் திருத்த நிலையத்தில் பணிபுரிந்த இளைஞர்களுடையது எனத் தெரிய வந்துள்ளது. யாழ். அல்வாய் மேற்கை பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கில் திருமணம் செய்தவரான இராசையா சதீஸ்குமார் (23), நல்லூரைச் சேர்ந்த மகேந்திரன் பாபு (21) ஆகியோரை அடையாளம் காணப்பட்டவர்களாவர். இவ்விருவரும் வேலைக்காக வாகனத் திருத்த நிலையத்திற்கு சென்றவேளை, 1996ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 19ம் திகதி காணாமல் போயிருந்தனர். சதீஸ்குமாரது எலும்புக் கூட்டினை அவரது மனைவியான சாந்தி அடையாளம் காட்டினார். குறித்த எலும்புக் கூட்டுடன் காணப்பட்ட மேற்சட்டையானது தனது கணவருடையது என இவர் அடையாளப்படுத்திய அதே வேளை, சதீஸ்குமார் பணிபுரிந்த வாகனத்திருத்த நிலையத்தின் உரிமையாளரான ரவியும் ஆடைகளை அடையாளம் காட்டினார். நிலையத்தில் பணிபுரியும்போது அடிப்பாகம் கிழிந்திருந்த நீளக்காற்சட்டையை சதீஸ்குமார் அணிபவர் எனவும், அக் காற்சட்டையில்




காட்ட ரவி அதனையும் உறுதிப்படுத்தினார்.

### மேலும் புதைகுழிகள் உண்டு – மற்றுமோர் சிப்பாய் தகவல்

செம்மணி புதைகுழிகளை சிப்பாய் சோமரட்ண ராஜபக்ச இனம்காட்டியதை இடுத்து கிருஷாந்தி குமாரசாமி பாலியல் வல்லுறவு கொலைவழக்கின் மரண தண்டனைக் கைதியான இன்னொரு சிப்பாய் ரி.எம். ஜெயதிலக என்பவர் செம்மணிப் புதைகுழிகளைப்போல மேலும்பல புதைகுழிகள் நெடுங்குளம் சுற்றாடல் பகுதிகளில் இருப்பதாகத்தகவல் தெரிவித்துள்ளர்.

நெடுங்குளம், தபால்கட்டைச்சந்தி, பொட்டுக்கட்டை பிள்ளையார் கோவிலடி ஆகிய பகுதிகளிலேயே இப்புதைகுழிகள் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கண்டி வீதியிலுள்ள பாழடைந்த கிணறு ஒன்றில் 25 முதல் 30 வரையிலான சடலங்கள் போடப்பட்டு அக்கிணறு மூடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த இவர் அச் சடலங்களில் ஒரு தம்பதியரும் அடங்குவார் எனவும் குறிப்பிட்டுள்ளார். இத் தம்பதியரில் மனைவி மீது தனது அதிகாரி ஒருவர் பாலியல் வல்லுறவினை மேற்கொண்டதாகவும் அதன் பின்னரே அவர்கள் கொல்லப்பட்டு கிணற்றுக்குள் போடப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இவர் தெரிவித்த விபரங்கள்யாவும் தேசிய மனித உரிமைகள்

## செம்மணியின் நிலவரம் பற்றி:

***யாழ். இராணுவத் தளபதி வெளியிட்ட அவிப்பிராயம்***
***நாங்கள் இவ்வளவு தூரத்திற்கு (இவ் விசாரணையில்) வந்துள்ளோம்.***
***இது எங்குவரை போகின்றது எனப்பார்ப்போம்.***
***இத் தண்டிக்கப்பட்ட மனிதன் (சோமரட்ண) பல விடயங்களைச் சொல்கின்றான்.***
***என்ன நடக்கிறது என்று பார்ப்போம்.***

வாகனத்தின் கொழுப்பு படிந்திருந்ததையும் சுட்டிக்காட்டிய ரவி, புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட உடையின் ஏனைய பாகங்களிலும் அதனை உறுதிப்படுத்தினார். அத்துடன் சதீஸ்குமார்



எடுக்கப்பட்ட எலும்புக்கூடு என் செல்வத்தினுடையதா..? ஆற்றாமைதாங்காது மயங்கிவிழுந்த அன்னை!!

அடிக்கடி வெற்றிலை சாப்பிடுவதால் அவரது பற்களில் படிந்திருந்த வெற்றிலைக்காவியையும் ரவி அடையாளப்படுத்தினார்.

காணாமல் போன சதீஸ்குமாருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். அடுத்ததாக அடையாளம் காணப்பட்ட மகேந்திரன் பாபுவினது எலும்புக்கூட்டை அவரது தந்தை அடையாளம்

ஆணைக்குழுவிற்கும் கிடைத்துள்ளது.

### எலும்புக்குடுகளை செய்தியாளர்கள் பார்க்கத்தடை

புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளை செய்தியாளர்கள் பார்ப்பதற்கும், நிழற்படம் பிடிப்பதற்கும் அனுமதிக்கப்படவில்லை. கொழும்பிற்கு கொண்ட செல்வதற்கென அவை உடனடியாக பொதி செய்யப்பட்டன. சிறீலங்காவின் அரச சட்டத்தரணி யசந்த கோதகொட இவ் எலும்புக்கூட்டினை பார்வையிடுவதற்கு பொது மக்களுக்கு அனுமதி அளிக்கப்படும் எனவும் தெரிவித்தார். இதனையடுத்து கடந்த 18ம் திகதி இவ்விரு எலும்புக்கூடுகளும் அடையாளம் காட்டப்பட்டதன் பின்னர், மீண்டும் பொதி செய்யப்பட்டு விமான மூலமாக கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்டு பகுப்பாய்வுக்காக(!) ருகுணு பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புதைகுழிகளை அடையாளம் காட்டிய சோமரட்ண ராஜபக்சவும் கொழும்பிற்கு மீண்டும் கொண்டு செல்லப்பட்டுள்ளார். முன்னர் அவர் கண்டி போகம்பறை சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்தார். ஆனால் இம்முறை பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர் வேறு இடத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### மகனை இழந்த தந்தை



சிறீலங்கா இராணுவத்தால் கைது செய்து கொண்டு செல்லப்பட்டு காணாமல் போயுள்ள தனது மகனை இழந்து நிற்கும் தந்தையான 62 வயது நிரம்பிய பரமநாதன் செல்வராசா, செம்மணி புதைகுழி தோண்டும் விடயம் பற்றி தெரிவித்த கருத்து, “எனது மகனின் உடல் செம்மணியில் கண்டெடுக்கப்பட்டால் நான் உடைந்து போய் விடுவேன். எனினும் அவை அங்கு காணப்படாவிட்டாலும் உடைந்து விடுவேன். என் மகன் உயிருடன் திரும்பிவந்தால் மாத்திரமே என்னால் மகிழ்ச்சியடைய முடியும்.”

நன்றி: ஈ.மு



## கோப்ரல் ராஜபக்சவின் சாட்சியம்

*(யாழ். நீதவான் முன்னிலையில் புதைகுழிகளை அடையாளம் காட்ட முன்னர் அறிவிக்கப்பட்ட சாட்சியம்)*

* மக்கள் புதைக்கப்பட்ட 10 இடங்களை என்னால் காட்டமுடியும்.

* நான் வெறுமனவே உடல்களைப் புதைத்தேன். எனக்கு பாதிக்கப்பட்டவர்களின் அடையாளம் (யார் என்பது) தெரியாது.

* 4 உயர் அதிகாரிகளே இக்கொலைக்கு காரணம்.
.. நான் உண்மையை வெளியே சொல்ல முற்பட்டதன் காரணம், நான் ஈடுபடாத கொலை ஒன்றிற்காக நான் தண்டிக்கப்பட்டேன். கொலைகாரர்கள் வீட்டில் உள்ளனர். நான் சிறையில் உள்ளேன்.

* செம்மணியைத் தவிர உடல்கள் புதைக்கப்பட்ட வேறு இடங்களையும் என்னால் காட்ட முடியும். அரியாலை கிழக்கிலும் பூம்புகாரிலும் உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன.

* இளநிலை அதிகாரிகளின் கடமை, உயர் அதிகாரிகள் தரும் கட்டளைகளை நிறைவேற்றுவது. நான் உடல்களை புதைக்குமாறு உத்தரவிடப்பட்டேன். இவை கிருஷாந்தியுடையதா அல்லது எவரினதோ என்பது பற்றி புதைக்கும்போது நான் அறியேன்.

* ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு கணவனும் மனைவியும் வீட்டிலிருந்து திரைப்படம் பார்த்துக் கொண்டிருந்தபோது கைதுசெய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் கொல்லப்பட்டனர்.

* நான் இந்நாட்டின் இராணுவத்தினர் அனைவரையும் குற்றம் சாட்டவில்லை. இச் செயல்களில் ஈடுபட்டவர்களை மட்டுமே குற்றம் சாட்டுகின்றேன்.

* நான் 10 புதைகுழிகளையும், என் சக குற்றம் சாட்டப்பட்டவர் 5 புதைகுழிகளையும் அடையாளம் காட்டுவார். ஆனால் 3 வருடங்களின் முன் இச் சம்பவங்கள் இடம்பெற்றமையால் அவ் இடங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு நான் பொறுப்பாளியல்ல.


36ஆம் ஆண்டு
வீரவணக்கம்
36th Year
Veeravanakkam
SEPT
26
2023
"மக்கள் புரட்சி வெடிக்கட்டும்
சுதந்திர தமிழீழம் மலரட்டும்"
ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன்
இராசையா பார்த்தீபன் [ ஊரெழு, யாழ்ப்பாணம் 27.11.1963–26.09.1987]
Lt. Col. Thileepan
இந்திய அரசிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து, தமிழ் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை இந்திய அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் எனக்கேட்டு சாகும் வரை உண்ணா நோன்பு [15.09.1987–26.09.1987] இருந்து ஈகைச் சாவடைந்தார்.
Martyr died on a hunger strike till death (15.09.1987-26.09.1987) demanding five demands from the Government of India to fulfill the promises made to the Tamil people.
லெப். கேணல் குமரப்பா
லெப். கேணல் புலேந்திரன்
இந்திய – சிறீலங்கா சமாதான ஒப்பந்த காலப்பகுதியில்
கடலில் பயணம் செய்த தளபதிகளை சிறீலங்கா கடற்படை கைது
செய்து கொழும்பிற்கு கொண்டுசெல்ல முற்பட்டவேளை
05.10.1987 அன்று சயனைட் உட்கொண்டு வீரச்சாவை தழுவிக்கொண்ட
லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட்ட பன்னிரு வேங்கைகளுக்கும்
எமது 36ஆம் ஆண்டு வீரவணக்கம்
2ம் லெப். கஸ்தூரி
வீரவேங்கை ரஞ்சினி
வீரவேங்கை தயா
2ம் லெப். மாலதி
10.10.1987 அன்று கோப்பாய் பகுதியில்
இந்தியப் படையுடன் நடந்த மோதலில் முதல் பெண் மாவீரரான 2ம் லெப். மாலதி
மற்றும் அவருடன் 2ம் லெப். கஸ்தூரி, வீரவேங்கை ரஞ்சினி, வீரவேங்கை தயா
ஆகிய மாவீரர்களுக்கும் எமது 36ஆம் ஆண்டு வீரவணக்கம்
தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் 10
கேணல் சங்கர்
26.09.2001 அன்று
முல்லைத்தீவு ஒட்டுசுட்டான்
வீதியில்
சிறீலங்கா ஆழ ஊடுருவும்
படையினரால் நடாத்தப்பட்ட
கிளைமோர் தாக்குதலில்
வீரச்சாவடைந்தார்.
இம் மாவீரருக்கு எமது
22 ஆம் ஆண்டு
வீரவணக்கம்
வைத்தியலிங்கம்
சொர்ணலிங்கம்
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் The thirst of the Thamils is the Homeland of Thamileelam
சங்கத்தமிழ்